# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு
[பத்திரிகாசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.]

தொகுதி - ௯ | சுக்கில - ஐப்பசி௴ | பகுதி - ௧0

600 008

முருகன் துணை.

போதரித்த மடியவர்தம் பிறப்பை யொழித்துப் பெருவாழ்வும்
பேறுங் கொடுக்க வரும் பின்னைப் பெருமானென்னும் பேராளா
சேரா நிருதர் குலகலகா சேவற் கொடியாய் திருச்செந்தூர்த்
தேவா தேவர் சிறைமீட்ட செல்வா வென்றுன் திருமுகத்தைப்
பாரா மகிழ்ந்து முலைத் தாயர் பரவிப் புகழ்ந்து விருப்புடனப்
பாவா வாவென் றுனைப்போற்றப் பரிந்து மகிழ்ந்து வரவழைத்தால்
வாராதிருக்க வழக்குண்டோ வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை வள்ளி கணவா வருகவே.

## பத்திரிகாசிரியர் முன்னுரை

### 'மித்திரன்' காரியாலயம்

நமது 'மித்திரன்' காரியாலயம் தற்போது சென்னை மண்ணடிக்கடுத்த பவழக்காரத் தெருவில் 2/19 இலக்கமுள்ள இல்லத்துக்கு மாற்றப்பட்டிருப்பதை அன்பர்களுக்கு மகிழ்வுடன் தெரிவிக்கின்றோம். நமது தலைச்சங்கத்துக்கும் 'மித்திரன்' காரியாலயத்துக்கும் வேலை பெருகப் பெருகத் தனியிடமும் தனிச் சிப்பந்திகளும் தேவையாயிருக்கின்றது. மேலும், கிராமாந்திரங்களினின்று சென்னை நகர்க்கு அலுவலாக வரக்கூடும் நமது இனத்தவர்கள் தமது சாமான்களைப் பத்திரமான இடமொன்றில் வைத்துவிட்டுத் தமது அலுவல்களைக் கவனித்துக்கொண்டு தங்கியிருக்க ஒரு தனி விடுதி வேண்டுமென்பதை நாம் நெடுநாளாக உணர்ந்திருந்தும், அத்தகைய தனி விடுதி யொன்றினை யேற்படுத்த வேண்டுமென்னும் முயற்சி இன்னும் முற்றும் சித்தி பெறவில்லையாயினும், நமது 'மித்திரன்' புதுக் காரியாலயத்தில் அவர்களுக்குத் தங்கியிருக்கக் கூடுமான வசதிகளை யேற்படுத்திக் கொடுக்க இயலுமென நம்புகின்றோம். முக்கியமாக ரங்கோனுக்கு வியாபார நிமித்தமாகப் போய்வரும் நம்மவர்களுக்கு இங்கு தங்க இடமிருக்குமென நம்புகிறோம். இதோடு, நமது சங்கத்தின் ஆதரவில் கல்வி பயிலும் கலாசாலை மாணவர்களும் அதில் இருக்கலாம். வெளிப் பார்வைக்கு நமது காரியாலயம் டாம்பீகமாக இராதெனினும், ஆரம்ப ஏற்பாட்டிற்கு இது போதுமென்றே நம்புகின்றோம். சங்கத்துக்குப் பண வருவாயும் குலாபிமானிகளின் பொருளுதவியும் பெருகப் பெருக ஒரு அழகான தனி விடு

நிலைச் சொந்தத்தில் அமைத்துக்கொள்ளலாம். அதுவரை இத்தகைய குடிக்கூலி விடுதிகளோடுதான் நாம் திருப்தியடையவேண்டும். இக்காரியாலயம் எமது தோழரும், தலைச்சங்கத்துக்கு எம்மோடு கூட்டு அமைச்சரும், 'மித்திரன்' துணையாசிரியருமாகிய திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியாரவர்களைத் தற்போது மானேஜராகக் கொண்டு நடைபெற்று வருகின்றது. திரு. முதலியார் அவர்களுட் மேற்படி காரியாலயத்திலேயே உறைகின்றனா. சென்னைக்கு வரும் நமது குலாபிமானிகள் நமது காரியாலயத்துக்கும் வந்து பார்த்துச் செல்லுமாறு வேண்டிக்கொள்ளப் பெறுகின்றனர்.

### கல்விநிதிச் சீட்டு.

நமது கல்விநிதிச் சீட்டு குலுக்கப்பெறும் தேதி தள்ளிவைக்கப்பட்டிருக்கும் விஷயத்தினைச் சென்ற மாதம் 'மித்திர'னில் குறிப்பிட்டிருக்கோம். இவ்விதம் தள்ளிவைக்கப்பெற்றது நமது குலாபிமானிகள் பலரின் வேண்டுகோட்களுக் கிணங்கியே யாகும். பழைய ஏற்பாட்டின்படி சீட்டினைக் குலுக்க நிர்ணயித்திருந்த காலம் வெகு குறைவென்றும், இன்னும் சில மாதங்கள் பொறுத்துச் சீட்டினைக் குலுக்கினுல் தம்மால் பல சீட்டுப் புத்தகங்களை விற்றுத்தர இயலுமென்றும், அநேக குலாபிமானிகள் இந்தியாவிலிருந்தும் வெளித் தேசங்களிலிருந்தும் மீண்டும் மீண்டும் தெரிவித்தபடியால் அவர்கள் ஆர்வத்தையனுசரித்தே சீட்டுக் குலுக்கும் தேதி தள்ளிவைக்கப்பட்டிருக்கின்றது. இவ்விஷயத்தைச் சென்ற மாதத்திய மித்திரன்மூலம் உணர்ந்த அநேக கனவான்கள் சீட்டுக் குலுக்கும் தேதி தள்ளிவைத்திருப்பதைக் குறித்து அதிகமும் சந்தோஷப்படுவதாகவும், அதனிடையில் தம்மாலான முயற்சிகளைச் செய்து ஆயிரக்கணக்கான சீட்டுப் புத்தகங்களை விற்றுத் தருவதாகவும் தெரியப்படுத்தியிருக்கின்றனர். விற்பனையாகும் சீட்டுகளின் முழுத் தொகைகளையும் 31-12-29-க்குள் நமது 'மித்திரன்' காரியாலயத்துக்கு வந்து சேரும்படி அனுப்பவேண்டுமென்றும், 26-1-30-ல் காஞ்சிமா நகரில் நடைபெற இருக்கும் நம்மவர் இரண்டாவது மகாநாட்டில் தலைவர்கள் முன்னிலையில் சீட்டுக்குலுக்கிப் பரிசுகள் தீர்மானிக்கப் பெறுமென்றும் தற்போது ஏற்பாடாயிருக்கிறது. இவ்வேற்பாடு பல அனுகூலங்களையும் சவுகரியங்களையும் உத்தேசித்துச் செய்யப்பட்டிருப்பதால் சீட்டுகளை நம்மவரிடையே மட்டுமன்றி மற்றவரிடையிலும் விற்பனைசெய்து பல்லாயிரக்கணக்கான தொகைகளை செங்குந்தர் கல்விநிதிக்குச் சேமித்துத் தருமாறு நமது குலாபிமானிகளை வேண்டிக்கொள்ளுகின்றோம். நமது 'மித்திர'னுக்கு இணையான ஜாதிப் பத்திரிகை இல்லையென்றும், நமது தலைச்சங்கத்துக்கு இணையான ஜாதிச் சங்கம் இல்லையென்றும், நமது முதல் மகாநாட்டுக்கு இணையான ஜாதி மகாநாடு இல்லையென்றும் பெரியோர்கள் கூறுகின்றனர். நமது குலாபிமானிகள் முன்னின்று முனைவார்களானல் நமது கல்விநிதிச் சீட்டுக்கு இணையான சீட்டு இல்லையென்ற புகழை நம்மினத்தவர்க்குத் தேடித்தரலாம். நம்மரபின் ஒவ்வொரு குடும்பத்தினரும் தத்தம் குடும்பத்திலுள்ள ஒவ்வொரு நபருக்கும் ஒரு சீட்டு விதம் வாங்கித்தீருவதென்னும் கொள்கையோடு வாங்கத் தலைப்பட்டால் ஒரு நாளில் நமது கல்விநிதிக்கு மூன்று லக்ஷம் ரூபாய் சேர்ந்துவிடும். சீட்டுப் புத்தகங்கள் வேண்டுவோர் நமது காரியாலயத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

### இவ்வருஷத்திய உபகாரச் சம்பளங்கள்

நமது கல்விநிதிச்சீட்டு வெகுசிறப்பாக நடைபெறுமென்னும் நம்பிக்கையினுலும், அதனின்றும் நமது கல்விநிதிக்குப் பெரும்பொருள் மிஞ்சுமென்னும் நம்பிக்கையினுலும் இவ்வருஷம் பல ஜில்லாக்களிலும் உயர்தரக்கல்வியைப் பயின்றுவரும் இருபத்தைந்து செங்குந்த ஏழை மாணுக்கர்களுக்கு (சென்ற வருஷத்தில் விட பதின்மர் அதிகம்) உபகாரச் சம்பளமளிக்க நமது தலைச்சங்கம் சென்ற நிருவாக சபைக் கூட்டத்தில் தீர்மானித்திருக்கின்றது. இவர்களுள் சிலருக்குச் சாப்பாட்டுக்கு உதவி செய்யவும் நமது சங்கம் முன் வந்திருக்கின்றது. இவர்களுள் மூவர் உயர்தரக்கல்வியை நாடும் செங்குந்த பெண்மணிகள் என்பதையும் அன்பர்கள் கவனிப்பாராக. இத்தருமமானது நீடித்து நிலைத்திருக்கவே நாம் இப்போது கல்விநிதிகளைத் திரட்டுகின்றோம். குலாபிமான மிகுந்த கனவான்கள் கல்விநிதிச் சீட்டுகளை வாங்குவதோடு தமது நிதிக்கு நன்கொடையாகப் பெருந் தொகைகளை வழங்கப் பின் வாங்கார்களென்றே நம்புகின்றோம். அப்படி வழங்க விருப்பமுள்ளவர்கள் தற்போதே வழங்குவாராயின் அவர்கள் உதவி காலத்தினுற் செய்த உதவியாகும். இத்தகைய சமயோசித ஒத்தாசைகளினுல் தான் நமது சங்கத்தின் கல்வித்தானமாகிய தருமம் ஆழ வேரூன்றி நிற்கும். இதை நிறைவேற்றி வைப்பது குலாபிமானிகள் கடமையாகும். குலாபிமானிகளே! நமது கல்விநிதிக்குப் பொருள் வழங்குங்கள்; வழங்குங்கள்; வழங்குங்கள்.



### நமது தலைவர் வருகை.

நமது முதல் மகாநாட்டின் தலைவரும், நமது தலைச்சங்கத்தின் தலைவருமாகிய திருவாளர் ஆ. வே. முத்தையப முதலியார் பி.ஏ., பி.எல். அவர்கள் பிரான்சிலிருந்து இம்மாதம் (அக்டோபர்௴) 2-ம் தேதி புதுவை வந்து சேர்ந்திருக்கின்றனர். அவர் மேல் நாடுகளில் நெடும் பிரயாணஞ்செய்து விட்டு ஆரோக்கிய திடகாத்திரராக நம்மிடையே திரும்பிவந்து நமக்குப் புத்துணர்ச்சியையும் நல்லறிவையும் மகிழ்ச்சியையுந் தருவதற்குத் துணைபுரிந்தஎல்லாம் வல்ல முழுமுதற்கடவுளை வழுத்துகின்றோம். தமது அனுபவங்களைக் குறித்து நமது மித்திரனில் அவர்கள் கூடிய சீக்கிரம் கட்டுரைகள் வரைந்து வெளியிடுவார்களென்று நம்புகின்றோம்.

### நமது வெற்றி.

நமது செங்குந்த இயக்கம் தோன்றுதற்கே காரணமாயிருந்தவரும், செங்குந்த மித்திரனைத் தோற்றுவித்தவரும், நமது தலைச்சங்கத்திற்கு உயிர் நாடி போன்றவருமான திருவாளர் தி. நா. சபாபதி முதலியாரவர்களும, சேலத்தில் சமூக முன்னேற்றத் துறையில் உழைப்பவரும் பெருந்தக வியாபாரியுமான திரு. S. P. பொன்னுசாமி முதலியாரவர்களும் சமீபத்தில் நடைபெற்ற தத்தம் ஊர்களின் முனிசிபல் எலக்ஷனில் வெற்றி பெற்றமை அறிந்து பெரிதும் மகிழ்கின்றோம்.

### பால்ய விவாகத் தடை மசோதா நிறைவேறிவிட்டது

திரு. ஹரிபிலாஸ் சாரதாவினுல் கொண்டுவரப்பட்டு நெடுநாளாக இந்தியா சட்ட சபையில் விவாதிக்கப்பட்டு வந்த பால்ய விவாகத் தடை மசோதா 23-9-29-ந்தேதி இந்தியா சட்டசபைக் கூட்டத்தில் பெரும்பாலான வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது கேட்டு மிக மகிழ்கின்றோம். இம்மசோதா நிறைவேறச் சாதகமாக 67 அங்கத்தினர்களும், பாதகமாக 14 அங்கத்தினர்களும் ஓட்டு தந்தனர். இம்மசோதா அரசாங்க சபையில் யாதொரு விவாதமுமின்றி நிறைவேற்றப்பட்டதோடு அரசப்பிரதிநிதியும் தமது அங்கீகாரந் தந்து விட்டாரென்பது இந்திய மக்களில் பெரும்பாலோர்க்குப் பெருத்த மகிழ்ச்சி தருமென்பதில் ஐயமில்லை. இம்மசோதா 1930ம் ஆண்டு ஏப்ரல் மாத முதல் அமுலில் வரும்.

இம்மசோதாப்படி இந்தியர்கள் தம் பெண் மக்கட்குப் பதினன்கு வயதிற்கு முன்பும், ஆண் மக்களுக்கு 18 வயதிற்கு முன்பும் விவாகம் செய்யலாகாது. மீறி விவாகம் புரிவோர் ஒரு மாத வெறுங்காவல் தண்டனை யடையவேண்டும். இம்மசோதாவை அமுலுக்குக் கொண்டுவருவதில் பலவித கஷ்டங்கள் நேரக்கூடுமென்றாலும் பிற்காலத்தில் இம்மசோதாவை இப்பொழுது எதிர்க்கும் சில வைதிகர்களுங்கூடப் போற்றுவரென்றே எண்ணுகின்றோம்.

### செய்கோன் நன்கொடை.

பல்லாயிர மைல்களுக்கப்பாலுள்ள செய்கோனிலுள்ள அன்பரொருவர் நமது கல்விநிதிக்கு ரூபாய் ஐம்பது அனுப்பிவைத்துத் தமது பெயரினை வெளியிட வேண்டாமெனத் தெரிவித்துள்ளார்கள். செய்கோனில் நாலைந்து செங்குந்த குடும்பங்களே உள்ளன. இத்தகைய இடத்தில் ஏராளமான கல்விநிதிச் சீட்டுப் புத்தகங்கள் விற்றனுப்பியும், கல்விநிதிக்கு நன்கொடை வழங்கியும் உபகரித்த இவ்வன்பர்க்கு எமது மனமுவந்த நன்றி உரித்தாகுக.

### திருமண நன்கொடை.

தங்கள் இல்லங்களில் நடைபெற்ற திருமண ஞாபகார்த்தமாக சென்ற மாதத்தில் சில அன்பர்கள் நமது தலைச்சங்கத்திற்கு நன்கொடை வழங்கினர்களென்பதைச் சென்ற பத்திரிகையில் அறிவித்திருந்தோம். அவர்களைப் பற்றி மேல் கிருஷ்ணபுரம் ஓ பெரியண்ண முதலியாரவர்கள் பிள்ளைக்கும், பெரியாங்குப்பம் ஆ. கி. முருகேச முதலியாரவர்கள் தங்கைக்கும் நடைபெற்ற திருமணத்தில் ரூபா ஒன்றும், பெரியாங்குப்பம் கொ. மு. சதாசிவ முதலியாரவர்கள் புதல்விக்கும், மேல் கிருஷ்ணபுரம் மொட்டையப்ப முதலியாரவர்கள் புதல்வனுக்கும் நடைபெற்ற திருமணத்தில் ரூபா ஒன்றும், மேல் கிருஷ்ணபுரம் கோவிந்தப்ப முதலியாரவர்கள் தமக்கைக்கும், பெரியாங்குப்பம் பெரியதம்பி முதலியாரவர்கள் புதல்வனுக்கும் நடைபெற்ற திருமணத்தில் எட்டணவும் நமது சங்கத்திற்கு நன்கொடை வழங்கப்பட்டன. இவர்கட்கு எமது நன்றி உரித்தாவதோடு மணமக்கள் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

மு. சு.

## கல்விநிதிச் சீட்டு விற்ற அன்பர்கட்கு அறிக்கை

சீட்டு வாங்கியவர்களிற் பலர் தாங்கள் வாங்கிய சீட்டின் கவுண்டர்பாயிலும் பணமும் வந்து சேர்ந்து விட்டதா என்பதைத் தெரிவிக்குமாறு கடிதங்கள் எழுதுகின்றனர். சீட்டுப் புத்தகம் விற்றவர்களிற் பலர் இன்னும் திருப்பியனுப்பாதிருப்பதால் வந்த கடிதங்கட்கு பதில் எழுத முடியாமலிருக்கிறது. ஆகையால் பூரா புத்தகங்கள் விற்றவர்கள் உடனே கவுண்டர்பாயிலையும் அதற்கு பணத்தையும் விரைவில் அனுப்பிவைக்குமாறு வேண்டுகின்றோம்.


## அடுத்த ஆண்டு முதல்

அழகிய கிளேஸ் காகிதத்தில்,

ஆப்டோன் படங்கள், சித்திரப் படங்களுடன்

நமது மித்திரன் வெளிவர விரும்புகிறீர்களா?

அப்படியானால்

உங்கள் சந்தாவை உடனே அனுப்பிவிட்டு

ஒவ்வொருவரும் ஒரு புதிய சந்தாதாரரையாவது

சேர்த்தனுப்ப முயலுங்கள்.

இது ஒருவருக்கும் கஷ்டமல்ல.


## சமயப் பகுதி

### இந்து தெய்வமூர்த்த, தத்துவார்த்த விளக்கம்.

(மித்திரன் தொகுதி 3. 343-ம் பக்கத் தொடர்ச்சி).

#### நடராஜமூர்த்தம்.

சீருற்றுச் சிறந்து விளங்கும் நம்மித்து தேசத்தில் சிவாகமவிதி முறைப்படி யமைக்கப் பெற்றிலங்குஞ் சிவாலயங்கடோறும் மகாமண்டபத்தின்கண் மேற்கூறிய நடராஜமூர்த்தங் காணப்பெறுகின்றது. இம்மூர்த்தியின் வடிவத்தை மிக்க நுண்ணறிவோடேன்றிப் பார்த்தறியுமிடத்து, [illegible] தத்துவார்த்தங்களும் அதிலுக்கும வுண்மைப் பொருள்களும் தெளிவாக விளங்குகின்றது. இதனால் நாமறிந்து கொள்ளக்கூடிய விஷயங்கள் பல விருக்கின்றன. அவ்விஷயத்தினைப்பற்றி யொரு சிறிதாராய்வாம். நடராஜன் என்றால் நடனசபைக்குத் தலைவன் என்பது பொருள். சபாநாயகர் என்பது மிதுவே. சபாபதி யெனினுமமையும். இவ்வுலகமே யொரு நாடகவரங்காகவும், அதிற்றோன்றி வசிக்கும் சராசரவுயிர்த்தோற்றங்களாகிய பல ஜீவராசிகளே வேஷதாரிகளாகவும், "அவனன்றி யோரணுவுமசையா"வென்னும் ஆன்றோர் அமுதமொழிக்கேற்ப, அவ்வசராசரங்கள் யாவையும் இயக்குவிக்கும் மூலகாரணனாகவும் இறைவன் விளங்குகின்றான். "ஆட்டுவித்தாலாரொருவ ராடாதாரே" என்னும் நாவுக்கரசின் நன்மொழிக்கிணங்க நம்மையெல்லாம் ஆட்டுவிக்கும் பரமாத்மாவுக்கே நடராஜன் என்று பெயர். இவர் தம்மையடைந்த சுத்தாத்மாக்களை யுய்விக்கும்பொருட்டுச் செய்தருளிய திருநடனங்கள் பல. இவைகளின் விரிவை சைவநூல்களிற் கண்டுணர்க. "என்னத்தனுடல் கண்டின்புற்றாலிவ்விருநிலமே" என்ற தமிழ் மறைக்கிணங்க, இம்மூர்த்தியின் திருநடனக்காக்ஷி வைபவத்தைக்கண்டு தரிசித்தார்க்கு மோக்ஷவின்பமெளிதில் சித்திக்குமென்பது நூல்களின் றுணிபு.



"ஊனடைந்த வுடம்பின் பிறவியே
தானடைந்த வுறுதியைச் சாருமால்
தேனடைந்த மலர்ப்பொழிற் றில்லையுண்
மானடஞ்செய் வரதற்பொற் றடொழ."

என்னும் பாசுரம் இதனை நன்கு வலியுறுத்தும். இம்மூர்த்தத்தைப் பஞ்சகிருத்திய மூர்த்தம் என்றும், அவர் செய்யும் நடனத்தைப் பஞ்சகிருத்திய நடனம் என்றும் ஆன்றோர் கூறுவர். எவ்வாறெனில்; (1) அவர் கையிலிருக்கும் உடுக்கை சிருட்டியையும், (2) அணைத்தகரம் திதியையும், (3) மழுவாகிய அக்கினி சங்காரத்தையும் (4) ஊன்றியபாதம் திரோபவத்தையும் (5) தூக்கிய திருவடி அனுக்கிரகமாகிய மோக்ஷத்தையுங் குறிக்கின்றன.

இதனை

"தோற்றந் துடியதனிற் றோயுந் திதியமைப்பில்
சாற்றியிடு மங்கியிலே சங்காரம்—ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே வுற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு." என்ற பாசுரத்தால் நன்குய்த்துணர்க. இதனாலும் மூர்த்தம் பஞ்சகிருத்திய மூர்த்தம் என்பது பெறப்படுகின்றது.

இந் நடராஜமூர்த்தியின் சொரூபம் அவர் உண்மை நிலையையே காட்டுகின்றது. அவர் கங்கையையும் சந்திரனையும் தனது வெள்ளிய சடையினிடமாகத் தரித்திருக்குந் தோற்றமானது, இப்பிரமாண்ட சொரூபமே இவர் தேகமென்பதையும் அண்டமுகடே யவர்சிரம் என்பதையும், "மின்னிய மின்னலின் பிறக்கம் நின் சடையே" என்னும் பட்டினத்தடிகளின் வாக்கின்படி மின்னற் கூட்டங்களே யவர் சடைகளென்பதையும், அண்டமுகட்டில் விளங்கும் தேவகங்கையுஞ் சந்திரனும் கங்காதேவியும் மூன்றாம் பிறையுமென்பதையும் குறிக்கின்றன. நாகம் குண்டலிசத்தியை யுணர்த்துகின்றது. இவ்வுலகமே யவர்தேகம், வீசுங்காற்றே யவர் சுவாசம், பாதாளமே யவர் திருவடிகள் என்பதையும், தேகமுழுதும் விபூதி துலனம் அவர் தத்துவசொரூபமான ஞானரூபி என்பதையுங் குறிக்கின்றது. கையிற்றரித்திருக்கும் முத்தலைச்சூலம், பிரம்ம விஷ்ணுருத்திரன் என்

னும் மும்மூர்த்திகளும் தாமே யென்பதைக் குறிப்பிக்கின்றது. இதனாலிவர் சமயாதீதக் கடவுள் என்பது புலனாகின்றது இவர் நடிக்குமிடம் பொன்னம்பலம் என்றும் சிதாகாயம் என்றும் சிதம்பரம் என்றும் சபை என்றும் கூறப்படுகிறது. அம்பரம் என்றால் ஆகாயம், வெறு வெளி, பொதுமன்றம் என்று பெயர். (சித் + அம்பரம்) சித்தாகிய வெளி அதாவது இருதய கமலஸ்தானம் என்பது பொருள். இந்த உள்ளமே ஞானமன்றமெனப்படும். "ஆனந்தத் தேனிருந்த பொந்து" என்று மணிவாசகப் பெருமானால் சிறப்பித்துக் கூறப்பட்ட இந்த ஞானமன்றமே ஓங்காரமென்னும் திருச்சிற்றம்பலமாம். அதனுள் நடிப்பவனே நடராஜனும் அதுபற்றியே "ஓங்காரத்துட் பொருளை" என்றும் "உய்ய வென்னுள்ளத்து ளோங்காரமாய் நின்ற மெய்யா" என்றும் ஆன்றோர் கூறுவாராயினர். ஓங்காரமே இவ்வுலகவடிவு. இவ்வுலகமே மன்றாக நடராஜன் சகல சராசரப் பொருள்களையு மியக்கி, பஞ்சகிருத்தியம் நடத்துவான் வேண்டி யனவரதமும் ஆனந்த நிருத்தஞ் செய்கின்றனர். இந்த வுண்மையைப் புலப்படுத்தவே மற்ற விக்கிரகங்களைப் போலாது நடராஜமூர்த்தத்திற்குத் திருவாசியெனும் பிரபையானது அதனிடமிருந்து பிரித்து எடுக்க வொட்டாமல் கூடவே சேர்த்து வார்ப்பிக்கப் பட்டிருத்தல் காண்க. இம்மூர்த்தியின் வலது கையொன்றில் உடுக்கை இருக்கிறது. ஓம் என்னுஞ் சப்தத்தினாலே இவ்வுலகம் நிலைபெற்றிருக்கிறது என்பது நூல்களின் பிரமாணம். அந்த ஓங்காரத்தொனியை யுண்டாக்கும் உடுக்கையை நடராஜன் கையில் கொண்டிருப்பதால் அவர் தன்னிஷ்டப்படி உலகத்தை எப்படி வேண்டுமானாலும் ஆட்டலாம் என்பது பெறப்படுகின்றது. இன்னொரு வலதுகை சமாதானத்தைக் காட்டுகின்றது. அதாவது ஞானிகளனுபவிக்கும் மௌனமாகிய ஆனந்தத்தைக் குறிக்கின்றது. அனைத்தகரமானது ஆன்மாக்களுக்குப் போக போக்கியங்களைக்கொடுத்து ரக்ஷிக்க வல்லது. அக்கினியை யேந்தி நிற்றல் ஆன்மாக்களைப் பந்தித்திருக்கும் பாசங்களைச் சங்கரிப்பவர் தாமே யென்பதையும் சங்கார கிருத்தியத்தையு முணர்த்தும். நடராஜமூர்த்தியின் ஓர் பக்கத்திலுள்ள மான் மனதைக் குறிக்கும். ஏனெனில் மானைப்போல் மனமானது ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குத் தாவுவதால் அத்தகைய மனதினையுடைய மாந்தர்க்குத்தான் புலப்படுவது அருமை யென்பதை இது வெளிப்படுத்துகின்றது. புலித்தோலுடை பணிந்திருப்பதானது ஆங்காரமென்னும் புலியை வெல்லத்தகுந்தவர் தானேயென்பதும் தன்னையடைந்தால் அகங்காரக் கட்டை யழிக்கலாமென்பதும் புலனாகின்றது. காலினடியில் மிதித்திருக்கும் முயலகன் பிறப்புக்கும் இறப்புக்குங் காரணமாய மகாமாலையைக் குறிக்குமாதலால் அம்மாலையை வேறுக்கவல்லவர் அவரே என்பதும் நன்கு அறியக்கிடக்கின்றது. தூக்கிய திருவடியென்னுங் குஞ்சிதபாதம் துரியத்தின் நிலைமையை யுணர்த்துகின்றது. சாக்கிர, சொப்பன, சுழுத்தியாகிய மூன்றவஸ்தைகளையுங் கடந்து அப்பாலுள்ள ஸ்திதி அதாவது மேலான மோக்ஷவின்ப நிலையைத் தரவல்லது என்பதைக் குறிக்கின்றது இதனை

"மாயை தனையுதறி வல்வினையைச் சுட்டுமலஞ்
சாய வமுக்கியருள் தானெடுத்து—நேயத்தால்
ஆனந்த வாரிதியி லான்மாவைத் தானழுத்தல்
தானெந்தை யார்பாதந் தான்" என்பதனாலும்
"முந்தி,நான் முயலப்பதத்தே நாடு" என்பதனாலும்
"...................................ஆங்காரம்
அற்றாறிவர் அணியம் பலத்தானுடலிது
பெற்றார் பிறப்பற்றார்பின்" என்றும் போந்த

வாக்குகளால் நன்கறிக. இதுகாறுங் கூறியவற்றால் நடராஜமூர்த்தியின் தத்துவார்த்தத்தை யொரு சிறிதுணர்ந்தவர்களாவோம். தவிர இம்மூர்த்தத்தை "பஞ்சாக்கரவடிவினன்" என்றும் ஆன்றோர் புகல்கின்றனர். இதனை

"மருவுந் துடியுடன் மன்னிய வீச்ச
மருவிய வப்பு மனலுடன் கையுங்
கருவிய மிதித்த மலப் பதமு
முருவில் சிவாய நமவென வோதே"

என்ற திருமூலயோகிகளது வாக்கு நன்கு வலியுறுத்துகின்றது. தில்லைச் சிற்றம்பலத்தின்கண் ஆனந்தத்தாண்டவந் திருநடங்குயிற்றும் பரம கருணாநிதியாகிய நடராஜமூர்த்தியை தூலபஞ்சாக்கர வடிவமுறையிற் கொள்ளுங்கால், திருவடியிலே நகாரமும், திருவுந்தியிலே மகாரமும், திருத்தோளிலே சிகாரமும், திருமுகத்திலே வகாரமும், திருமுடியிலே யகாரமுமாகப் பாவனை கற்பித்துக் கூறுவரான்றோர். இதனை

"ஆடும் படிகேணல் லம்பலத்தா னையனே
நாடுந் திருவடியி லேநகரம்—கூடு
மகர முதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார்," என்னும் உண்மை

விளக்கச் செய்யுளானுணர்க. இவ்விறைவனைக் குக்கும பஞ்சாக்கர வடிவினனாகக் கொள்ளுமிடத்துத் தமருகந் தாங்கிய திருக்கரத்திலே



சிகாரமும், வீசுந்திருக்கரத்திலே வகாரமும், அபயத் திருக்கரத்திலே யகாரமும் அக்கினியேந்துந் திருக்கரத்திலே நகாரமும், முயலகனையூன்றிய திருப்பாதத்திலே மகாரமுமாக பெரியோர்கள் பாவனை கற்பித்துக் கூறுவர். இதனை

"சேர்க்குந் துடிசிகரம் சிக்கனவா வீசுகர
மார்க்கும் யகர மபயகரம்—பார்க்கிலிறைக்
கங்கி நகர மடிக்கீழ் முயலகனார்
தங்கு மகாரமது தான்." என்ற ஆன்றோர் வாக்

கானுணர்க. உண்மை நிலையையுணர்ந்த மெய்ஞ்ஞானிகள் இவரை பல்வேறுவிதமாகவும் உருவகப்படுத்தி பல ஞானார்த்தங்களையும் கற்பித்துக் கூறுவர். இம் மூர்த்தியின் பெருமையோ அளவுகடந்தது. ஆதலாலித்தன்மைத்தாய் விளங்கும் நடராஜமூர்த்தியை நமது உள்ளமாகிய தகரபுண்டரீகமென்னு மிருதயஸ்தானமாம் சிதாகாசவெளியில் ஆனந்ததாண்டவ நிருத்த தரிசனங்கண்டு அழிவின்ப முத்தியாம் மோக்ஷத்தையடையும் முயற்சித்துறையில் முன் வருவீர்களாக. இதற்கு எல்லாம்வல்ல நங்குலக் கட வுளாம் அறுமுகப்பெருமானார் திருவருள் துணை புரிவதாக.

(தொடரும்.)

வை. ச. இராமலிங்க முதலியார்,
துணைத்தலைவர், சைவசித்தாந்த செங்குந்தர் சமாஜம்,
கண்டாச்சிபுரம்.

## நாவல் பகுதி

### செங்குந்த யாத்திரைவாசி

என் யாத்திரைவரலாற்றை ஆதரவோடு கேட்கும் எவதரிய சகோதரர்களே! அருந்தனியில் அழகுற அமைக்கப்பெற்றுள்ள விசாலமான அலங்கார மண்டபத்தில நாட்டாண்மைக்காரர் ஒரு உயர்ந்த ஆசனமிட்டு என்னை அதன் மேலிருக்கும்படிக் கேட்டுக்கொண்டார். யான் உட்கார்ந்து சூழ்ந்து நின்றவனைவரையும் உட்காரும்படிக் கையமர்த்தினேன். அவர்களும் அவ்வாறே அமர்ந்தார்கள். முக்கியஸ்தாகளெல்லாம் என் அருகே இருந்தார்கள். நாட்டாண்மைக்காரர்களையும், கிராமணிகளையும், வியாபாரிகளையும், மற்றுமுள்ள பிரமுகர்களையும் டை பெரிய நாட்டாண்மைக்காரர் எனக்கு அறிமுகம் செய்வித்த பின்னர் என் எதிரே நின்று வணங்கி 'சுவாமிகள் தான் காப்பி சாப்பிடுகிறதில்லையே; அடியேன் இல்லத்தில் அமுது செய்தருள சமமதிக்குமா? நேரமாய்விட்டது' என்றார். 'நல்லோராயின் செய்பலாம்" எனப்பதிலுரைத்தேன். பெரிய நாட்டாண்மைக்காரர் ஒன்றுந்தோன்றாதவராய் யோசிக்கலானார். மற்றவர்களும் என் கருத்தை அறிந்து கொள்ளக் கூடாதவர்களாய்த் திகைத்தனர். அப்போது என் பெட்டியின் அருகே இருந்த இளைஞன், 'சுவாமிகளுக்குச் சந்தேகம் வேண்டியதில்லை. இங்குள்ள அனைவரும் நல்லவர்களே' என்று உறத்துக்கூறினான். எல்லோரும் இளைஞனை ஆச்சரியத்தோடு உற்று நோக்கலாயினர். யானும் அவனைப் பார்த்தேன். பெரிய நாட்டாண்மைக்காரர் 'சுவாமிகள் திருவாக்கு விளங்கவில்லை' எனவும் மறுபடியும் யான் சிறுவனை நோக்கித் தலையசைத்து உங்காரஞ்செய்தேன். உடனே சிறுவன் 'அண்ணா சுவாமிகள் கருத்து விளங்கிறதல்லவா "கொல்லா விரதம் பூண்டோரே நல்லோர்" எனத் திருவாய்மலர்ந்தருளிய தாயுமான சுவாமிகள் கருத்தே தான் சுவாமிகள் கருத்தும்.' என்றான். சிறுவன் சொல்லைக் கேட்ட பெரிய நாட்டாண்மைக்காரர் 'தம்பி! எனக்கு விளங்கிவிட்டது இப்போது; ஆயினும் இங்குள்ளவர்களுள் பெரும்பாலோர்க்கு இன்னும் எட்டியிராது. ஆகையால் சிறிது விளக்கக் கூறுவதே நல்லது. சுவாமிகள் திருவுள்ளம்,' என்றார். உடனே இளைஞன் என்னை நோக்கினான். யான் புன்னகை செய்தேன். என் சம்மதத்தைக் குறிப்பாலுணர்ந்து கொண்ட சிறுவன் பின்னர் கீழ்வருமாறு வியாக்கியானம் செய்ய ஆரம்பித்தான்.

நவவீரர் வழிவந்த நல்லவர்களே! இங்கு இப்போது நிகழ்ந்த விஷயம் இன்னதென உங்களில் அநேகருக்குத் தெரிந்திராது. அதனாலெல்லோரும் தெரிந்து கொள்ளவேண்டிய

விஷயமாகும். அதாவது நம்மை யாளும் பொருட்டு இங்கு இன்று எழுந்தருளியிருக்கும் சுவாமிகளைத் தமதில்லத்திற்குத் திருவமுது செய்ய எழுந்தருளவேண்டுமென எங்களண்ணு கேட்டுக்கொண்டபோது சுவாமிகள் 'நல்லோராயின் செய்யலாம்' எனப்பதிலளித்தது சிலருக்கு விளங்காததால் அதன் கருத்தை நான் குறிப்பாகக் காட்டினேன். அதை இங்கு குழுமியுள்ள அனைவரும் தெரிந்து கொள்ளுமாறு விரிவாகச் சொல்ல வேண்டுமென்று பெரியவர்கள் வேண்டுகோளுக்கிணங்க இம்மூர்த்திகள் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறபடியால் என் புத்திக்கெட்டிய வரையில் சுருக்கமாகவே ஒருவாறு உங்களுக்குக் கூறுகிறேன்.

நடந்த விஷயத்தை முன்பே கூறியுள்ளேன். ஆகையால் இப்போது 'நல்லோராயின் செய்யலாம்' என்னும் சில மொழிகளைப் பற்றியே நாம் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதுவும் சாப்பிட அழைத்த தருணத்தில் கூறப்பட்டதென்பதை ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். ஞான சூரியனாகிய நம் தாயுமானப் பெருந்தகையார் "கொல்லா விரதம் பூண்டோரே நல்லோர், மற்றல்லாதார் யாரோ அறியேன் பராபரமே" என்றார். இதே கருத்தைக் கொண்டு தான் சுவாமிகள் 'நல்லோராயின்' என்றருளிற்று. மேற்கூறிய செய்யுளின் கருத்தாவது எவ்வகைப்பட்ட பிராணிகளையும் சோர்ந்தும் கொலை செய்வதில்லை என்னும் திடமான கொள்கையையே விரும்பி ஆபரணமாகப் பூண்டவர் யாரோ அவரைத்தான் நல்லோரென்று சொல்லுவேன் மற்றையோரை அதாவது சந்தர்ப்பம் நேர்ந்தபோதெல்லாம்—சில சமயங்களில் கடவுள் பெயராலும், நோயின் பெயராலும் தாங்களே சந்தர்ப்பங்களை உண்டாக்கிக் கொண்டு ஆதரவற்றனவும், தீங்கற்றனவுமான பிராணிகளை இரக்கமின்றிக் கொன்று, அவற்றின் ஊனைத்தின்று தம் மூனைப்பெருக்கி உலாவி வரும் மாக்களை யான இன்னரென்று அறியேன் என்பதாம்.

இதில் கொல்லா விரதம் என்றதனால் உயிர்களைக் கொல்லாதிருத்தலே விரதம் எனப்பெறப்படுகிறது. கொல்லாதிருத்தலே விரதம்; அவ்விரதம் பூண்டோரே நல்லோர்; என்றால் வேலை தவறாது விழைந்து ஊன் (மாமிசம்) உண்ணுவோன் ஒருவன் எவ்வுயிரையும் தான் கொல்லுவதே கிடையாது. அதனால் தானும் நல்லவனே எனல் கூடாது. ஏனெனில் கொல்லா விரதம் என்பதற்குப் பொருள் (அர்த்தம்) கொன்று தின்னு விரதம் அதாவது கொல்லுதலும், கொன்றவற்றைத் தின்னுதலும் இல்லா விரதம் என்றே கொள்ளவேண்டும். தாயுமானர் கொல்லாமையை மாத்திரந்தானே விரதமாகக் கூறியுள்ளார். யான் பிறர் கொன்றவற்றைத் தின்னுவேனாயினும், கொல்லுவதில்லையாகையால் யானும் நல்லவனே எனப் பிடிவாதம் பேசுதலாகாது. தின்னுவோன் கொல்லுவோனே ஆகின்றான். 'இக்கோயிலை அரசன் கட்டினான்' என்பதற்கு என்ன பொருள் கூற முடியும். மலையிலிருந்து கல் வெட்டுதல் முதலிய எல்லாவற்றையும் அரசன் தானே தன் கையினால் செய்தான் என்று சொல்லலாமா? சொன்னாலும் அதை யாராவது ஆமென்று கொள்வார்களா? ஒருக்காலும் கொள்ளமாட்டார்கள். அரசன் பொருள் கொடுக்க சிற்பிகள் கட்டினார்கள் என்பதல்லவா அதன் கருத்து. பண வருவாயை முன்னிட்டு கட்டிய சிற்பி முதலியவர்கள் தொழிலைப் பொருள் தந்த அரசன் செய்ததாகச் சொல்லுவது போல, பண வருவாயை முன்னிட்டு உயிர்களைக் கொல்லும் கசாப்புக்காரன தொழிலைப் பொருள்தந்து ஊன் பெற்று உண்டவன் செய்ததாகச் சொல்லுவதால்வரும் குற்றமென்ன? இவன் தின்னுவிடில் அவன் கொல்லானன்றோ? ஆகையால் தானே தன் கையால் உயிர்களைக் கொல்லாவிட்டாலும் அக்கொடுந் தொழிலைச் செய்யும்படி பொருள் கொடுத்து ஆதரிக்கிற மாமிசம் தின்னுவோனையே அவ்வுயிர்க்கொலை செய்தவனாகக் கொள்ளவேண்டும். இதைத் தான் மற்றொரு பெரியார் 'கோன்பென்பது கொன்று தின்னாமை' என்றார்.

மேலும் நல்லவர்கள் இன்னரெனத் தெரிந்து கொள்ள ஓர் அடையாளம் உண்டு என்கிறார் நமது தாயுமானர். கொல்லா விரதம் என்னும் பூண (ஆபரணம) பூண்டிருப்பதே அடையாளமாகிறது. ஆபரணமானது அணிந்து கொண்டவர்களை அழகு செய்கிறது. கொல்லாவிரதமென்னும் ஆபரணமோ அதை அணிந்து கொண்டோரது புறத்தை மாத்திரமேயன்றி அகத்தையும் அழகு செய்கிறது. எனவே ஜீவகாருண்யம் நிறைந்த மன அழகையும் நோயற்ற உடலழகையும், பெற்ற நல்லவர்களை ஜீவஜெந்துக்களும், மனிதர்களும் ஏன் நேசிக்க மாட்டார்கள்? ஏன் விரும்பமாட்டார்கள்? ஏன் கடவுளாகவும் வணங்க மாட்டார்கள்? இதனாலன்றோ பொய்யில் புலவராகிய நாயனர் 'கொல்லான் புலாலைமறுத்தானைக் கைகூப்பி எல்லாவுயிருந் தொழும்' எனக் கூறியுள்ளார். தாயுமானர் கடைசியாக 'மற்றல்லாதார் யாரோ அறியேன்' என்றார். இதன் கருத்தென்ன? மேற்கூறப்பெற்றோர் நல்லோராயின் அவரல்லாதார் யாரென்பதை நீங்களே தெரிந்துகொள்ளுங்கள். யான் என் வாயால் சொல்லேன் அல்லது அவர் இன்னரெனச் சொலலவும் பயப்படுகிறேன் என்பதாம். 'அறியேன்' என்றதனால் யான் அத்தகையரோடு பழகியதே இல்லை, எனக் குறிப்பாலுணர்த்துகிறார். விரிவிற்கஞ்சி ஒருவாறு சுருக்கிக் கூறினேன். இச்சுவாமிகளும அதே கருததுக்கொண்டுதான் 'நல்லோராயின செய்யலாம்' என்றார்கள். அதாவது ஜீவகாருண்ய ஒழுக்கத்தைமேற்கொண்ட சைவசீலர்களாயின் சாப்பிடமுடியும் என்றது. நாமெல்லாம் பரம்பரையாகவே ஊனைத்தின்று ஊனைப்பெருக்காத சுத்தசைவர்கள் என்பதை சுவாமிகளுக்கு மற்றொருமுறை உங்கள் சார்பாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதுசம்பந்தமாக உங்களுக்கு வற்புறுத்திக் கூறவேண்டிய மற்றொரு விஷயம் உண்டு. அது ஜீவகாருண்யத்திற்கே அடிப்படையாகயுள்ளது. இப்போது நேரமாய்விட்டபடியால் இதனோடு முடித்துக் கொண்டு, சுவாமிகளுக்குத திருவுள்ளமிருக்குமாயின் மற்றொரு சமயம் சொலலுகிறேன்." எனக் கூறிமுடித்தான்.



உடனே முதலியார் பேரானந்தங்கொண்டவராகி என்னெதிரில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து எழுந்து 'எங்களை ஆளவந்த கருணை வள்ளலே! யாங்கள் செய்த புண்ணியமே புண்ணியம். பிறவியின் பயனை இன்றே பெற்றோம். இச்சிறுவன் எனது தமையனார் மகன். புத்திசாலி. சுவாமிகள் ஆசீர்வதிக்க வேண்டுகிறேன். நேரமாய்விட்டது; எழுந்தருளலாமே! இன்று மாலை மற்ற விஷயங்களைப்பற்றிப் பேசலாமே! சுவாமிகளிடத்தில் அநேகர் பல சந்தேகங்கள் கேட்க விரும்புகிறார்கள். இப்போது நேரமாய்விட்டது புறப்படலாம் என்றார். யான் வழக்கப்படி தலையசைத்தேன். உடனே அவர் எழுந்து 'இன்று மாலை 3-மணிக்கு இதே இடத்தில் எல்லோரும் வந்து சேரவேண்டும்' என்று சொல்லிவிட்டு என்னை தமதில்லத்திற்கு அழைத்துச் சென்றார்.

செங்குந்த நேயர்களுக்கு இங்கு யான் சொல்ல விருமபும் விஷயமொன்றுண்டு. யாத்திரை ஆரம்பத்தில் ஊரையும் பெயரையும் சொல்ல மாட்டேன் எனச் சொல்லியிருப்பது ஞாபகமிருக்கலாம். ஆயினும் அவ்வாறு சொல்லாதிருப்பது தொடர்ந்துவரும் வரலாற்றிற்குத் தோதாயிராது. ஆனபடியால் உண்மைப் பெயரையும் ஊரையும் மறைப்பினும் எனக்குப் பொருத்தமெனத் தோன்றியவாறு பெயர் சொல்லிக்கொண்டே செல்ல உத்தேசிக்கிறேன்.

நாட்டாண்மை முத்து முதலியார் சிவனடியார்களுக்குத் திருவமுதளிக்கும் முறை படி எனக்குப்போசனமிட்டார். அன்று என்னுடன் சுமார் 50 பேர் வரையில் சாப்பிட்டார்கள்.

(தொடரும்.)

விளம்பரத்திற் குகந்தது செங்குந்த மித்திரனே.
ஏன்? இது வெளிநாடுகளில ஏராளமான சநதாதார்களைப் பெற்றுள்ளது. மொத்தததில் ஆறாயிரத்திறகு மேறபட்ட சநதாதார்கள் உடையது இதன் சநதாதாரகள 100க்கு 80 பேர்கள் வர்த்தகர்களே. மற்றெந்த பத்திரிகையும் செல்லாத சிறுகிராமங்களிலும், மூலைமுடுக்குகளிலும் உலவிவருகின்றது.
நிறைநத பயன் தருமென்பதில் ஐயமில்லை
ஒருமுறை உங்கள் விளம்பரத்தைக் கொடுத்துப் பரீக்ஷிக்கலாம்
ஒரு மாதததிற்கு ஒரு பககம் விளம்பரஞ்செய்ய பத்தே ரூபாய்.
நீடித்த விளம்பரத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.
மானேஜர், செங்குந்த மித்திரன் ஆபீஸ், சென்னை

## குலதிலகர் பகுதி

### திருத்தணிகை ஞானம்மையார்

திருத்தணிகை ஞானம்மையார் சுமார் 90 வருஷங்களுக்குமுன் காஞ்சிபுரத்தை யடுத்த இராஜாம் பேட்டையில், நமது குல தெய்வமாகிய ஸ்ரீ முருகப்பெருமானுக்கு வழித்தொண்டாற்றிவந்த ஒரு செங்குந்த குடும்பத்தில் தோன்றியவர். அம்மையாரது சரித்திரத்தைக் கூறுமுன் இவரது தலைவனாகிய பிரசித்தி பெற்ற திருத்தணிகை முருகப்ப பரதேசியாரைக் குறித்து இரண்டொரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். இப்பரதேசியார் உண்மையிலேயே உள்ளத்துறவுடைய உத்தம சந்நியாசிகளில் ஒருவராவர். மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரணங்களாலும் தமதாத்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ முருகப்பெருமானுக்கே தொண்டு செய்பவர். உடல், பொருள், ஆவி மூன்றையும் அப்பெருமானுக்கே தத்தம் செய்தவர். சென்னைத் திருவல்லிக்கேணியில் செங்குந்தர் கோட்டத்தின்கண் எழுந்தருளியுள்ள ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளை பிரதிஷ்டை செய்ததன்றி கோவிலையும் கட்டுவித்தனர். திருத்தணிகையில் பிரமசுனைக் கெதிரில் ஒரு மடாலயங் கட்டுவித்து அச் சுனையில் தமக்குக் கிடைத்த முருகப்பெருமான் திருவுருவத்தை வைத்து ஆராதித்து வந்தார். இப்பெரியார் வரலாற்றைப் பூராவும் மற்றொரு சமயம் எழுதுகிறேன். விரிவிற்கஞ்சி இதனோடு நிறுத்திக் கொள்ளுகிறேன்.

இத்தகைய பரதேசியாரது தங்கையாகிய திருத்தணிகை ஞானம்மையாருக்கு ஏழாவது வயதிலேயே விவாகமாய்விட்டது. பின்னர் சில வருஷங்களுக்குள் கைம்பெண்ணாயினர். அது முதல் திருத்தணிகை முருகப்பெருமானுக்கு மெய்யடிமை பூண்டவராய்த் தமது தமையனாகிய முருகப்ப பரதேசியாரோடு அத்தலத்திலேயே சிலகாலம் தங்கியிருந்தனர். இவருக்கு இளமையில் கற்கச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லையேனும் திருத்தணிகையில் தங்கிய பிறகு படிக்க ஆரம்பித்து 'தவமும் தவமுடையார்க்காகும்' என்றபடி பூர்வஜென்ம சம்ஸ்காரத்தால் பல நுண்ணிய நூல்களையும் வெகு சீக்கிரத்தில் கற்று வல்லவராயினர். காஞ்சி கச்சியப்ப சிவாச்சாரியார் இயற்றியருளிய கந்தபுராணம் பூராவும் மனப்பாடமாக வரும். அந்நூலுக்கு மிகத் தெளிவாகவும், அழகாகவும் உரை கூறுவர். திருவாசகம், தேவாரம் முதலிய பக்தி நூல்களிலும், திருக்குறளிலும் நல்ல பயிற்சியுண்டு. எடுத்த காரியங்களை ஊக்கத்தோடு செய்து முடிக்கும் போராற்றலும், வைராக்கியமும் நிரம்பப் பெற்றவர். தமது சிந்தைமுழுதும் குன்றுதோறாடும் குமரனுக்கே இடமாக்கிவைத்தவர். தாம் யாக்கை எடுத்தது இறைவனுக்குத் தொண்டு செய்வதற்காகவே என்னும் மாறாத ஓரே எண்ணமுடையவர். ஐப்பசி மாதத்தில் கொண்டாடப்பெறும் கந்தர் சஷ்டி விரதத்தை நெறியோடு தவறாது அனுஷ்டித்து வந்தார்கள். அவ்விரதம் அனுஷ்டிக்கப்படும் ஆறு நாட்களுக்குள் கந்தபுராணம் முழுவதும் பாராயணஞ்செய்து முடிப்பது வழக்கம். அவ் வாறு நாட்களிலும் தண்ணீரைத் தவிர வேறொன்றும் பருகுவதும் உண்ணுவதும் கிடையாது. கும்பகோணத்தில் 12 வருஷங்களுக் கொருமுறை நடைபெறும் மகாமகம் ஒவ்வொன்றிற்கும் தவறாது செல்வதுண்டு. பெரிய கோயிலில் அம்மன் சந்நிதானத்தில் திருவிளக்கிடுதல் முதலிய பல தொண்டுகளையும், கார்த்திகைதோறும் ஆண்டவருக்கு அபிஷேகம் செய்தலையும் தவறாது இயற்றிவந்தனர். அம்மையார் மேற்கொண்டிருந்த விரத வைராக்கியங்கள் உடம்பு தளர்ந்த காலத்திலும் யாதொரு தட்டின்றி நடைபெற்று வந்தன. காசி, பிரயாக், ஹரித்துவாரம், கயா முதலிய வடநாட்டுத் தலங்களுக்குப் பல தடவைகளில் யாத்திரையாகச் சென்றிருக்கின்றனர். இவர் வெள்ளை ஆடையைத் தவிர காவிதரித்ததே இல்லை.

தணிகையமர் பெருமான் தேவஸ்தானத்தைச் சேர்ந்த கீழ்த்திருத்தணிகை ஆறுமுக சுவாமி கோயிலையும், சட்டநாதர் கோயிலையும் இலனுயிருந்தது கண்டு அநேக பக்த சிகாமணிகள் பொருளுதவிபெற்று அவற்றைப் புதுப்பித்தனர். இப்பெருங்காரியம் ஒரு தனித்த சாதாரண பெண்பாலால் செய்யக்கூடிய தன்று. இக்கோயிற் திருப்பணி நடக்கையில் மூல விக்கிரகத்திற்கு மேலாகப் போடப்பட்ட கல் இரண்டாய்ப் பிளந்தது கண்டு அது சுவாமியின் தலைமீது விழுமோவென அஞ்சிய அம்மையார், விக்கிரகத்தின் சிரமீது வைக்கோல் பரப்பி அதன் மீது படுக்க, அக் கற்றுண்டுகள் விக்கிரகத்திற்கு ஊறு ஏற்படாவண்ணம் பக்கங்களில் விழுந்தன. இவர் சமீப காலத்தி லிருந்தவராகையால் இவரது வரலாற்றையும், ஆழ்ந்த பக்தியையும், அநேக அற்புதச் செயல்களையும் நேரில் கண்டவர்கள் இன்னும் அநேகர் இருக்கின்றனர். சென்னை, காஞ்சி முதலிய இடங்களில் பண்டிதர் முதல் பாமரர்வரையிலும், பிரபுக்கள் முதல் ஏழைகள் வரையிலும் உள்ளவர்கள் அம்மையாரைப் பெரிய சிவனடியாராகப் போற்றிப்புகழ்ந்தனர். இவர் வெகு பிரயாசைப்பட்டுத் தேர் செய்யத் தொடங்கினர். அது முற்றுப்பெறுமுன் சமீபத்தில் சென்னைக்கு இரண்டாங் கவர்னராயிருந்த C. P. இராமசாமி ஐயர் முதலிய பெரியார்களும் பிரபுக்களும் தொடர, இராமேஸ்வர யாத்திரை சென்று திருத்தணிகை மீண்டு, அம்மையார் அறுமுகப் பெருமான் அடிக்கமலம் சார்ந்தனர். தேர் திருப்பணிக்காக 5000 ரூபாயும் வைத்துச் சென்றுள்ளார். செங்குந்த குலதிலகமாகிய இவ்வம்மையாரது அற்புதச் செயல்களின் சரியான விபரம் தெரியாமையால் அவற்றைக்குறித்து ஈண்டு ஒன்றும் சொல்ல வியலவில்லை. இதில் விடுபட்ட இதர சரித்திர விபரங்களை அறிந்தவர்கள் தெரிவிப்பார்களாயின் அவை அநேக வந்தனத்தோடு ஏற்றுக் கொள்ளப்படும்.


## ஆயுள் சந்தா.

வெளிநாட்டில் பெரும்பாலான அன்பர்களும் உள்நாட்டில் சிலரும் தங்கட்கு ஆண்டுதோறும் சந்தா செலுத்துவது சிரமமாக இருக்கிறதென்றும், சில சமயம் ஞாபகமில்லாமல் ஆண்டு முடிவுவரையிலும் சந்தா அனுப்பாதிருக்க நேர்கின்றதென்றும், நமது சமூகப் பத்திரிகைக்கு இவ்வாறு சந்தா செலுத்தாதிருக்கத் தங்கள் மனம் ஒருப்படவில்லை என்றும், ஆயுள் சந்தா ஏற்படுத்தினால் தாங்கள் முதலிலேயே மொத்தமாய்ச் செலுத்தி நமது மித்திரனைத் தங்கள் ஆயுள் பரியந்தம் யாதொரு இடைஞ்சலுமின்றிப் பெற்று ஆநந்திக்கக் கூடுமென்றும் வற்புறுத்தி வேண்டினர்.

எனவே உள்நாட்டிற்கு ரூபா 30-ம் வெளிநாட்டிற்கு ரூபா 40-ம் ஆயுள் சந்தாவாக ஏற்படுத்தியுள்ளோம். அன்பர்கள் பலரும் ஆயுள் சந்தாதாரராய்ச் சேர்ந்து ஆதரிக்குமாறு வேண்டுகின்றோம்.

மானேஜர், செங்குந்த மித்திரன் ஆபீஸ், சென்னை

# நமது கடிதங்கள்

சிலோன், 9—9—29

அன்பிற் சிறந்த ஐயா!

தங்கள் மாட்டு அன்பின் பணியாளரை அருட்டிறலார்வத்தில் அமைவுறச் செய்யுங் கந்தன் கண்ணோக்கம் எப்போதும் இருப்பதாக. நிற்க. எத்தனையோ மாதங்கட்கு முன் எடுத்த விஷயமாயிருந்தும் இன்னும் தகுந்தபடி சீட்டுகள் விற்பனையாகாததைப் பார்க்கும்போது மனங்கவல்கின்றது. வல்லானை வென்ற வம் சத்துதித்தோர்க்கு எடுத்த விஷயம் நன் முடிவுக்கு வரும் வரையில் வீரம் குறைவு படவே மாட்டாது. அப்பன் அருள்கொண்டு ஆக்ம சக்தியுடனும், இடைவிடா ஊக்கத்தோடும் உழைத்து வரும் உங்களை உருவப் படத்தில் அடிக்கடி அன்போடு கண்டு மகிழ்கின்றேன். அங்கிசந்தி அப்பனை வேண்டுகின்றேன். நன்னோக்கத்தோடு தொடங்கிய விஷயம் காலஞ்சென்றாலும் நல்ல முடிவினையே வந்தெய்தும். தளராமை கொண்ட வம்சத்திலும், தலைகொடாமையில்லாக் குலத்திலும் தோன்றினோரை அவ்வவர் மனத்திருந்தே அன்பு உருக்காமல் விடாது. சுற்றிக்கட்டி வைக்கப்பட்ட பாய்மாமுடைய கப்பலே போன்று நமது சமூகமும் இதுவரை அசையாதிருந்தது. பாய்மரம் உங்களால் விரிக்கப்பட்டாய் விட்டது. செங்குந்த சமூகம் வெகு விரைவாய் முன்னேற்றப்பாதையில் ஓடுகின்றது. ஒவ்வொரு செங்குந்தனுக்கும் உணர்ச்சி நிறைந்துள்ளது இவ்வுணர்ச்சி ஒருவனுக்கேனும் குறைவுபடுமென நினைத்தற்கே இடமில்லை. சிலோன் சந்தா நேயர்களின் விலாசங்கள் கிடைத்தன. விரைவில் வசூலித்தனுப்புகின்றேன். நான் எனது கடமையினைச் செய்ய நிறைந்த அவாவுடன் இருந்தும் கல்வி நிதிச் சீட்டுக் கிடைக்காதது மிக்க வருத்தமாயுள்ளது. இங்கு அநேகரை ஊக்கியுள்ளேன்.

பத்திரிகை நேயர்கள் கல்வி நிதிக்காக ஒருமைப்பட்டுச் சந்தாவோடு $1\frac{1}{2}$ ரூபா சேர்த்து 3 ரூபாயாக ஒருமுறைக்கு அனுப்பினால் ஐயாயிரம் சந்தாவிற்கும் பதினையாயிரம் ரூபாயாகுமே. இதனை என் அன்பர்கள் விருப்பப்படி விண்ணப்பமாக பத்திரிகை மூலம் தெரிவிக்கக்கூடாது. அன்பாளருக்கு இதொருகஷ்டமல்ல. தலைகொடுத்தவர்கள் (குலத்துக்காக) காசு கொடுப்பது ஒரு சிறிதும் கஷ்டமாக இராது. நமஸ்காரம். அரகரமகாதேவா.

இங்ஙனம்,
தங்களன்பான பணிவு பூண்டொழுகும்,
த. இராஜேஸ்வரன்,
கோடரிபப்ளிக், சிலோன்.

குறிப்பு:—அன்பருக்குள்ள ஆர்வம் அளவிறந்ததே. இதனைப் போற்றுகின்றோம். இத்தகைய ஊக்கமுடையார் இன்னுஞ்சிலர் வெளிவரின் நமது சமூகம் இரண்டொரு வருடங்களுக்குள் முன்னேற்றமடைந்து விடுமென்பது நிச்சயம் $1\frac{1}{2}$ ரூபா சந்தாவை 3 ரூபாயாகத் தந்து கல்வி நிதியினை ஆதரிக்கச் செங்குந்தரனைவரும் ஒருப்படுவரென்றும் இதனை விண்ணப்பமாக வெளியிட வேண்டுமென்றும் அன்பர் விரும்புகின்றனர். 5,000 சந்தாதார்கள் இருப்பது வாஸ்தவமே. ஆனால் இவர்களில் மூவாயிரம் பேர் இன்னும் $1\frac{1}{2}$ ரூபா சந்தாவே செலுத்தாமல் இருக்கின்றனரெனின் இவர்கள் மூன்று ரூபாயாகச் சேர்த்தனுப்புவது எங்ஙனம் என்பதை நண்பர் கவனிக்க வேண்டும். இவரைப்போல் ஒவ்வொரு கிராமத்திலும் ஒருவரேனும் இருப்பாராயின் இவரது விருப்பம் நிறைவேறுவது கஷ்டமல்ல. வெகுவிரைவில் நமது சமூகம் நன்னிலைக்கு வர முருகன் திருவருள் புரிய வேண்டுகின்றோம்.

---

பொன்மலை, 12—9—29

செங்குந்தமித்திரன் ஆசிரியர் அவர்கட்கு

அன்புடைய ஐயா!

தாங்கள் அனுப்பிய கல்விநிதிச் சீட்டை வேற்றினத்தவர்களிடம் காண்பித்ததில் "சுயஜாதிப் பிள்ளைகட்குமட்டும் கல்வி கற்பிக்க ஏற்பட்டசீட்டை நாங்களெப்படி ஆதரிக்கக் கூடும்; செங்குந்தர் என்ற சொல்லை எடுத்துவிட்டால் நாங்கள் ஆதரிக்கின்றோம்" என்றனர். என் மனம் உடனே துடித்தது. "ஒவ்வொரு சமூகமும் முன்னேற்றமடையப் பாடுபடு மிக்காலத்தில் நெடுநாள் உறங்கிக் கிடந்த எங்கள் செங்குந்த சமூக ஏழைப் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கவேற்பட்ட சீட்டாயிற்றே இதன் தலைப்பில் விளங்கி எங்கள் உணர்ச்சியைத் தட்டி எழுப்பும் செங்குந்தர் என்னுஞ் சொல்லை எடுப்பதா. எங்கள் உயிரையுங் கொடுப்போம், உடலையும் அழிப்போம்; செங்குந்தர் என்பதை மட்டும் எடுக்கமாட்டோம். அதனைப் பார்க்குந்தோறும் எங்கள் சமூகம் கல்வியிற் கரைகண்டதாகவே கண்டு மகிழும் எனக்கு நீங்கள் கூறுவது காராசமே போன்றிருக்கிறது மற்றொருமுறை கூறாதேயுங்கள்" என்று கூறினேன். மீண்டும் அவர்கள் "உண்மையே, உங்கள் சமூகத்தார்கள் புதிது புதிதாகக் கோவில்கள் கட்டுகின்றார்கள்; அநேக திருவிழாக்கள் ஆடம்பரமாய்ச் செய்கின்றார்கள்; மற்றும் பலவித தர்மங்கள் பெருமைக்காகச் செய்கின்றனரே; ஏழைச் செங்குந்த மாணவர்களை ஏன் ஆதரிக்கக் கூடாது" என்றனர் நான் உடனே "நீங்கள் சொல்வது உண்மையே. இக் கல்வி நிதியை ஒரு லட்ச ரூபாயும் ஒருவரே கொடுத்து ஆதரிக்கத்தக்க தர்மகர்த்தர்கள் பலர் எங்கள் சமூகத்தில் இருக்கின்றனர் என்றாலும் சிறுதுளி பெருவெள்ளம் என்பதுபோல் அனைவரது உபகாரமிருப்பின் எல்லார்க்கும் இவ்வியக்க உண்மை நன்கு புலனாகுமென்றே இச்சீட்டு தொடங்கப்பட்டுள்ளது" எனக் கூறிவிட்டு இரு புத்தகங்களையும் ஒருவாறு பூர்த்தி செய்து அனுப்பிவிட்டேன்.

ஆங்காங்குள்ள செங்குந்த சீமான்கள் இச்சீட்டுகளைத் தம்மாலியன்றவரை செலவழித்து ஏழைச் செங்குந்த இளைஞர்கட்குக் கல்வியாம் கண்ணைத் திறந்து, செங்குந்த உலகம் செழித்தோங்கச் செய்வார்களென்பது திண்ணம்.

இப் பொன்மலையில் குடியேறியிருக்கும் செங்குந்த குடும்பங்கள் 22. ஒர்க் மானேஜர் ஆபிசில் கிளார்க்காக இருப்பவரும், இக்குடும்பங்களில் ஒன்றைச் சார்ந்தவருமாகிய திரு. G. சிவகுருநாத முதலியாரவர்கள் செங்குந்தர் முன்னேறவேண்டுமென்பதில் நிறைந்த ஆர்வமும், ஒற்றுமையை நிலைநாட்ட வேண்டுமென்ற நல்லெண்ணமும் படைத்தவர். அவர்கள் கூடிய சீக்கிரம் இவ்வூரிலும் ஓர் கிளைச் சங்கம் ஸ்தாபிக்க முயன்று வருகின்றனரென்பதைத் தங்கட்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்,
ம. வீரபத்திர முதலியார், பொன்மலை,

குறிப்பு:—பொன்மலையில் குடியேறியுள்ள குடும்பங்கள் அனைத்தும் பல ஊர்களிலிருந்து வந்து சமீபத்தில் குடியேறினவே. அவர்களுக்குள் ஒற்றுமையும் ஊக்கமும் நிறைந்திருப்பதுகாண நாங்கள் பெரிதும் சந்தோஷிக்கின்றோம். நண்பர் அறிவித்தபடி கூடிய விரைவில் சங்கங் காணுவாராக.

வேற்றினத்தவர்கள் அங்கு நமக்கு உணர்ச்சியை உண்டாக்கவேண்டுமென்ற எண்ணத்தோடுதான் சீட்டை ஆதரிக்க மறுத்தனரென எண்ணுகின்றோம். அது குறித்து கவலை வேண்டாம். மற்ற அநேக ஊர்களில் பிராம்மணர், செட்டியார் முதலிய மற்ற இனத்தவர்கள் பல புத்தகங்கள் விற்றுதவியுள்ளனர். ஆதலின் இச்சீட்டு எல்லாராலும் ஆதரிக்கப்பட்டே வருகின்றது. நமது நண்பரது ஊக்கத்திற்கும் உபகாரத்திற்கும் எமது நன்றி உரித்தாகுக.

ப—ர்.

---

குருவராஜப்பேட்டை, 4—9—29

அமைச்சரவர்கள் திவ்விய சமூகத்திற்கு,

கருணை வள்ளல்காள்! இப்பரதகண்டத்தின் கண் கணக்கிலடங்காச் சமூகங்கள் இருக்கின்றன. இச் சமூகங்களில் சில முன்னேற்றமடைந்தவை, சில பின்னடைந்திருப்பவை, சில தாழ்த்தப்பட்டு தீண்டப்படாதவை. எனினும் தற்சமயம் பெரும்பாலும் எல்லா சமூகமும் முன்னேற்றத்திற்கான வழிகளைக் கண்டுபிடித்துக் கிளர்ச்சி செய்துகொண்டு வருகின்றன. அவர்கள் பல துறைகளிலும் முன்னேறிக் கொண்டு வருகிறார்கள். நமது சமூகமும் பின்னடைந்து இருப்பவைகளில் ஒன்று என்றுணர்ந்த தாங்கள் செய்துள்ள கிளர்ச்சிக்கு செங்குந்த உலகம் தங்களுக்கு நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது என்றாலும் தற்சமயம் நமது சமூகத்தினர் பழையகாலக் குருட்டுத்தனமான அநாகரீக பழக்கவழக்கங்களைக் குரங்குப்பிடியாகப் பிடித்துக்கொண்டு நடந்து வருகிறார்கள் என்று சொல்வது மிகையாகாது. இவ்வித முரட்டுத்தனத்துக் கிடையே கட்சிப் பிரதிகட்சி என்ற போரால் அவர்கள் அடையும் அபஜயத்திற்களவில்லை. தற்காலத்துக் கொவ்வாத இச்செயல்களைக் கண்ட ஒவ்வொரு வாலிபரது மனமும் வருத்தமடையாமலிருப்பதற்கில்லை.

ஆனால் சுதந்திர தாகமுள்ள வாலிபர்கள் இவைகளைப் பொருட்படுத்தாமல் தங்களுடைய முன்னேற்ற மார்க்கங்களை செவ்வைப்படுத்துவதே அவர்களது கடமையாகும் என்பது எனது அபிப்பிராயம், என்னுடைய கவலை என்னவெனில் நமது சமூக வாலிபர்கள் கூட்டத்தில் "வாலிபர் இயக்கம்" என்ற விஷயத்தைப் பேச வேண்டும் என்ற நோக்கம் எனக்குண்டு. ஆனால் இவ்வித சந்தர்ப்பத்தை கூடிய சீக்கிரத்தில் காஞ்சீபுரத்தில் நடக்கும் மகாநாட்டில் அளிப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு

தற்சமயம் எங்களது கிராமத்தில் நடந்திருக்கும் நிகழ்ச்சிகளைக் குறித்து தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தினால் கீழ்க்கண்ட விஷயங்களை வரைகிறேன். செங்குந்தகுல திலகர்களே! இதுகாறும் எங்களது கிராமத்தில் இரண்டு கக்ஷிகள் இருந்துகொண்டு வருகின்றன என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம், ஆனால் இப்போது மூன்று கக்ஷிகள் இருக்கின்றன. இதில் மூன்றாவது கக்ஷியினுடைய விஷயத்தைப்பற்றி எழுதுகிறேன்.

நமது பெரியோர்கள் நாடுகள் என்று வகுத்து ஒவ்வொரு நாட்டிற்குக் கீழ் சில கிராமங்களை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அதுபோல் எங்களது கிராமம் சோளிங்கபுர நாட்டைச் சேர்ந்தது. இந்நாட்டிற்குக் கீழிருக்கும் வெங்கனூர் கிராமத்தில் யாரோ ஒருவர் ஏதோ சில தவறுதல் செய்ததாகவும் அதற்காக அவரை நாட்டில் நீக்கிவிட்டார்கள். எங்களது கிராமத்தில் ஒரு கலியாணம் நடக்கவேண்டியிருந்தது. அக்கலியாணத்திற்கு வெங்கனூரிலிருக்கும் அம்மனிதனிடம் பெண் வாங்கவேண்டியிருந்தது. பெண்ணை வாங்கி எங்கள் கிராமத்துப் பிள்ளைக்கு திருமணத்தை முடித்துவிட்டோம். அப்பிள்ளையின் சகாயத்துக்காக நாங்கள் சேர்ந்தோம். அதனால் யாங்களும் நீக்கப்பட்டோம். நாங்கள் 7, 8 வீடுகள் இருப்பதாலும், எங்களுக்கு வேண்டியவர்கள் எல்லாம் நாட்டாரோடு சேர்ந்திருப்பதாலும், எங்களுக்குப் பாவு தோய்தல் முதலான காரியங்களுக்குக் கஷ்டமாய் இருப்பதால் நாம் எல்லோரும் ஒன்றாக இருக்கலாம் என்று எங்கள் கிராமத்தாரோடு சொன்னால் அவர்கள் சோளிங்கபுரத்தவர்களிடம் முறையிட்டுக் கொள்ளும்படியாகவும் அவர்கள் ஒத்துக் கொண்டால்தான் முடியும் என்றும் சொல்லுகிறார்கள். அவர்களைக் கேட்டால் யாங்கள் யாவரும் சோளிங்கபுரத்துக்குப்போய் அவர்கள் காலில் விழுந்து நபர் ஒன்றுக்கு 2-2-0 அபராதம் செலுத்தவேண்டுமாம். என்னே இக்கொடுமை. இப்படியும் ஒரு நாடு இருக்குமா? இதற்குக் கீழ்ப்படிந்துதான் நடக்க முடியுமா? தவறு செய்தல் மனிதர்களுக்கு வழக்கந்தான். அவர்களுக்குப் புத்திமதி சொல்லித் திருத்தவேண்டியது பெரியோர்களின் கடமை. அவ்வாறின்றி அன்னியர்கள் கண்டு நகைக்கும்படியான தற்காலத்துக்கொவ்வாத காரியங்களை நடத்துவது பெரியோர்களுக்குத் தகுந்ததல்ல. இவ்வித ஜாதிக்கொடுமையையும், சமூகக் கட்டுப்பாட்டையும், சுதந்திரமற்ற தன்மையையும் கண்டு எங்கள் மனமானது அடையும் வருத்தத்திற்களவேயில்லை சுதந்திர தாகமும், அபிமானமும் நிறைந்து முன்னேற்றத்திற்கான இரத்தம் வேகமாக உஷ்ணத்துடன் ஓடிக்கொண்டிருக்கும் வாலிபர்களாகிய எங்களுக்கிருக்கும் வருத்தத்திற்களவேயில்லை. இக்கொடூர பழக்கவழக்கங்களைக்கொண்ட இச்சமூகத்தை எங்கள் மனம் வெறுக்கிறது. இக்கொடுமைகளைக்கண்ட தாங்கள் எவ்வளவோ பிரசாரம் செய்தும் இவர்கள் நல்வழிப்பட்டார்களில்லை. ஆனால் யான் தலைச்சங்கப் பிரசாரகர்கள் எங்கள் கிராமத்துக்கு வருவார்கள் என்று எதிர்பார்த்தேன். வந்தால் அவர்களுடன் சொல்லி, இக்கட்சிகளை ஒன்றுபடுத்தும்படியாகக் கேட்டுக்கொள்ளலாம் என்று இருந்தேன். ஆனால் அவர்கள் வரவில்லை. இக்கவலை இன்னும் எங்களை வருத்துகின்றது. எங்கள் கிராமம் 400, 500 வீடுகளையுடையதாக இருந்தும் வாழைப்பந்தல், கலவை முதலிய கிராமங்களுக்கு வந்திருந்த பிரசாரகர்கள் எங்கள் கிராமத்துக்கு வாராதது என்னமோ தெரியவில்லை. இதுவும் எங்கள் துரதிருஷ்டமே.

ஆனாலும் இச்சமயம் எங்கள் கிராமத்தவர்கள் எல்லோரும் ஒன்று சேர்வதற்காகத் தூதுவர்களை ஒருவர்க்கொருவர் அனுப்பிக்கொண்டு வருகிறார்கள். ஏதோ சில தகவல்களால் இவர்கள் ஒன்றுசேர மறுத்துக்கொண்டு இருக்கிறார்கள். இவ்வித கொடுமைகளுக் கிடையே எங்கள் கிராமத்தில் 8 9-2?ல் சாவுத்திரை என்ற திருவிழாவில் களிமண்ணால் செய்த அம்மன் போரால் 400 ஆடுகளும் 100, 150 கோழிகளும் சில பன்றிகளும் பலியிடப்பட்டன. என்னே இவ்வறியாமை அற்பத்தனமான இழிதகைமையுள்ள அநாகரீக பழக்க வழக்கங்களை இன்னும் கையாடிவரும் இவர்களை என்னதான் செய்வது என்று தோன்றவில்லை. வீதி வழியே நடந்தால் ஆடுகள் கத்தும் ஓசையைக் கேட்டு எங்கள் மனம் சகிக்கமுடியவில்லை. இவ்வித துர்ப்பழக்கங்களைக் கண்ட முன்னேற்ற தாகமுடைய வாலிபர்களாகிய யாங்கள் எப்படித்தான் பொறுக்க முடியும். நாங்கள் கடைசியாக கண்ட நேர்வழி என்னவென்றால், இவ்வித நிகழ்ச்சிகளைத் தங்களுக்கு அறிவித்துவிட்டு ஜாதிக் கொடுமையும், சமூகக் கட்டுப்பாடும் அநாகரீக பழைய வழக்கங்களுமுடைய இச்சமூகத்தில் இருப்பதைவிட ஜாதிப்பிரஷ்டம் செய்துகொண்டு முஸ்லீம் மதத்துக்கோ, கிறிஸ்துவ மதத்துக்கோ போய்விட வேண்டும் என்பதேயாகும். சமத்துவத்தை நிலைநாட்டவந்த பெரியோர்களாகிய நீங்கள் அறிவினும், ஆண்டினும் சிறியோனாகிய எங்களது விண்ணப்பத்துக் கிணங்கி இக்கடிதம் கண்டவுடன் எவ்வளவு வேலையாக இருந்தாலும் ஒதுக்கிவைத்துவிட்டுத் தற்போது நடக்கப்போகும் பலிக்கொடுமையை நீக்கி சமத்துவத்தை நிலைநாட்டி கக்ஷிகளை ஒற்றுமைப்படுத்த உடனே வரும்படியாக யான் உங்களை எங்கள் ஊர் வாலிபர்கள் சார்பாகப் பன்முறை நமஸ்கரித்து கேட்டுக்கொள்ளுகிறேன்,

நீங்கள் தற்போது வந்து இவ்வாடுகளின் உயிர்களைக் காப்பாற்றியும், கக்ஷிகளை ஒற்றுமைப்படுத்தியும் வைப்பீர்களென நாங்கள் எங்கள் மனப்பூர்வமாக நம்புகிறோம். இல்லாவிடில் யாங்கள் ஜாதிப்பிரஷ்டம் செய்துகொள்ளத் தயார். இவ்வளவும் இவர்கள் செய்யும் அநியாயங்களைக்கண்டு சகிக்கமுடியாமல் எழுதினேன். தயவு செய்து வந்து காரியங்களை முடிக்கும்படியாக இன்னொருமுறை கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்:
தங்கள் அன்புள்ள நண்பன்,
S. M. வீராசாமி,
செங்குந்த வாலிபர் சங்க அங்கத்தினன்,
குருவராஜப்பேட்டை.

குறிப்பு:—நமது நண்பர் எழுதிய இக்கடிதத்தைக்கண்டு வியப்பும் வருத்தமு மடைகின்றோம். தமக்கு சமூக முன்னேற்றத்தில் உள்ள ஆர்வமும், தாமும் தமது நண்பர்களிற் சிலரும் கிராமத்திலிருந்து விலக்கப்பட்டதனால் நேர்ந்த வருத்தமும், அதனால் தமது தொழில் முதலியவற்றிற்கு நேரும் இடையூறுகளைக் கண்டு பொறுக்க முடியாமல் பொங்கி எழும் ஆத்திரமும் சேர்ந்து இக்கடிதத்தை எழுதுமாறுத் தூண்டிய தென்பதை இதனைப் படிப்போரனைவரும் நன்குணரலாம்.

இவ்வூரில் இருகட்சிகள் உண்டென்பது எங்கட்குத் தெரியாதென்றாலும் செங்குந்தர் வதியும் கிராமங்களில் பெரும்பாலும் கட்சிகள் இல்லாத கிராமங்கள் கிடைப்பதருமை என்பதை நன்கறிவோம். ஆனால் நாட்டுக் கட்டுப்பாடு இன்றியமையாததே யாகும். பெரியோர்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டு நாடுகளை வகுத்துள்ளனர். அதனால் ஏற்பட்ட நன்மைகளும் பல. அந்நாடுகளில் ஏதாவது குறைகள் இருக்குமானால் அவற்றைமட்டும் களைதல்வேண்டும்.

நிற்க, கடிதத்தில் குறிப்பிட்ட கட்சித் தொடக்கம் இன்னதென்பது தெரியாது. அக்கட்சியை ஒழித்து, குலமுன்னேற்றத்தின் பொருட்டு ஒற்றுமைப்பட முயலவேண்டுவது இருகட்சியைச் சேர்ந்த அறிஞர்களின் கடமையாகும், ஆதலின், அவ்வூர்ப் பெரியோர்கள் கட்சிகளைச் சமாசப்படுத்த உடனே முனைதல்வேண்டும். தற்போது நமது சமூகம் உள்ள நிலையில் இருகட்சியிலும் தாராள சிந்தையோடு விட்டுக்கொடுத்து ஒற்றுமைப்பட வேண்டும். குரங்குப்பிடியாய் தாங்கள் நினைத்ததையே சாதிக்க வேண்டுமென எவரும் நினைத்தல் தகாது. ஒற்றுமைப்படச் சிலர் முயலுவதாகவும் தெரிகின்றது. இக்கடிதம் எழுதிய நண்பரும் நமது சமூக உணர்ச்சி ததும்பியவராகவும் ஒற்றுமைப்படும் நன்னோக்கங் கொண்டவராகவும் காணப்படுவதால் வெகுவிரைவில் இறைவன் ஒற்றுமைப்படுத்தி வைப்பானெனவே வழுத்துகின்றோம்.

ஆடு கோழிகளைப் பலியிடுதலைப்பற்றி நமது நண்பர் குறிப்பிட்டவை உண்மையாயின் நாங்கள் மிக வருந்துகின்றோம். நமது முருகப் பெருமானது வாகனமாகவும், கொடியாகவும் விளங்கும் ஆடு கோழிகளைப் பலியிடுவோர் பல்லாயிரமுறை திருத்தணிகை சென்று முருகனை வழிபடினும் அவன் அருள் கிடைக்கப் பெறுவரோ! பெறுரென்பது முக்காலும் உண்மை. பலியிடுவோரைக் கண்டு நாகரீக உலகம் நகைப்பதோடு இறைவனும் வெறுக்கின்றான். ஆதலின், நம்மவர் இக்கொடிய வழக்கத்தினை உடனே விலக்குவாராக,

கடைசியாக நமது நண்பர் துன்பம் சகிக்க முடியாத ஆத்திரத்தினால் இனி ஜாதிப்பிரஷ்டம் செய்துகொண்டு முஸ்லீம் மதத்திற்கோ கிருஸ்தவ மதத்திற்கோ போய்விடத் தீர்மானிப்பதே நியாய வழியெனக் கூறுவது மிகவும் வருந்தத்தக்கது. இதனைப் பெரிதும் கண்டிக்கின்றோம். கிருஸ்தவ மதத்திலும் ஜாதிப்பேய் தலைவிரித்தாடுவதை நண்பருக்கு ஞாபகமூட்டுகின்றோம். அவ்வூர் ஆன்றோர்கள் இனியும் இக்கட்சிகளை வளர்த்துச்சென்று நமது மக்களை கிருஸ்தவ மதத்திற்கும் மகம்மதிய மதத்திற்கும் பலிகொடாமல் உடனே விட்டுக்கொடுத்து தாராளமாய் கிராமத்தில் சேர்த்துக்கொண்டு நமது சமூக முன்னேற்றத்தில் அனைவரும் ஒன்றுபட்ட உணர்ச்சியோடு ஈடுபடுவாராக. நமது பிரசாரகர் கூடிய விரைவில் அங்குவருவார். அதற்குள் அனைவரும் ஒற்றுமையுடன் விளங்குவரெனவே எண்ணுகின்றோம். ப-ர்.

## சுகாதாரப் பகுதி

### க்ஷய ரோகம்

### (Tuberculosis or Consumption)

(தொகுதி 3, 352ம் பக்கத் தொடர்ச்சி)

க்ஷயரோகம் வந்த பிறகு சிகிச்சை முறைகளை (Curative measures) தகுந்த வைத்தியர்களைக் கொண்டுதான் பார்க்க வேண்டியிருக்கின்றது. அங்ஙனம் அவர்கள் தயவைத் தேடியும், நீடித்த நாட்கள் அவர்கள் சொற்படி நடந்தும், மருந்திற்கும் செல்வப் பெருக்கிற்கும் அவர்கள் கேட்ட பொருளுதவி செய்தும் தாங்கள் படமுடியாத கஷ்டங்களைப் பலவிதங்களிலும் அனுபவித்தும் வியாதி நீங்குவது மதில்மேல் பூனைதான்.

ஆரம்பத்திலேயே சுவாச கோசங்களுக்கு அனுகூலமாகிய சுத்த சத்துள்ள ஆகாராதிகளை உட்கொண்டு இந்நோய்க்குப் பிரதிகூலமாகிய மார்க்கங்களை அனுசரித்து வரல் நலம். இன்னும் காட்லிவர் ஆயில இமல்ஷன் (Cod Lever Oil Emulsion) பெல்லோசுரப் (Fellows syrup) இவ்விரண்டையும் தகுதியான அளவுகலந்து சாப்பிட்டுவர நாளடைவில் இந்நோய் போய்விடுகிறது என்று பலர் அனுபோக சித்தமாகச் சொல்லக் கேட்டுள்ளேன்.

சிறக, இந்நோயாளியின் மூலமாக இக்கொடிய ரோகம் மற்றவர்களுக்குத் தொத்தாமலிருக்கத் தக்க ஏற்பாடுகளை இத்துடன் அனுசரித்தேதான் வரவேண்டி இருக்கிறது. அவை வருமாறு.

இவ்விஷநோய் இவ்வியாதியஸ்தன் மூலமாகத்தான் மற்றவர்களுக்குத் தொத்துகின்றது என்று பல பண்டிதர்கள் பலவிதங்களிலும் பரீக்ஷை செய்து முடிவுசெய்திருப்பதை அவரவர்கள் எழுதிய நூட்களால் அறியலாம்.

ஆகவே இவ்வியாதியஸ்தனைத் தன்னந்தனியாக, பரிசுத்தக்காற்று, வெளிச்சம் உள்ள தனியறையில் இருக்கும்படி செய்யவேண்டும். அவ்வறையின் கதவுகள், ஜன்னல்கள் எக்காலங்களிலும் மூடாமல் இருக்கட்டும். அங்கு நோயாளிக்குவேண்டிய முக்கியமான சாமான்கள் தவிர வேறு எவ்வித வஸ்துக்களும் இருக்கக்கூடாது. அதை மருந்துகலந்த (hycol lotion) லோஷனினால் பன்முறை சுத்தஞ்செய்துகொண்டே இருக்க வேண்டும். லோஷனில் நனைத்த துணிகளினால் சுத்தஞ்செய்தால் அதைக் கொதிக்கவைத்த வெந்நீரில் 5 அல்லது 10 நிமிஷங்கள் வேகவைத்துத் துவைத்து வெயிலில் உலர வைக்கவேண்டும். சூரிய வெப்பம் கிருமிகளைக் கொன்றுவிடுகிறபடியால் நோயாளி தொட்ட ஒவ்வொரு வஸ்துவையும் நன்றாக ஞாயிறுரசமி படும்படி செய்தல் நலம். அவருக்கென்றே தனியாக, சுலபமாகப் பற்றிக் கழுவக்கூடிய பாத்திர முதலானவைகளை வைக்கவேண்டும். இவ்வறையில் வேறு யாரும் நித்திரை செய்யக்கூடாது. அவருடைய படுக்கை, துணி முதலானவைகளை அடிக்கடி லோஷனில் நனைத்துக் கொதிக்கவைத்து வெயிலில் உலர்த்தவேண்டும்.

இன்னும் விஷக்கிருமிகள் இவ்வியாதியஸ்தன் உமிழும் உமிழ்நீர் கோழை முதலானவைகளின் மார்க்கமாக வெளி வருகிறதென்று கூறியது ஞாபகத்திற்கு வரலாம். எச்சில் கோழை உலர்ந்த பிறகு இவற்றிலுள்ள கிருமிகள்



அங்குள்ள காற்றில் கலக்கின்றன. காற்றினூடே மனிதருட் செல்கின்றன. இதை அனுசரித்தே, மனிதர்கள் பற்பல இடங்களில் துப்புவது துர் ஆசாரமென்று ஆன்றோர் கூறியுள்ளார். சர்க்காரும் நிபந்தனைகள் செய்துகொண்டே வருகிறார்கள். ஆகையால் நோயாளிகள் கண்ட இடங்களிலும், வீடுவாசல்களிலும், வண்டிகளிலும், தெருக்களிலும் துப்புவதை அறவே விட்டுவிடத்தான் வேண்டும். மற்றென்ன செய்வதென்றால், வாயினின்றும் வருபவைகளை லோஷன் கலந்த பாத்திரங்களில் உமிழ்ந்து தூரத்தில் கொட்டி அப்பாத்திரங்களை பன்முறை சுத்தஞ்செய்வது மெத்த அவசியம்.

இதை முக்கியமாக வீடுகளிலும், தொழிற்சாலைகளிலும், வெகு சிரத்தையோடு கவனித்து வரல் மெத்த உத்தமம். தும்மும்போது தன் அண்டை அயலில் இருப்பவர்கள்மீது படாதபடி கவனிக்கவேண்டியது முறை. இத்தனை கஷ்டமேன் விழுங்கிவிடலாமே என்றால் இந்நோய் வயிற்றி (stomach) லும் குடலிலும் (Intestines) பரவி வருத்தும். லோஷன் கிடைக்காதவர்கள் காகிதத்திலோ அல்லது கந்தைகளிலோ உமிழ்ந்து கொளுத்தி விடுவதையாவது அனுசரிக்கவேண்டும்.

இத்தகைய முறையை அனுசரிப்போர் பிறரிடத்தில் பரோபகார சிந்தையுள்ளவர்களாகின்றனர். தான் கெட்டாலும், பிறர் நன்மையே சிந்திக்கும் சிந்தை உள்ளவர்களுக்கு சர்வ ஜீவதயாபரர் நன்மையைப் பயக்காமல் கைசோரவிடவேமாட்டாரென்பது உண்மை.

இந்நோய் ஸ்திரீகளுக்கு இருந்தால் அவர்கள் தங்கள் குழவிகளுக்குப் பால தரக்கூடாது. அவ்வீட்டிலுள்ள குழந்தைகட்குப் பசும் பால் கொடுத்தாலும் அப்பாலை நன்றாய்க் காய்ச்சித்தான் கொடுக்கவேண்டும்.

இவைகளையெல்லாம், வீடுகளில் சாமானியர்கள் அனுசரிப்பது கடுமையிலும் கடுமையாகையால் இக்கால் துரைத்தனத்தாரால் ஏற்படுத்தியுள்ள (Tuberculosis Hospital) டியுபர்குலோஸிஸ் ஆஸ்பத்திரியில் இந்நோயாளிகளை விட்டுவைப்பது தங்களுக்கும் பிறருக்கும் நன்மையைப் பயக்கும்.

இவ்வியாதியஸ்தனால் இந்நோய் பலருக்குப் பரவாமல் தடுக்கும் உபாயங்களை வரைந்தோம். இனி சில இடங்களைப்பற்றியும் பிரஜைகளைப்பற்றியும் கவனிப்போம்.

ஒருவன் இந்நோய்க்கு ஆகாரமாகாமலிருக்க விரும்பினால், பரிசுத்தமான இடம், தாராளமான காற்று வீசும் ஆகாயம், ஜனமிகுதியற்ற தூய வெயிலுள்ள வாசஸ்தலம், அயலில் அசுபரவும் தொழிற்சாலைகள் நீங்கிய வீடுதி முதலியவைகள் அத்தியாவசியம். ஏனெனில் இயற்கையில் கடவுள் சிருஷ்டிக்கிரமம் இருப்பதைப் பாருங்கள். ஞாயிற்றின் கதிரொளியில் தாவரங்கள் தங்களுக்கு வேண்டிய உணவாகிய கரியமிலவாயு (Carbondioxide)வை உட்கொண்டு சுத்தவாயு (Oxygen) வை வெளிவிடுகின்றன. ஜீவர்களோ சுத்தவாயுவை உட்கொண்டு, கரியமிலவாயுவை வெளியில் தள்ளுகின்றனர். ஆகவே தாவரங்களுக்கும், ஜீவர்களுக்கும் பரஸ்பர ஜீவிக்கும் சம்பந்தம் ஏற்படுத்தி இருப்பதைக் காணலாம். இங்ஙனம் ஆகுங்கால் ஒருவன் சுகஜீவியாக இருப்பதற்குத் தன் வாசஸ்தலத்தைச் சுற்றிலும் செடிகள், மரங்கள் முதலானவைகளை வைத்து விர்த்தி செய்ய வேண்டி இருக்கிறது. மேற்கூறிய இடவமைதி நகரத்தில் செல்வந்தர்களுக்கே சற்று துர்லபமாக இருக்கிறதென்றால், சாமானிய ஏழை ஜனங்களின் நிலைமை கவனிக்கத்தக்கதே.

ஆயினும் வியாதியஸ்தனை நகரத்தில் வைத்திராமல் தகுதியான நாட்டை நாடிச் சென்று அங்கு வியாதி சொஸ்தமாகிற பரியந்தமாவது தங்கவைப்பது தகுதியாகும்.

சாதாரணமாக நகரத்தில் வசிக்கும் சாமானிய ஜனங்கள் சௌகரியக் குறைவினால் நோய் வாய்ப்பட்டு வருந்துகிறார்களே ஒழிய கிராமவாசிகள் அதிகமாக இத்தகைய அவஸ்தைக்குள்ளாகாமலிருப்பதைக் கண்ணுறலாம். ஆனாலும் இது பொது விதியேயாகும்.

நகரத்திலுள்ளவர்களும் சுகாதார ஒழுக்கங்களை சரிவர கவனித்து நடந்து வருவதால், நாட்டின் சுகத்தைவிட பதின்மடங்கு சுகம் அடையமுடியாது இருக்கின்றது. கிராமவாசிகள் கிராமம் தப்பி சுகாதார ஒழுக்கங்களை அனுசரியாது மாறுபட்டு நடப்பரேல் அவர்கள் வாழ்வும் நரக வாழ்வுதான்.

இன்னும் இவ்வியாதியின் ஓர் அற்புத வல்லமையைக் கவனிக்கவேண்டி இருக்கிறது.

இக்கொடிய வியாதி, வைசூரி, வாந்திபேதிகளைப்போல் அப்பொழுதே ஒருவருக்கு நேரிட்டு, வெட்டு ஒன்று துண்டு இரண்டாக்காமல், ஒருவருடலில் புகுந்து, கஷ்டத்துக்குள்ளாக்கி, கஷ்டப்படுத்தி விடுவதுடன் தேகத்தில் ஊறி அவன் பெண்டு பிள்ளைகளுக்கும் ஆஸ்தியாகி விடுகின்றது. அதாவது ஒரு குடும்பத்தில் க்ஷயரோகம் இருந்தால் அவன் கால்வழியிலுண்டான சந்ததியாரிலும் சிலர் யாதாமொரு வயதில் இக்நோயால் வருந்துவதைப் பார்த்துங் கேட்டும் இருக்கிறோம்.

தற்சமயம் கூறியவை மாம்சபக்ஷணிகளுக்கும், மதுபானஞ் செய்பவர்களுக்குமே முக்கியமாக மிக்க ஆபத்து

எங்ஙனமெனின் கிருமிகள் புதிதாகக் காற்றுடன் நுழைந்து சுவாச கோசங்களைக் கெடுப்பதால், உடனே கெடுதி விளைவித்து வெளிக்காட்டி விடுகின்றன. இத்தகையோர் ஆரம்பத்திலேயே வெகு ஜாக்கிரதையாக சுகாதார ஒழுக்கங்களை அனுசரித்து சிகிச்சை செய்து வருவரேல் வியாதி சொஸ்தமாக இடம் உண்டு.

எம். பரமகுருநாத முதலியார்.

செங்குந்தா கல்வி நிதிச் சீட்டை ஏராளமாய் விற்று
ஏழைச் செங்குந்த மாணவர்களை ஆதரியுங்கள்.

# நமது மித்திரனுக்கு

## நான்காம் ஆண்டு தொடக்கத்தில்

பாக்கியில்லாமல் சந்தாவைச் செலுத்திவிட்ட
ஆறுயிரம் சந்தாதார்களாவது இருப்பார்களானல்
நமது மித்திரனை
பளபளப்பான கிளேஸ் காகிதத்தில் ஆப்டோன் படங்கள், சித்திரப் படங்களுடன்
வெளியிடத் தீர்மானித்துள்ளோம்.

இதன் நிச்சயத்தை அறியும்பொருட்டு
சென்றமாத மித்திரனில் தெரிவித்தபடி சில ஊர்களுக்கு இம்மாதப் பத்திரிகையை
வி. பி.-யில் அனுப்பியுள்ளோம்.

அடுத்த மாதத்திற்குள் சந்தா செலுத்தாத மற்ற ஊர் அன்பர்கட்கு
அடுத்த சஞ்சிகை வி. பி.-யில் அனுப்பப்படும்.

வி. பி.-யினை ஏற்று ஆதரிக்க வேண்டுகின்றோம்.



# ஆன்றோர் அமுதமொழிகள்

உன்னுடைய நல்ல அதிர்ஷ்டகாலத்தில் தாழ்மையாக இரு. உன்னிடக் குறைந்த அதிர்ஷ்டவாளிகளிடத்தில் (தகுதியற்றவர்களாயிருந்தாலும்) நல்லவனாக இரு. ஆசை அற்றதால் உண்டான நற்குணங்கள், அதிர்ஷ்டவசத்தால் வந்த ஜெயம், மூதாதைகளால் வந்த அந்தஸ்து இவைகளையுடைய உனக்கு மற்றவர்களிடம் அவமரியாதையாக இருக்க என்ன அதிகாரம் இருக்கிறது என்று நினை.

தாக்கரே.

* * * *

நன்மைக்காக உயிர்வாழ். ஆனால், நன்மையைப்போல் தோன்றி உன்னைத் தீமையாகிய படுகுழியில் வீழ்த்தக்கூடிய மாயவலைகளிடத்து எச்சரிக்கையாயிரு. உன்னுடைய நன்மையும் கோபமும் நீ உன் சகோதர மனிதர்களிடம் ஒற்றுமையாக நடந்து கொள்வதைப் பொறுத்திருக்கின்றது. ஒற்றுமைக்குத் தீங்கு செய்யக்கூடியனவெல்லாம் உனக்கே தீங்கு புரிவன. எனவே, ஒற்றுமைக்குப் பங்கஞ்செய்து உனக்கு அளிக்கப்பட்டிருக்கிற நன்மையை நீ பாழாக்கிக் கொள்ளாதே. ருஷ்யஞானி டால்ஸ்டாய்.

* * *

உயர்தரக் கல்வி இன்றியமையாதது. அவ்வுயர்தரக் கல்வியே விவசாயம், கைத்தொழில், வர்த்தகமாதியன பெருகுதற்குச் சாதனமாகின்றது. அறிவு வளர்ச்சி தடைபட்டால் தேசமோ சமூகமோ முன்னேற்றமடையாது. சகோதரர்களுக்கு மூளை உழைப்பும், சரீர உழைப்பும் போராக்கம் தருகின்றது. உண்மையில் கல்வியறிவுடையவர்கள் விசால புத்தியும் சமரச உணர்ச்சியும் ததும்பியவர்களாயிருப்பர்.

சர். சி. வி. ராமன்.

* * *

புத்தர் புகட்டிய நல்வழிகள்.

நல்வாழ்வு வாழாதவரது மயக்கமும், இளமையிற் பொருள் தேடாதவரது பதைப்பும் மீன் இல்லாத குளத்தில் கொக்கு ஒன்று வாடி நிற்பது போன்றனவாம்.

நல்வாழ்வு வாழாதவரது ஏக்கமும், இளமையில் பொருள் தேடாதவரது ஏமாப்பும், வெட்டவெளியில் எவின அம்பு போன்றன. சென்றதை நினைத்து வாட்டமுற்று நிற்பவர் அவர்.

தன்னலம் கோரும் மனிதன் ஒருவன் தன்னையே ஓயாது காவல் காக்கட்டும். அறிஞன் ஒருவன் தனது வாழ்வின் பெரும் பகுதியை தன்மீது காவல் காத்தே பயன் படுத்துகின்றான்,

முதலில் உன்னை ஒழுங்கு படுத்திக்கொள். பின்பு பிறருக்கு புத்தி புகட்டலாம். மேலோர் மாசற்றவர்கள் ஆவது அவ்விதந்தான்.

பிறரைத் திருத்த விரும்பும் ஒருவன், தன்னையே திருத்திக்கொண்டு கட்டுக்கு அடங்குவானாகில் அவனால் முடிவில் பிறரையும் அடக்கியாள முடியும். தன்னைத் திருத்துவதுதான் மெத்தக் கடினம்.

மனிதன் தனக்குத்தானே உதவி புரிந்து கொள்ளவேண்டும். வேறு யார் அவனுக்கு உதவி புரிவார்? அடக்கத்தாலேதான் மனிதன் தனக்குத்தானே பேருதவி புரிகிறான்.

குடியைக் கெடுக்கின்ற கோடாரிப்பிடி போன்றது தீமை. அது ஆணவத்திலே உதித்து ஆணவத்திலேயே வளர்ந்து அறிவிலியைத் தாக்குகிறது.

புகை தீயினின்று உதித்து தீயைச் சூழ்ந்து அணைப்பதுபோல பகைவனால் விளையும் அல்லலை அகங்காரம் பிடித்த ஒருவன் தனக்குத் தானே விளைவித்துக் கொள்கிறான்.

தகாதகைச் செய்வதும் எளிது; தீங்கு செய்வதும் எளிது. நல்லனவும், பயன்படுவனவும் செய்வதுதான் துர்லபம்.

மேலோர்களது கொள்கையை மறுத்து துன்மார்க்கத்தில் நுழைபவர்கள் குலை குலையாய்க் கதிர் விட்டுத் தனக்குத்தானே கேடு விளைவித்துக்கொள்ளும் மூங்கில் போன்றவர்கள்.

கேடு விளைவித்ததால் நீ கிழோன் ஆனாய். கேடு விளைவியாததால் நீ புனிதன் ஆனாய். புனிதமும், புன்மையும் ஒருவனது உள்ளத்தைச் சார்ந்தவைகள். ஒருவன் மற்றொருவனால் புனிதன் ஆவது எங்ஙனம்?

தனக்குத் தீங்கு விளைவிக்கும் செய்கை பிறர்க்குப் பயன்படினும் செய்யற்க. தன்னைத் தூயோன் ஆக்கும் செய்கையே யாண்டும் செய்க.

# இளைஞர் பக்கம்

## உலகின் அதிசயங்கள்

ஒருநாள் சாயங்காலம் 5½-மணிக்கு நான் என்வீட்டு மேல்மாடி முற்றத்தில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்த வண்ணம் அஸ்தகிரியில் சாயும் அருணனையும், செவ்வானத்தையும் கிரணங்கள் செம்பொன் பிழம்புபோன்று மரங்கள் மேலும், வீடுகள் மேலும் பாய்ந்து எங்கும் இனிமையும் ரம்மியமுமான காட்சி அளித்திருந்ததையும் பார்த்து மனம் ஆநந்தத்தில் அழுந்தியது. தென்றற் காற்று ஜில்லென்று வீசி உடலைப் பரவசப்படுத்தியது. நகரத்தின் நெருக்கமான வீதிகளும் தூரத்தில் புகைக்கோபுரங்களை வெளியில் தள்ளிக்கொண்டிருந்த புகைப்போக்கிகளும் இந்த இனிமையான வெயிலின் அழகு பெற்று மிளிர்ந்தன. நான் என்னையே மறந்து இயற்கையின் அற்புதத்தையும், செயற்கையின் விநோதத்தையும் பார்த்து நின்றேன்.

அந்த நேரத்தில் பின் புறத்தில் யாரோ என்னைப் பிடிப்பது போலிருந்தது. என்னவென்று திரும்பிப்பார்த்தேன். என்னுடைய அண்ணன் மகனான தணிகைலிங்கம் என்னுடைய வேஷ்டியைப் பிடித்த வண்ணம் "என்ன அண்ணா! எனக்கு இன்று ஒன்றும் சொல்லிக் கொடுக்கவில்லை. நான் உங்களை ஒரு கேள்வி கேட்கப் போகிறேன் அண்ணா" என்று மழலைமொழியில் சொன்னான். அவனுக்கு வயது ஆறாகயிருக்கும். நல்ல சூக்ஷ்மபுத்தி உள்ளவன். ஒரு தரம் சொல்லிவிட்டால் அதை என்றும் மறக்கவே மாட்டான். அவன் வயதுள்ள மற்ற சிறுவர்களைப்போல் பிடிவாதமாவது, அழுகையாவது, பிதற்றலாவது அவனிடம் கிடையாது. எனக்கு அவன்மேல் மெத்தப் பிரேமை உண்டு. அவனுக்கும் என்னைக் கண்டால் ரொம்ப சந்தோஷம்; ஆடிக்குதித்துக் கொண்டே வருவான் அவனுடைய தாயனிடம் கூட அவ்வளவு பிரியமாய்ச் செல்லமாட்டான் அவனுக்கு நான் படிக்கும் விஷயங்களைத் தகுந்த விதமாக, உற்சாகமுண்டாமாறு சொல்லிக் கொடுப்பேன் தனக்குப் பாடஞ்சொல்லிக் கொடுக்காததால் அவன் வழக்கம்போல் என்னைத்தேடி ஓடிவந்துவிட்டான்.

"அண்ணா நான் ஒன்று கேட்கின்றேன்! அதற்குச் சரியான விடை எனக்குத் தெரிவிக்கவேணும்."

"என்ன தம்பி உனக்குத் தெரியவேண்டும்."

"அண்ணா, உலகத்திலேயே ரொம்ப பெரிய பொருள்—உயர்ந்த கட்டடமென்ன?"

இக்கேள்விக்கு உடனே என்னால் அவனுக்கு உத்தரமளிக்க முடியவில்லை. அப்போதே என் மனக்கண்முன் பிரமாண்டமான (பிரமிட்) கட்டடங்களும், உருவங்களும், சிலைகளும் ஸ்தூபிகளும் ஞாபகத்திற்கு வந்தன. அவற்றை அவனுக்கு விளக்கிக்காட்ட வேண்டுமென்ற அவா என்னுள்ளத்தெழும்பியது.

"அண்ணா! என்ன சும்மா இருக்கிறீர்கள். சொல்லுங்கள்: அதோ தெரிகிறதே அந்த (Light House) லயிட் ஹவுஸ் தான் உலகத்திலே உயர்ந்த கட்டடமோ?"

நான் தணிகைலிங்கத்திற்கு எகிப்திய பிரமிட் (Pyramids) சப்பிங்ஸ் (Sphing) உருவங்கள், கலாஸஸ் (Colossus) நமது தேசத்தின் அற்புத தாஜ்மஹால், குதுப்மினார் முதலியவற்றை விளக்கிக் கூறினேன். அவற்றை நமது மித்திரனின் பால்ய நண்பர்கள் உணருமாறு சுண்டு வரைய அவாவுகின்றேன்.

(தொடரும்)

E. V. S.

### அன்பர்கட்கு

சந்தா, கல்விநிதிச் சீட்டுத்தொகை யாதியன மணியார்டரில் அனுப்புவோர் மணியார்டர் கூபனில் ஒன்றுமே எழுதாமல் அனுப்பிவிடுகின்றனர். அத்தகைய மணியாடர்களின் தொகை அவர்கள் கணக்கில் வரவு வைக்கமுடியாமல் அமைத்தில் வைக்க நேர்கிறது. ஆதலின், இனி மணியார்டர் அனுப்புவோர் தொகையையும், தங்கள் பெயர் விலாசத்தையும் கூபனில் தெளிவாய் எழுதுமாறு வேண்டுகின்றோம்.



600 008.
129810

# நமது விநோத ஆசாரம்

## மலையாளத்தில் தாடிச் சண்டை

இது என்ன விபரீதம்! காலம் கலிகாலமல்லவா! ஆச்சாரம் அழிந்துபோகிறதே! செங்குந்த குலமே சீர் அழிந்துபோகும் போலிருக்கிறதே! பெரியோர் வழக்கத்தை கைவிட்டார்களே! பழையகாலத் தார்த்த புதியகால் வெட்டுகிறார்களே! ஐயோ! நம் கண்ணெதிரே இவ்வனியாயம் நடக்கப் பார்த்துக் கொண்டிருக்கலாமா? இது மகா பாவமல்லவா! இங்கிலீஷ் படிப்பால் உண்டாகும் அறிவு இதுதானோ! படித்தவர்களுக்கு புத்தி மழுங்கி விடுகிறது! அச்சிறுவன் B.A., B L., படித்தானே, புத்தி கொஞ்சமேனும் இல்லையே! இவனே தாடியை வெடுப்பதற்கு ஒத்தாசை செய்கிறானே! இதுதானா கல்வியின் பயன்! இப்பெரும் பாபத்தைச் செய்த இவனுக்கு என்ன துன்பம் நேரிடுமோ! இது மாத்திரமா! தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் கௌரவப் பிரசாரகர்களாக வந்த இரண்டுபேரும், கொல்லங்கோட்டு முத்துக்குமாரசாமி முதலியாரும், சொக்கலிங்க முதலியாரும் கூட இந்த அநாகரீகமான பழக்கத்தை விட்டுவிட வேண்டுமென்றார்களே! இது [illegible] கெட்டுப் போகிறதே என்று இவர்களில் ஒருவருக்கும் புத்தியில் படவில்லையே. என்பனபோன்ற பேச்சுக்களே (செங்குந்த) மலையாளமெங்கும் நாலுபேர் கூடுமிடங்களிலெல்லாம் நடந்து வருகிறது. நடக்கவும், உறத்துப் பேசவும் முடியாத வயோதிகர்கள்கூட இப்பேச்சை எடுக்கும்போதே ஆத்திரம் அதிகரித்துப் பேய் பிடித்தவர்களைப் போல் வாலிபர்களைவிட பன்மடங்கு ஊக்கங் கொண்டு மேடுபள்ளம் தெரியாமல் குதிகுதியென்று குதித்துக் கூச்சலிடுகிறார்கள். தாடியை எடுத்த அநேக வாலிபர்களை ஜாதிப்பிரஷ்டம் செய்து விட்டார்கள்.

செங்குந்த குலாபிமானிகளே! அருமைச் சகோதரர்களே! எழுந்திருங்கள்! எழுந்திருங்கள்!! நாம் அநேக வருஷங்களாக நாகரீகம் குலாபிமானம், ஒழுக்கம், அறிவு இவைகளில்லாத நித்திரையிலிருந்து விட்டோம். இன்னும் உறங்குவது நமக்குத் தகுதியல்ல கண்களை விழித்துப் பாருங்கள். இந்தியா தேசத்திலுள்ள சமுதாயங்கள் பெரும்பாலும் முன்னேற்றப் பந்தயத்தில் மைல்கணக்காக முந்தி ஓடிவிட்டன. ஓடிக்கொண்டே இருக்கின்றன. நாம் இன்னும் ஒரு அடிகூட எடுத்துவைக்கவில்லை. இல்லை, பந்தயம் ஆரம்பித்திருப்பதையே நாம் இன்னும் அறியாதவர்களாயிருக்கிறோம். நமது தலைவர்களான திரு. ம. சண்முகசுந்தர முதலியார் M.A., L.T., திரு. சபாபதி வள்ளல் முதலியவர்கள் நாம் முன்னேற்றமடையும் வழியைக் காட்டும்பொருட்டுக் கதவைத் தட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவ்வழியில் என்ன கஷ்டம் உண்டானாலும் நீக்கிவிடுவதற்கு நமது மித்திரன் தயாராயிருக்கிறான்.

ஆகையால் சூரர்களை அழித்த வீரர்கள் வழித்தோன்றிய செங்குந்தவாலிபச் சிங்கங்களே! எழுந்திருங்கள்; சுற்றிப்பாருங்கள்; முன்னேற்றத்தில் அடி எடுத்து வையுங்கள்; நடவுங்கள்; வேகமாய் நடவுங்கள்; ஓடுங்கள்; அதிவேகமாய் ஓடுங்கள்; முன்னே ஓடும் மற்றைய இனத்தவரோடு சேர்ந்து ஓடுங்கள். கட்டாயம் அவர்களோடு சேர்ந்து போகத்தான் வேண்டும். இல்லையானால் அவர்கள் இனி நம்மை விடமாட்டார்கள், நாம் உறங்கிக்கொண்டிருந்தாலும் இழுத்துச் செல்லுவார்கள். அதனால் நமக்கு கைகால்களில் காயமுண்டாகும். உடம்பு புண்ணாகிவிடும். அதுமட்டோ! நம்மை எவரும் எள்ளி இகழ்வார்கள். நாம் இருந்த இடந்தெரியாமல் நசித்துப்போய் விடுவோம்.

நமக்காகப் பெரும்பாடு பட்டுவரும் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தை தெய்வமாகவும், நமது மித்திரனை வேதமாகவும் கொள்ளுங்கள். அவற்றை மறுத்து எதிர்ப்பவர்களுக்குப் பெரும் பாவமே சித்திக்கும் என்பதிற் சந்தேகமில்லை. தற்போது நமது சமூகம் நம் முன்னோர் ஆச்சாரத்திற்கு நேர் விரோதமான பல அநாகரீகப் பழக்கங்களை அனுசரித்து அங்

ஞானத்தில் ஆழ்ந்து கிடக்கிறது. அவற்றுள் மலையாளச் செங்குந்தர்களுக்குள்ளே வாலிபர்கள் கலியாணமாகிற வரையில் தாடி மீசைகளை எடுக்கக்கூடாது என்பதும் ஒன்று. இதற்காகத்தான் இவ்வளவு சண்டை. இது, முதல் முதல் கோயம்புத்தூர் ஜில்லாவிலிருந்து இங்கு வந்தது. தற்போது இப்பழக்கம் கோவை ஜில்லாவில் இல்லை. ஆனால் மலையாளச் சகோதரர்கள் மாத்திரம் விட்டாரில்லை. இதில் 'பச்சா பாளையத்தார்' என்னும் பிரிவினர்தான் கடுமையாக விருந்து நமது குலதர்மத்தைப் பாதுகாத்துவருவதாக எண்ணி யிருக்கிறார்கள். இருபது முப்பது வயதுவரையில் தாடிமீசை வளர்ப்பது தற்காலத்திய வாலிபர்களுக்குப் பிடிக்கவில்லை. சிலர் வயோதிகர் கட்டுப்பாட்டைமீறி தாடியை எடுத்துவிட்டார்கள். குலாச்சாரத்திற்கு (இதை நான்குல அநாச்சாரமென்றே சொல்லுவேன்) விரோதமாக நடந்த இவர்களைத் தள்ளிவைத்து விட்டார்கள். மற்றைய வாலிபர்கள் தாடி கூடாதென்ற கொள்கை யுடையவராயிருந்தும் வயோதிகர்களுக்குப் பயந்து தாடி வளர்த்து வருகிறார்கள். மீறி நடந்தவர்களுக்கு ஒத்தாசை செய்து நானும் குற்றவாளியானேன்.

வாலிபர்களாகிய நாங்கள் நம்மவர்கள் படித்து அறிவுடையவர்களாய் நல்லொழுக்கத்தில் நடக்கவேண்டும்; நம் குலாச்சாரத்திற்குப் பொருந்தாத கடவுளுக்கு ஆடு கோழிகளை பலி கொடுத்தல், கள்குடித்தல், வாலிபர்களை அநாகரீகமாக தாடியை வளர்க்கும்படி வற்புறுத்தல் முதலியவற்றை ஒழித்து நாகரீக வழியில் கடவுளை வழிபட்டு புகழோடு வாழவேண்டும் என்றுதான் சொல்லுகிறோம். தாடியை எடுத்துவிடுவதால் குலதர்மம் கெட்டுப்போகிற தென்பவர்களுக்கு மதுபானம் செய்தல் போன்றவை குலதர்மமென்று தோன்றுகிறதுபோலும். நாங்கள் சொல்லுவது சரியோ என்பதைப் பொது ஜனங்கள்தான் தீர்மானிக்கவேண்டும். தாடிக்கும் மீசைக்கும் இவ்வளவு ஆர்பாட்டம் செய்து மும்முரமான சண்டையிடுவோர் எக்காலத்தில் சீர்திருத்தமடையப் போகிறார்கள்.

கடவுள் கிருபையால் இதையும், இதைப் போன்றுள்ள மற்ற மூடப்பழக்கங்களையும் திருத்திக் கஷிகளை ஒழித்து ஒற்றுமைக் கொடியை நாட்டியும், கல்வியைப் பரவச்செய்தும், நாகரீகத்தைக் கைக்கொண்டும் நாம் முன்னேற்றமடைவோமாக.

C. P. ராமன் முதலியார் B.A., B.L.

குறிப்பு:—இவ்வியாசத்தைக் கண்டு நாம் மிக வியப்புறுகின்றோம். கல்யாணமாகின்ற வரையில் தாடி, மீசை வளர்த்தல் வேண்டுமென்னும் வழக்கம் அநாகரீகமானது; தற்காலத்தில் ஏனையோரால் எள்ளி நகையாடத் தக்கது; மிகக் கொடியது என்பதில் சந்தேக மில்லை. மற்றெங்கும் காணப்படாத இவ்வநாகரீக வழக்கம் உடனே நீக்கப்படவேண்டு மென்பதே எமது நிறைந்த விருப்பம்.

இவ்வழக்கத்தை ஒழித்துவிடுவதால் நேரும் தீமை என்ன? இதனை ஒழிக்க ஏன் ஒவ்வொரு செங்குந்தரும் பாடுபடக்கூடாது. இவ்வழக்கத்தை அனுசரிப்பதால் நமது சமூகத்திற்குப் பெருமையோ, மதிப்போ, நன்மையோ உண்டாகின்றதா. ஒருக்காலும் இராதென்பது துணிபு. இதற்குப் பதில் சிறுமையும், அவமதிப்பும், தீமையுமே நேருமென்பதுண்மை. எனவே, இதனை உடனே நீக்க முதியோர், இளைஞர், செல்வந்தர், ஏழை, வலியர், எளியர், நாட்டாண்மைக்காரர், பெரியதனக்காரர் சிரோமணிகள், முதலிய அனைவரும் பாடுபடவேண்டும். அவ்வாறு இவ்வழக்கத்தை விட தங்கட்கு விருப்பமில்லையென்றாலும், ஒழித்துவிட அவாவிநிற்போருக்குத் தடையாயிராமல் அவர்கள் விருப்பப்படி செய்துகொள்ளவாவது தாராளமாய் இசைதல் வேண்டும். இதற்கும் விரும்பாதார் நமது சமூக முன்னேற்றத்திற்குத் தடைகல் போன்றவர்களே என்பது எமது அபிப்பிராயம். கூடிய விரைவில் இக்கொடிய வழக்கம் நீங்கி இளைஞர் விருப்பம் ஈடேற இறைவன் திருவருள் புரிவானாக.

பத்திராசிரியர்.

---

சந்தா நெம்பர் ஞாபக மில்லாதவர்கள் தங்கள் விலாசத்திற்குப் பக்கத்தில் உள்ள நெம்பரைக் குறித்து வைத்துக்கொள்ளவும்.



16 OCT 1929

## புது உலகம்

### மோட்டார் வண்டி

மோட்டார் வண்டியானது தற்போது நகரவாசிகளுக்கே யன்றிக் கிராமவாசிகளுக்கும் சர்வ சாதாரணமாய் விட்டது. வெகு காலமாக உபயோகப்படுத்தப்பட்டுவரும் ரெயிலைக் காணாதவர்கள் இன்னும் அநேகர் இருக்கிறார்கள். ஆனால் கொஞ்ச காலத்திற்கு முன் வந்த மோட்டார் வண்டியை அறியாதார் ஒருவரு மில்லை. மோட்டார் வண்டி முதன் முதலில் சென்னை முதலிய நகரங்களில் உபயோகப்படுத்தப்பட்டபோது அது போகும்வழியில் ஜனங்கள் திரள்திரளாகக் கூடி அதை ஒரு பெரிய விநோதப் பொருளாகப் பார்த்தார்கள். சென்ற சில வருஷங்களாக மோட்டார் வண்டிகள் மூலைமுடுக்குகளிலுள்ள குக்கிராமங்களுக்கும் சென்று தோட்டி முதல் தொண்டமான் வரையில் எல்லோருக்கும் எவ்வளவு சௌகரியத்தைச் செய்து வருகிறதென்பதை நாமெல்லோரும் உணர்வோம். அதனால் அது ஆரம்பத்தில் எவ்வளவு ஆச்சரியத்தை நமக்கு விளைவித்த தென்பதையும், அவ்வியந்திர அமைப்பின் அருமைப்பாட்டினையும் முற்றிலும் மறந்துவிடவும் நேர்கிறது. முன் காலத்தில் நாட்கணக்கில் செல்லக்கூடிய இடங்களுக்கு இப்போது சௌகரியமாயும், உல்லாசமாயும் மணிக்கணக்கில் பிரயாணம் செய்வதற்கு அனுகூலமாயிருக்கிற மோட்டார் வண்டியைப்பற்றி நாம் கொஞ்சமாவது தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

மோட்டார் வண்டி தோன்றி 28 வருஷங்களே யாயினும் அது இந்தச் சொற்ப காலத்தில் எவ்வளவு ஆச்சரியப்படக் கூடியவாறு விருத்தியடைந்து நம்மால் உபயோகிக்கப்பட்டு வருகிற தென்பது அமெரிக்காவில் மாத்திரம் செய்யப்பட்டுள்ள மோட்டார் வண்டிகளின் எண்ணிக்கையைக் காட்டும் கீழ்க்குறித்த அட்டவணையால் ஒருவாறு விளங்கும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1909ௗ த்தில் செய்யப்பட்ட | | | வண்டிகள் | 127731 |
| 1924 | ,, | ,, | ,, | 3617602 |
| 1925 | ,, | ,, | ,, | 4336754 |

அமெரிக்காவிலுள்ள ஐக்கிய ராஜ்ஜியங்களிற்றான் தற்போது மோட்டார் வண்டிகள் அபரிமிதமா யிருக்கின்றன. அந்நாட்டிலுள்ள ஜனத்தொகையையும், மோட்டார் வண்டிகளையும் கணக்கிட்டுப் பார்ப்போமாயின் ஐந்து நபருக்கு ஒரு வண்டி வீதம் இருப்பதாகத் தெரியவரும். அந்த நாட்டைச் சார்ந்த கலிபோர்னியா ராஜ்ஜியத்தில் $2\frac{3}{4}$ ஆட்களுக்கு ஒரு வண்டி யிருக்கிறது. இதை வேறொரு விதமாகச் சொல்ல வேண்டுமாயின் உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் செய்யப்படுகிற மோட்டார் வண்டிகளில் நூற்றுக்கு 80 வண்டிகள் அமெரிக்காவிலேயே உபயோகிக்கப் படுகின்றன. இவ்விஷயத்தில் நமது நாட்டிற்கும் அமெரிக்காவிற்கும் உள்ள தாரதம்மியத்தைப் பாருங்கள். இதனால் இவ்விரு தேசங்களின் வளப்பத்தின் தாரதம்மியமும் விளங்குகிறது. அமெரிக்காவில் 2 நபர்களுக்கும் 5 நபர்களுக்கும் ஒரு வண்டியாயிருக்க லக்ஷக்கணக்கான ஜனத்தொகையுடைய நம சமூக முழுமைக்கும் சத்தத்திற்கு ஓட்டும் சில பஸ்கள் தவிர சொந்தத்திற்கு உபயோகிக்கப்படும் வண்டிகள் 5 கூட இராதென்றே சொல்ல வேண்டி யிருக்கிறது. இது நம் சமூகத்தினுடைய வளப்பமின்மையைத் தெரிவிக்கிறது.

பருத்தியை நூலாக்கி ஆடையாக நெய்யும் தொழிற்சாலைகளில் அளவிறந்த ஜனங்கள் வேலை செய்வது போல மோட்டார் வண்டிகள் செய்யும் சாலைகளிலும் லக்ஷக்கணக்கான ஆட்கள் வேலை செய்கிறார்கள். அவ்வாறு மோட்டார் செய்யும் தொழில் தற்போது உலகத்திலுள்ள மிகப் பெருந்தொழில்களுள் ஒன்றாக விளங்குவதற்குக் காரணம் என்னவென்னில் அறிவியல் நூல் முறைப்படி (Scientific Principles) பலவியந்திரங்களைக் கொண்டு மொத்த மொத்தமாக வியந்திர சாமான்களைக் கொண்டு செய்து மிகக் குறைந்த தொகைக்கு விற்பதேயாம். இயந்திர உதவியில்லாவிடினும் நாம் கைத்தறித் தொழிலை இந்த முறையில் அதாவது, வியந்திர நூலை மொத்தமாகத் தருவித்து நல்ல ஆடைகளை நெய்து மொத்தமாக விற்க ஆரம்பிப்போமாயின் நமக்கும் அதிக லாபம் கிடைக்கும். நல்ல துணிகளைக் கூடிய வரையில் குறைந்த

விலைக்கு வாங்கும் பொது ஜனங்களுக்கும் நம் பிக்கையுண்டாகும் என்பதை ஈண்டு ஞாபக மூட்டாமலிருக்க முடியவில்லை.

மோட்டார் வண்டியை முதல் முதலில் கண்டு பிடித்து உபயோகத்திற்குக் கொண்டு வந்தது பிரான்சு தேசத்தில் தான். 1885-ஆம் வருஷத்தில் காட்லியெப்டெய்ம்லெர் (Gattlieb Daimler) என்பவர் பெட்ரோல் உதவியால் தானாக ஓடும் யந்திரத்தை முதலில் கண்டு பிடித்தார். அவர் செய்த இரட்டை வண்டி இன்னும் அவர் பெயராலேயே வழங்கப்பட்டு வருகிறது. பின்னர் பான்ஹார்டு, லெவாசர் (Panhard and Lavasser) என்ற இருவர் அவரிடமிருந்து மோட்டார் செய்யும் உரிமையை விலைக்கு வாங்கினார்கள். இவ்விருவருள் லெவாசர் என்பவரே மோட்டார் போக்கு வரத்து முறையை ஏற்படுத்தினர். அவர் முறையே இன்றளவும் மாறுதலின்றிக் கையாளப்பட்டு வருகிறது.

ஆரம்பத்தில் மோட்டார் வண்டியின் வேகத்தையும், ஆற்றலையும், தோற்றத்தையும் மேலும் மேலும் விருத்திசெய்யும் பொருட்டும், பொது ஜனங்களுக்கு அதன் உபயோகத்தில் நன்னம்பிக்கை உண்டாகும் பொருட்டும் அநேக மோட்டார் பந்தயங்களும், காக்ஷிச் சாலைகளும் நடத்தப்பட்டன. மோட்டார் யந்திரத்தில் எத்தகைய இரும்பு, அலுமினியம் முதலிய உலோகங்களை உபயோகிக்கலாம் என்று யோசித்து வெகு சிரமப் பட்டு ஆராய்ச்சி செய்து பல அரிய உலோகக் கலவைகளைக் கண்டுபிடித்த அறிவியல் சாஸ்திரிகளுக்கு (Scientists) நாம் பெரிதும் நன்றி பாராட்டவேண்டும். இப்போது பெரிதும் உபயோகப்படுத்தப்படும் மோட்டார் வண்டியானது பழைய கதைகளில் சொல்லப்பட்டிருப்பதுபோல ஒரு மனிதனுக்கு ஏதோ ஒரு தேவதையின் கடாக்ஷத்தால் திடீரென ஞானோதய முண்டாகிக் கண்டு பிடிக்கப் பட்டதென நேயர்கள் எண்ணலாகாது. மாடு, குதிரை முதலிய மிருகங்களின் உதவியின்றியும், ரெயிலைப்போல நிலக்கரி நீராவி இருப்புத் தண்டவாளம் முதலிய கருவிகளின்றியும் சுலபமாய் ஓடக்கூடிய வண்டி யொன்றைச் செய்ய வேண்டுமென பல மேதாவிகள் பல தடவைகளில் பல வண்டிகளைச் செய்து செய்து பார்த்து, முன்னே முயன்றவர்கள் அனுபவத்தைப் பின்னே முயன்றவர்கள் தமக்குதவியாகக் கொண்டு, அவர்கள் என்னென்ன விஷயங்களில் எவ்வெவ்விதங்களில் தவறினார்கள் என்பு வற்றை யெல்லாம் அறிந்து, அவற்றைப் போக்கிப் பின்னும் இடைவிடாது முயன்று வந்தார்கள். மோட்டார் வண்டியில் முதலில் உபயோகப் படுத்திய உலோகக் கலவைகளைக் காட்டிலும் அதிக உஷ்ணம் தாங்கக்கூடியவற்றையும் கண்டு பிடித்தார்கள். கடைசியாக அது ஒரு ஒழுங்கான முறைக்குக் கொண்டு வரப் பட்டது.

1910-ம் வருஷம் வரையில் பிரான்சு தேசமே மோட்டார் வண்டி செய்வதில் முதன்மை ஸ்தானம் பெற்றிருந்தது. அதன் பிறகு நாளது வரையில் மோட்டார் வண்டி செய்வதற்கான அனுகூலங்க ளெல்லாம் இயற்கையாகவே அமைந்திருக்கப்பெற்ற அமெரிக்கா முதன்மையா யிருந்து வருகிறது. மோட்டாருக்குத் தேவையான பெட்ரோல் கிடைக்கும் அநேக கிணறுகளும், மற்ற நாடுகளைக் காட்டிலும் மிகுந்த செல்வமும் பொருந்தியுள்ள நாடு அதுவேயாகும்.

பிரான்சு, இங்கிலாந்து, ஜெர்மெனி முதலிய தேசங்களில் சமீபத்தில் நடந்த உலக மகாயுத்தம் காரணமாகக் கைத்தொழில்கள் சரிவர நடவாதிருந்த காலத்தில் அந்த யுத்தத்தினால் பாதிக்கப்படாதிருந்த அமெரிக்கா அதிகமாய் முன்னுக்கு வர அனுகூலமா யிருந்தது.

மோட்டார் வண்டி செய்யும் வேலையானது அதில் மிகுதியும் பழகியவர்களும் சில சமயங்களில் பிரமிக்கத் தக்கதாயிருப்பினும் அதன் யந்திரத்தின் அமைப்பு மிகவும் சுலபமானது.

அமெரிக்கா முதலிய வெளி நாடுகளிலிருந்து நமது நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் மோட்டார் வண்டிகளைக் கணக்கிட்டுப் பார்க்கின் வருஷத்திற்கு வருஷம் அதிகப்பட்டு ஏராளமான வண்டிகள் நமது நாட்டிற்கு வருவதாகத் தெரிகிறது. மோட்டார் வண்டிகளின் பெருக்கம் நமது நாட்டிற்கு ஒரு வகையில் தீமையையே பயக்கிறதென்று பலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஏனெனில் வெளி நாடுகளிலிருந்து ஆயிரக்கணக்கான ரூபாய் பெறுமான வண்டிகளை வாங்குவதனால் நம் நாடு வறுமையடையுமென்பதில் சந்தேகமே யில்லை. ஆனால் நான் இக்கருத்தோடு மோட்டார் வண்டியைப் பற்றிக் கூற வரவில்லை. கடவுளினுடைய சக்தியும், அவரது சிருஷ்டியாகிய இயற்கையும், அதன் ரகசியங்களுமடங்கின வென்றும் இவை யெல்லாவற்றிற்கும் இறைவன் நம்மிடத்து வைத்துள்ள அளவு கடந்த கருணையே காரணமென்றும், அவரது அற்புதச் செய்கைகள் நுண்ணிய அறிவு கொண்டு நோக்குவார்க்கு விளங்காமற் போகாதென்றும், பௌதிக நோக்கமுடையவர்க்கும் அத்துறையில் அது பெரும் பயனை விளைவிக்குமென்றும், சோம்பலின்றி முயல்வார்க்கு முதல்வன் முன்னின்று உதவுவானென்றும் விளங்கும். அத்தகைய நுண்ணறிவும் விடாமுயற்சியும் உடையாரே பெரியரென்றும் விளக்கும் கருத்து கொண்டே இதனை வரைய முன் வந்தனன். 'செயற்கரிய செய்வார் பெரியர், சிறியர் செயற்கரிய செய்கலாதார்' என்னும் திருக்குறளை ஈண்டெடுத்துரைப்பது மிகவும் பொருத்தமானதாகும்.

மா. அ. கனகசபை முதலியார்.

## விநோத உலகம்

### சந்திரனுக்குள் ஔவைப்பிராட்டி.

இந்தியாவிலுள்ள பெண்களும் சிறுவர்களும் சந்திரனிடத்தில் தோன்றும் களங்கத்தை ஔவைப்பிராட்டியார் நூல் நூற்றுக் கொண்டிருக்கிறாள் எனக்கூறுவது வழக்கம். ஆனால் இந்த களங்கத்தைப்பற்றி ஒவ்வோரிடத்திலும் உள்ள பாமர ஜனங்கள் வேடிக்கையான பலவித அபிப்பிராயங் கொண்டிருக்கின்றார்கள். ஆசியாவின் கீழ்பாகத்திலுள்ளவர்கள் இக்களங்கத்தை ஒரு முயல் அல்லது குழிமுயல் எனக் கருதுகின்றனர். சீனாக்காரர்களும், ஸயாமியர்களும் யந்திரத்தின் சமீபத்தில் உட்கார்ந்து கொண்டு மாவரைக்கும் ஒரு முயலெனக் கூறுகின்றனர். மற்றுஞ் சிலர் வயலில் ஒரு ஆணும் பெண்ணும் வேலை செய்வதாக அதை நினைக்கின்றனர். வட அமெரிக்காவிலுள்ள பழைய சாஸனங்களில் சந்திரன் ஒரு ஜாடி என்றும், அதனுள் தோன்றும் களங்கம் ஜாடியில் குதித்துக்கொண்டிருக்கும் ஒரு குழிமுயல் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. சந்திரனைக் காதலித்த ஒரு பெண் அவனைத் தழுவக் கொள்ளத் தாவியபோது சந்திரன் அப்பெண்ணைப் பற்றித் தன்னிடம் வைத்துக்கொண்டதாகவும், சந்திரன் மத்தியில் விளங்குவது அப்பெண்ணின் உருவந்தானென்றும் வட அமெரிக்க இந்தியர்கள் நம்புகின்றனர்.

ஸமோவா தீவிலுள்ளவர்கள் அக்களங்கத்தை தன் குழந்தையை எடுத்துச் செல்லும் ஓர் பெண்ணாகக் கருதுகின்றனர். மற்றும் தென்திசையினர் அழுக்கு மூட்டையினை முதுகில் சுமந்து செல்லும் ஓர் வண்ணாத்திக் கிழவி எனக் கூறுகின்றனர்.

வடதுருவத்தின் சமீபத்திலுள்ள எஸ்கிமோ ஜாதியார் மிகப் பழமையான ஒரு கூட நம்பிக்கை கொண்டுள்ளனர். அதாவது ஒரு நாள் அநகா (சந்திரன்) தன் சகோதரியாகிய சூரியன்மீது கோபங்கொண்டு அவளைத் துரத்திச் சென்றான். சூரியன் ஓடமுடியாமல் பிடிபடுவதாயிருக்கும் சமயத்தில் திடீரெனத் திரும்பி கரும்பொடியினைச் சந்திரன் முகத்தில் வீசிவிட்டுத் தப்பியோடிப்போனாள். அந்த அடையாளந்தான் இன்றுங் களங்கமாகத் தோன்றுகின்றது என்பதாம்.

இந்தியாவில் வடமேற்குப் பாகத்தில் வசிப்பவர்கள் சந்திரன் நாளுக்குநாள் கொஞ்சங் கொஞ்சமாகப் பற்றி எரிந்து கடைசியில் முழுதும் அழிந்துபோக அதற்குப் பதிலாக வேறொரு சந்திரன் தோன்றுகிறதென்றும் சந்திரனிடத்தில் இப்போது தோன்றும் களங்கம் பழைய எரிந்துபோன சந்திரனது சாம்பலென்றும் எண்ணுகிறார்கள். தென்னிந்தியாவிலுள்ள தமிழர்களோ கொட்டை நூல் நூற்கும் ஔவையாரென்றும், இராட்டினத்தில் கெண்டை திரிக்கும் கிழவி என்றும், அப்பஞ் சுடும் பெண் என்றும் கூறுகின்றனர். தக்கோடா இந்தியர்கள் சந்திரனைச் சில சுண்டெலிகள் கடித்துத் தின்னுகின்றதாக நம்புகின்றனர். பாலினேஷியர்கள் இறந்துவிட்டார்களது ஆத்மாக்கள் சந்திரனை உணவாகக் கொள்கின்றன என்கின்றனர். ஹாதண்டா என்னும் ஆப்பிரிக்கர்கள் சந்திரனுக்கு எப்போதும் தலைவலி யுண்டென்றும் அது அதிகப்படும்போது சந்திரன் தன முகத்தைக் கைகளால் மறைத்துக் கொள்கிறான் என்றும் நினைக்கிறார்கள்.

### உடைபடாத கண்ணாடி.

துப்பாக்கியில் சுட்டாலும் அல்லது வேறு எவ்விதத்திலும் உடைக்கமுடியாத கண்ணாடி இ[illegible]து கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

*  *  *

### வைக்கோல் மை.

வைக்கோலிலிருந்து இங்கி செய்து சமீபத்தில் அந்த இங்கியைக் கொண்டு ஒரு பத்திரிகையும் அச்சடிக்கப்பட்டது.

•  •  •

ஆப்பிரிக்கா தேசத்திலுள்ள ஒருவகைத் தேள் 1½ அடி நீளமிருக்கின்றதாம்.

* * *

## சப்தத்தின் பிரயாணம்.

சப்தமானது ஒரு நிமிஷத்தில் 13 மைலும் 1 மணியில் 765 மைலும பிரயாணம் செய்கின்றதாம்.

* * *

## ரயிலை நிறுத்தும் மின்சாரக் கருவி.

ரயில் வண்டிகள் ஒன்றுக்கொன்று மோதிக் கொள்ளாமலிருக்கும் பொருட்டு ஜர்மனியிலுள்ள சில ரயில் வண்டிகளில் மினசாரக் கருவி அமைக்கப்பட்டுள்ளன. இக்கருவி அபாய அறிவிப்பு செய்கிறது; எச்சரிக்கை விளக்கு போடுகின்றது; கடைசியாக வண்டியையே நிறுத்திவிடுகின்றது.

* * *

## சிங்கத்தை சித்திரவதை செய்யும் செடி.

தென்னாப்பிரிக்காவில் ஒருவகைச செடிகளைக் கண்டு சிங்கங்கள் அஞ்சுகின்றன. ஏனெனின் இச்செடியிலுள்ள கொக்கிபோன்ற தொரு வஸ்து சிங்கத்தைப் பிடித்து இழுத்து சித்திரவதை செயயும் சக்தியுடையதாம.

* * *

ஒருவன் பேசிக்கொண்டே போவதை அப்படியே அச்சடிக்கக்கூடிய மிஷன் இப்போது கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது.

* * *

ஆறு, ஏரி இவைகளிலிருந்து எடுக்கப்படும் மணலைக்கொண்டு சலவைக் கல்லைப்போன்ற செதுக்கல்கள் செய்து, கட்டடவீட்டுக்கு உபயோகிக்குமுறை இப்பொழுது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

* * *

இங்கிலாந்தில விநோதமான ஒரு கடிகாரம் இருக்கிறது. இதற்கு எண்ணூறு நாளைக்கொருதரம சாவிகொடுத்தல போதுமானது. இதிலுள்ள எந்தச்சாமானும் பழுதாவதில்லை ஏதாவது ஒரு சாமான் நின்றுவிடக் கூடியவாறு பழுதாகிவிட்டாலும தானே திரும்பவும் வேலை செயயத் தொடங்குகிறது.

* * *

மீன்வகைகளில் 100 கெஜ தூரம் பறக்கக் கூடிய மீன்களும உள்ளன.

* * *

ரேடியோ மூலமாக விளக்குகளை ஏற்ற அமெரிக்காவிலுள்ள போஸ்டன் நகரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

* * *

ஜூரிச்சிலுள்ள ஒரு கடிகாரம் ஒரு வருஷமாகச் சாவி கொடாதிருந்தும் போய்க் கொண்டிருக்கிறதாம்.

* * *

மனிதர் சாகாநிலையைப் பெறலாமென்றும் இதில ஆச்சரியமொன்று மில்லையென்றும் அறிஞர் ஒரு கூறுகிறார்.

* * *

தன் மனைவியைச் சரியான நடவடிக்கையுடன் இருக்கச் செய்யாததற்காக பம்பாயிலுள்ள ஒருவன் தன் மாமியாரின் மூக்கை அறுத்துவிட்டானாம்.

* * *

அமெரிக்காவிலுள்ள ஸ்திரீகளில் மிகப் பருமனுள்ள ஒரு ஸ்திரீ இருக்கிறாள். இவள் முப்பத்தாறு ஸ்டோன் பதினொரு பவுண்டு நிறையுள்ளவள். இவள், உலகத்திலேயே மிகவும ஒல்லியாக இருப்பவர் என்று கருதப்படும் கொரா லட் விண்டியாப் என்பவரை விவாகம் செய்து கொண்டிருக்கிறார். இவருடைய தேக நிறை ஆறு ஸ்டோன் ஐந்து பவுண்டேயாகும்.

* * *

## கொரியா தேச அதிசயங்கள்

கொரியாவைச் சேர்ந்த கின்ஷாண்டே என்ற ஊரிலுள்ள ஒரு நீரூற்றில் எத்தகைய வியாதியுடையவராயினும் ஒருமுறை மூழ்கியெழுந்திருந்தால் வியாதி நிவாரண மடைகிறதாம்.

கொரியா தீபகற்பத்தில் ஒன்றிற்கொன்று மிக நீண்ட தூரத்திலிருக்கும் இரண்டு ஊற்றுகளில் ஒன்றில ஜலம் நிறைந்திருக்கும்போது மற்றொன்றில நீர் வற்றியிருக்கும். ஆனால், ஓர் ஊற்றின் நீர் கசப்பாயும, மற்றொன்றின் நீர் இனிமையாயு மிருக்கிறது.

ஓர் அரண்மனைக்கு எதிரிலுள்ள ஒருவிதப் பாறை பூமிக்கு மேல ஏழடி உயரத்தில் எவ்வித ஆதாரவுமின்றி அந்தரமாய்த் தொங்கிக் கொண்டிருக்கிறது. இது காந்த சக்தியின் காரணமே யென எண்ணப்படுகிறது.

---



# பாமாலைப் பகுதி

தந்தந்தந் தந்தன தானன தந்தந்தந் தந்தன தானன
தந்தந்தந் தந்தன தானன—தனதான

சந்தங்கொண் டின்கவி நூல்பல நன்றெங்குந் தங்கிட நேயர்கள்
சங்கங்கண் டின்புறு மேன்மைகள் பெறுமாறே
தஞ்சங்கொண் டன்பர்கள் பாலர்கள் வந்தென்றுந் தண்டமி ழோதிடு
சம்பந்தங் கண்டில கோரொடு முயர்வாலே
அந்தங்கொண் டம்புவி போர்புகழ் நந்துந்தங் கண்டவ ரோவிட
அன்பென்றுஞ் சஞ்சிகை யாலுணர் வுறுமாறே
அம்புந்தண் டும்படை வாள்விரு தங்கொண்டெஞ் சஞ்சல மாறவும்
அஞ்சிந்தங் கண்களி கூறவும் வருவாயே
கந்தங்கொண் டின்புவி சீர்முக குந்தன்பங் கின்கிளி யாலெம
கண்டன்கண் கண்டிட வேலைமுன் விடுவோனே
கஞ்சன்பண் டுஞ்சிட வானவர் விண்பெற்றஞ் சங்கொணி சாசரர்
கண்டின்றெள் செய்த்திற மேவிகன வெருபேய்கள்
திந்திந்திந் தங்கென பேரிகை யின்சங்கம் பண்பொடு பூதர்கள்
சென்றஞ்சஞ் சண்டை நிராசரர் அடும்வீரா
சென்றண்டம் தன்புகழ் மேவயில் கந்தன்கண் தந்துணை யாமொரு
செங்குந்தந் தங்கர மேவிய பெருமாளே.

### மித்திரன் வாழ்த்துப்பா.

முன்னிலக்கந் தொன்மர் முசுகுந்த னோர்குந்தர்
மன்னு சகந்ரக்தொ பாபிரவர்—மன்னிநவர்
கூத்தர்முத லாக்குந்தர் கூத்துணர்த்து மித்திரனற்
சீர்த்திபெற்று வாழ்கச் சிறந்து.

### சங்க வாழ்த்துப்பா.

தென்னிந் தியசென்னைச் செங்குந்தச் சங்கச்சீர்
மன்னு இளைச்சங்க மலிந்தோங்கி—பொன்னின்
திருவோங்கி நாமகளின் செந்தமிழு மோங்கி
அருளோங்கி வாழ்ந்திடுக அன்பு.

### சந்தாநேயர்களின் நல்வாழ்த்து.

சீர்பெற்ற செங்குந்த மித்திரனுஞ் சந்தாதார் செப்பக் கேளீர்
வார்பெற்ற மூலைபெற்ற தாய்கொடுப்பின் மகளோங்கு மாறுபோல
ஏர்பெற்ற விரண்டாண்டின் வெண்காசை யின்றளிப்பி னினிநாம் பூவில்
சூர்பெற்ற இருளகற்று வேற்கந்த னமக்கென்றுந் துணைசெய்வானே.

### பத்திராதிபர் முதலினோர் வாழ்த்து.

பண்டுசெங் குந்தரின் பத்தி ராதிபர், தண்டமிழ் சஞ்சிகை சாற்று நாவலர்
விண்டுநற் திருவெலாம் விளங்கச் சைவமே, மண்டி பூவினின் வாழ்க வாழ்கவே.

தமாத்து அடிமை,
கல்லாலம்பூண்டி, அன்னியூர் விழுப்பு

### சிறந்தது.

சிறந்தது கேட்கின் தேறி வுடையீர் !
சிறந்தது சிறந்தது சகமதிற் புகழே
புகழ்தான் வருவது புண்ணியச் செயலால்
புண்ணியஞ் செய்வோர் பரந்த அறிவினர்
பரந்த அறிவும் பாரின் அனுபவம்
அனுபவம் பெறுவதும் அறிவு நூல்களில்
அந்நூல் சாரம் ஆயது சஞ்சிகை
அறுமுகச் செம்மல் அரியசோ தரர்காள் !
ஆதலின் யாவரும் அறியக் கிடப்பது
சஞ்சிகை படித்தல் சிறந்த தென்பதே.
அதிலும்,
சாதிகள் பலவும் செறிந்த விந்நாளில்
உலகிற் குலமெலாம் உயர்ந்தன வாகி
எல்லாம் ஒற்று எழிலுடன் திகழ
சாதிச் சஞ்சிகை சாலவும் வேண்டும்
ஆகவே தொல்சீர் அனைத்தும் துறந்து
பின்னணி நிற்கும் பெற்றி யுடையோம்
தோன்றிற் புகழொடு தோன்றுக இலையேல்
தோன்றலிற் றோன்றா தொழிதலே நன்று
என்னத் தேவர் பன்னிய மொழியை
பொன்னைப் போலப் போற்றிப் புகழை
ஈட்டல் வேண்டும் எண்ணிய வதனை
நங்குல 'மித்திரன்' நமக்களித் திடுவன்.
ஆதலின்,
மிளிர் 'செங்குந்த மித்திரன்' தன்னை
நாம் வாசித்தல் நனிசிறந் தன்றே.

ஜெ தங்கவேல்,
இராஜதானிக் கல்லூரி மாணவன்.

### அருளுடைமை.

(ஷேக்ஸ்பியர் கருத்தின் மொழி பெயர்ப்பு.)

நல்லரு ளுடைமை நவிலுங் காலைப்
பல்கால் முயன்றுறு பண்புடைத் தன்றே;
விண்ணி னின்று மண்மீ திழியுந்
தண்மழை யென்னத் தானே பொழிதரு
வீவோ னேற்போ னென்றிரு வோர்க்கு
மேக காலத் தின்னல மீந்து
நற்பய னிருவையின் நயந்தளித் திடுமே
திறலின் மிக்கோர் திறத்தரு டிகழிற்
பெருவலி. வதனில் பிறிதொன் றிலையால்
ஓங்கரி யாசனத் தமர்ந்திடு மொருதனி
வேந்தினுக் கழகுற விளங்குமா முடியினு
மேதக வுற்றிடு மேன்மைத் ததுவே
மாண்புறு செங்கோல் மன்னவன் றனது
போதி காரம் பிறங்குதற் கறிகுறி
கொற்றவன் றன்பால் குடிகள் கொள்ளு
மொடுக்கமு மச்சமு மொருங்கே மேவுறீ
ரருங்கோ லாட்சிக் கக்கோ லிலக்காம்
ஆயநற் செங்கோ லாணையிற் சீரிய
பான்மைத் தருளே பன்னருஞ் சீர்த்தி
மன்னர் மனமே மற்றதற் குறைவிடம்
தேவருந் தரிக்குஞ் சிறப்புடைத் தான
தைவதத் தன்மை செறியுநற் குணமாம்
ஆதலின்,
இன்னருள் நீதியோ டியங்கப் பெறினே
மானிலத் திறைபுரி மாட்சி
வானிறை மாண்பென வயங்கிடு மாலே.

நீ. க. இராஜேஸ்வரி, பீ.ஏ.

## நமது மித்திரனைப்பற்றி இதர பத்திரிகைகளின் அபிப்பிராயம்.

செங்குந்த மித்திரன் சென்னையிலிருந்து திரு. ம. சண்முகசுந்தர முதலியார் எம்.ஏ., எல்.டி. அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் "சென்னிங்கிய செங்குந்த மகாஜன சங்க"த்தின் திங்கள் வெளியீடு. இதில் உண்மைச் செங்குந்தர் மரபின் வரலாறு, அம்மரபிடைத் தோன்றிய அறிஞர்களின் சரித்திரம், அன்னாரடைந்த புகழைப்பற்றிய குறிப்புகள் முதலியன தெள்ளிய நடையில் விளக்கப் பெற்றுள்ளன. இதனால், செங்குந்த மரபினர் சைவாசாரம் வழுவாதவராய் சமயமாதிய சிவதீக்ஷையுடையவர்களாய் விளங்குந் தகுதியுடையவர் எனச் செவ்வே தெளியலாம்.

இவர்களின் சைவ நலத்தை விளக்கும் ஆன்றோர் அருண்மொழி பல மேற்கோள்களாகக் காட்டியிருப்பதிலிருந்து ஒன்று காட்டுவாம்.

"உருக்கொடு பணியா தாரை
யுளத்திலஞ் செழுத்தை யுன்னிப்
பெருக்கொடு தவள நீற்றைப்
பேணியே யணியா தாரைத்
தருக்கொடு நின்று கண்ணீர்
ததும்பமுன் னாடா தாரைத்
[illegible]

இன்னும், அறிவு விருத்தி, தொழின் முயற்சிகளைப் பற்றிய சிறந்த கட்டுரைகள், பொதுவர்த்தமானங்கள் விகடத்துணுக்குகள் முதலிய பலவிஷயங்களும் தன்னுட் கொண்டுள்ளது. இதனைச் செங்குந்தரும் ஏனையோரும் படித்துப் பயன் பெறுவரென எண்ணுகிறோம்.—சிவநேசன், பலவான்குடி.

* * *

வகுப்பு முன்னேற்றங் குறிக்கொண்டு திகழுடதாள்களுள் "செங்குந்த மித்திரன்" தலை சிறந்து விளங்குகிறது. சுமார் ஐயாயிரம் சந்தாதாரர்களைக் கொண்டு அப்பத்திரிகை சிறந்த முறையில் நடைபெறுவதைக் காண நாம் பெரு மகிழ்ச்சியுறுகிறோம். செங்குந்த மக்களைப்போன்ற விழிப்பும் ஊக்கமும் உணர்ச்சியும் எல்லா வகுப்புகட்கு மிருக்குமானால் தன்னலமே குறிக்கொண்ட தலைவர்கள் தமிழ்நாட்டில் நிலவமுடியாது. பிற்போக்கான நிலையிலுள்ள வகுப்புக்கள் ஒவ்வொன்றும் "செங்குந்தமித்திர"னைப் படித்து, செங்குந்தர் இயக்கத்தைப்போன்றே தங்கள் தங்கள் வகுப்பு இயக்கத்தை வளர்ப்பார்களானால் அஃது நாட்டிற்குப் பெருநலம் விளைவிப்பதாக விருக்கும்.—தேசியன், பொன்மலை.



## விகடத் துணுக்குகள்

### குருவும் சீடனும்

கல்வி, அறிவு ஒழுக்கங்களால் மேம்பட்ட ஒரு வீரசைவர் தமது ஞானாசிரியராகிய ஒரு மடாதிபதியை அடுத்து தம்மிடத்திருந்த கால் ரூபாயைப் பாத காணிக்கையாக வைத்து 'சுவாமிகளே! யான் ஏழை. என்னிடத்துள்ளது இதுதான். இதை ஏற்றுக்கொண்டு எனக்கு லிங்கதாரணம் செய்தருளவேண்டும்.' எனப் பிரார்த்தித்தார். சுவாமிகளும் உடன்பட்டு அவ்வாறே செய்தருளினர்.

சீடர் சிலகாலம் அம்மடத்திலேயே தங்கியிருந்தபோது அம்மடத்துச் சிப்பந்திகள் இவரை ஒரு சோற்றுச்சாமியென நினைத்து அவரது கல்வி ஒழுக்கங்களுக்குப் பொருந்தாத அற்ப வேலைகளைச் செய்யக் கட்டளையிட லாயினர். அவற்றிற்குச் சீடர் இணங்க மறுத்தார். உடனே புகார் சந்நிதானத்தினிடம் போய் சீட்டது சீடரது பக்குவத்தையும், திறமையையும் அறிந்துகொள்ளாத குருமூர்த்திக்கும் குருமூர்த்தியினது உண்மை நிலையை உணர்ந்த சீடருக்கும் கீழ்வருமாறு சம்பாஷணை நடந்தது:

குரு:—ஒய் நீர் இவர்கள் இட்ட வேலையைச் செய்ய மறுத்ததுண்டா?

சீடர்:—ஆம், மறுத்தேன். என் அந்தஸ்துக்குத் தகாத வேலைகளை சந்நிதானம் சிறிது செவிசாய்க்க வேண்டுகிறேன். இவர்கள் என்னை.........

குரு:—சரி சரி போதும். வேளை தவறாது சாப்பிடுவது தவிர நீ இங்கு என் செய்கிறாய்? இது சோம்பேறி மடமா?

சீடர்:—மடத்துக்கே அணிகலம் போன்ற என்னைச் சிறிதும் உணராது சோம்பேறி என்று சொல்லுவது சந்நிதானத்திற் கேற்றதாமோ? சந்நிதானத்தின் உத்தரவின்படிச் செய்யத் தயாரா யிருக்கிறேன்.

குரு:—இங்குச் சண்டை பிடிக்கவேண்டாம் வெளியே போய்.

சீடர்:—யான் ஒரு சீடனென்பதையும்...........

குரு:—நீர் எனக்குச் சீடனாக இருக்கவேண்டாம்.

சீடர்:—ஸ்வாமி! அப்படியானால் நான் கொடுத்த காணிக்கையைக் கிருபை கூர்ந்து திருப்பிக் கொடுத்துவிடலாமா!

குரு:—உமாபதி! ஒரு கால் ரூபாய் கொண்டு வா. (உமாபதி கொண்டு வந்தான்) இதோ உம்முடைய காணிக்கை. இதை எடுத்துக் கொண்டு நான் தாரணம் செய்த லிங்கத்தைக் கொடுத்துவிடும் போம்.

சீடர்:—உமாபதி! கடைவீதிக்குச் சென்று ஒரு லிங்கம் வாங்கிக்கொண்டுவா. (உமாபதியினிடம் தம்மிடத்திருந்த கால் ரூபாயைக் கொடுத்தார்).

குரு:—அது ஏன்?

சீடர்:—சந்நிதானம் உத்தரவிட்டபடிக் கொடுப்பதற்காக.

குரு:—யாம் உமக்குத் தாரணம் செய்த அதே லிங்கத்தைத் கொடுக்கவேண்டும்.

சீடர்:—அப்படியானால் நான் கொடுத்த கால் ரூபாயையே தருவதானால் சந்நிதானம் தாரணம் செய்த லிங்கத்தையே தரத் தடையில்லை.

குரு:—நீ கொடுத்தது கால் ரூபாய்தானே.

சீடர்:—ஆம், கடையில் வாங்கிவரச் சொல்லுவதும் லிங்கந்தானே.

குரு:—நான் கொடுத்த லிங்கமே வேண்டும்.

சீடர்:—நான் தந்த கால் ரூபாயையே திருப்பிக் கொடுத்தால்.

---

புருடன்:—நமது பெண்ணைக் கேட்க அடிக்கடி வருகின்றவன் தனது வருமானத்தைக் கூறினனா?

மனைவி:—இல்லைங்கோ. அவர் தங்களுடைய வருமானத்தை மட்டும் கேட்டார்.

* * *

முதலாவான்:—என் தாங்கள் இவ்வளவு கோபமாயிருக்கிறீர்கள்.

இரண்டாவான்:—ஒரு மடையன் என்னைக் கிழப்பூனை என்று கூறினன்.

முதலாவான்:—என் தாங்கள் அவ்வளவு கிழமாகவில்லையே.

* * *

சாப்பிடுவோன் :—அய்யர் ! இது என்ன கத்தரிக்காய் சாம்பாரா.

அய்யர் :—ஆம், ஐயா.

சாப் :—எங்கே, அதில் கத்தரிக்காயே காணோமே.

அய் :—(குலுங்கச் சிரித்து) நீங்கள் பாலாற்றில் பால் பார்க்கின்றீர்களோ.

* * *

குருடன் :—டிக்கன்ஸ் என்பவன் ஒரு வரியைப் படிப்பதற்கு இரண்டு வாரம் செலவழித்ததாக நான் படித்திருக்கிறேன் அது வாஸ்தவமா.

குருட்டண்ணன் :—இது எம்மாத்திரம்! எனது சிற்றப்பன் ஒரு வாக்கியத்திற்கு 20 வருடங்கள் செலவழித்தானே.

* * *

அவள் :—நீங்கள் வரும் வரையில் நாட்களை எண்ணிக்கொண்டே யிருப்பேன்.

அவன் :—பேஷ், எண்ணிக்கையில் இணையற்ற பூளை பெற்றிருக்கிறாயென எண்ணுகிறேன்.

* * *

கல்யாணத்திற்கு எல்லாம் தயாராக இருந்தது. மாப்பிள்ளையும் ஒரு பெரிய மனிதரும் வெகு நேரத்திற்குமுன்னரே வந்துவிட்டனர். மாப்பிள்ளை சாந்தமின்றி ஏதோ கவலைகொண்டிருப்பதாகக் காணப்பட்டார்.

பெரியவர் :—தங்களை என்ன வருத்துகின்றது. ஏதாவது தொலைத்து விட்டீரோ.

மாப்பிள்ளை :—எல்லா வஸ்துவையும் ஜாக்கிரதையாக வைத்திருந்தும் நான் ஒன்றை இழந்துவிட்டேன். பெண்ணைப் பார்த்த பிறகு என் ஹ்ருதயத்தை நான் இழந்துவிட்டேன்.

* * *

வைத்தியர் நோயாளி யொருவனுக்கு மாத்திரைகள் கொடுத்து படுக்கைக்குப் போகும்போதெல்லாம் ஒவ்வொரு மாத்திரை சாப்பிட்டபின் பால் சாப்பிட்டுவிட்டுப் படுக்கும்படிக் கூறினார். இரண்டு வாரங்கள் கழித்து நோயாளி டாக்டரைக் கூப்பிட்டு நோய் சிறிதுங் குறையவில்லையே என்றார்.

டாக்டர் :—மருந்தை சரியாக சாப்பிட்டீரோ.

நோயாளி :—ஆ! டாக்டர். நான் மாத்திரையை அடியோடு வெறுக்கவில்லை. ஆனால் பால் சாப்பிட்டு இரண்டு வாரங்களாகின்றன.

* * *

பையன் நெடுநேரம் பேசாமல் ஏதோ யோசித்துக் கொண்டிருப்பதைப் பார்த்துத் தாயார் "குழந்தாய்! உனது ஆழ்ந்த யோசனைக்காக ஒரு அணா வெகுமதி தருகிறேன்" என்றாள்.

பையன் :—அம்மா, மிக்க சந்தோஷம் என்று கூறிவிட்டுச் சும்மாயிருந்தான்.

தாயார் :—மீண்டும் என்ன யோசிக்கிறாய்.

பையன் :—தாங்கள் என்னுடைய யோசனைக்காகத் தருவதாகக் கூறிய ஓரணாவைத் தாங்கள் எப்பொழுது தரப்போகிறீர்கள் என்றே யோசிக்கிறேன்.

* * *

### மனோ நிகழ்ச்சிகள்.

தியேட்டர், சினிமா முதலிய உல்லாசக் காட்சிகளின் ஆனந்தத்தை நீங்கள் அறிவீர்களா. அதனை அதன்பால் மோகங்கொண்டு திரிபவர்களிடமே அறியக்கூடும். அதுவே அவர்கட்கு இம்மை, மறுமை யாகத் தம் தருகின்றது. அழகிய அலங்காரத் தோற்றமும், விபரீதக் காட்சிகளின் விநோத நடையுடை பாவனைகளும், இனிய சங்கீத ஓசையும் அவர்களை யோகத்தில் அழ்த்திவிடுகின்றது. ஞானிகள் செய்யும் யோகமாவது கலைவுறலாம். இவர்கள் யோகம் அச்சமயம் கலைவுறுதலில்லை. அச்சமயம் இவர்களது துணியையோ, கடிகாரத்தையோ, பணப்பையினையோ எவர் கவர்ந்து சென்றாலும் அது இவர்கள் கவனத்தை ஈர்ப்பதில்லை. இவர்கள் ஆனந்தம் பிரம்மானந்தமே. ஆனால் இந்நிலை எவ்வளவு நேரம் ஆட்டம் முடியும் வரையிலேயே. அதற்கப்பால் எல்லாவித உல்லாசங்களும் முடிவடைந்துபோம்.

நமது வாழ்க்கையும் இத்தகையதே. உலகமேடை மீதமர்ந்து மனிதன் எத்தனையோ காட்சிகளைக் காண்கின்றான். சிலர் அவற்றைக்கண்டு மயங்கிப் போகின்றனர், சிலர் எதைப் பார்த்தபோதிலும் மயக்குறாது மனித வாழ்க்கையின் நோக்கமுணர்ந்து புண்ணிய செயலைக் கைக்கொண்டு தீயவை நீக்குகின்றனர். இவர்களே இறவா இன்பம் பெறுவோராவர். ஏனையோர் தியேட்டர், சினிமா இன்பமே போன்று அழியும் இன்பம் பெறுவோர். ஆதலின் உலகக் காட்சியிலுள்ள நாம் இக்காட்சிக்குப் பின் நமது நிலைத்த சொந்த இடத்திற்குச் செல்லவேண்டியவர்களே. இதற்குள் பொறாமை என்ன! கட்சிகள் என்ன! வஞ்சம் என்ன! பிறரை வருத்தும் வாழ்க்கை என்ன! இவைகளை யொழித்து நல்வழியில் நாட்களைக் கழிப்போமாக.



# செங்குந்தர் கிளர்ச்சி

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

### நிர்வாக சபைக் கூட்டம்.

1929ளு செப்டம்பர்மீ 25உ புதன்கிழமை மாலை 6-மணிக்குத் திரு. S. குழந்தைவேலு முதலியாரவர்கள் தலைமையின்கீழ் சென்னை பவழக்காரத் தெரு 19-ம் நெம்பர் ஆபீஸ் கட்டடத்தில் கூடிய நிர்வாக சபைக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின :—

#### மாணவர்கட்கு உபகாரச் சம்பளம்.

1. சென்ற வருஷம் நமது சங்கத்தில் உபகாரச் சம்பளம் பெற்று மேல் வகுப்புக்கு மாறிய சென்னை C. பாலசுந்தரம் (3-வது பாரம்); காஞ்சீபுரம் M. திருவேங்கடம் (4-வது பாரம்); உத்தரமல்லூர் A. சந்திரசேகரன் (4-வது பாரம்); வந்தவாசி T. பொன்னுசாமி (6-வது பாரம்); திருச்செங்கோடு R. லட்சுமி (2-வது பாரம்); இவர்கட்கு இவ்வருஷத்திலும் அரைச்சம்பளம் கொடுத்துதவ வரவேண்டியது.

2. இவ்வாண்டில் புதிதாக மனு அனுப்பியவர்களில் சென்னை M. பத்மாவதி (6-வது பாரம்); சென்னை M. கெஜவல்லி (சகண்டரி கிரேட் டிரெயினிங்); திருவல்லிக்கேணி M. C. சிங்காரம் (1-வது பாரம்); திருவல்லிக்கேணி M. சுப்பிரமணியன் (4-வது வகுப்பு); காஞ்சீபுரம் A. சோமசுந்தரம் (3-வது பாரம்); பெருநகர் B. C. வீராசாமி (ஜூனியர் இண்டர்மீடியேட்); ஐயங்கார்குளம் T. ராமசாமி (4-வது பாரம்); உத்தரமல்லூர் T. சிங்காரவேலு (1-வது பாரம்); உத்தரமல்லூர் K. வேதபுரி (5-வது வகுப்பு); திருவத்தூர் A. தம்பிரான் (ஜூனியர் இண்டர்மீடியேட்); ஆரணி M. பரசுராமன் (2-வது பாரம்); உளுந்தூர்பேட்டை V. ராமலிங்கம் (3-வது பாரம்); திருப்பாதிரிப்புலியூர் M. பாலசுப்பிரமணியன் (3-வது பாரம); திருமருகல் S. நமசிவாயன் (6-வது பாரம்); மாப்பிள்ளைகுப்பம் M. முத்துக்கிருஷ்ணன் (ஜூனியர் இண்டர்மீடியேட்); நன்னிலம் N. சதானந்தன் (6-வது பாரம்); பொருள்வைத்தசேரி C. சங்காரவேலு (2-வது பாரம்); இவர்கட்கு அரைச்சம்பளம் கொடுத்துதவ வேண்டியது.

3. சென்ற வருஷம் நமது சங்கத்தில் உபகாரச் சம்பளம் பெற்று மேல் வகுப்புக்கு மாறிய கோயமுத்தூர் M. R. பெருமாளுக்கும் (சீனியர் இண்டர்மீடியேட்); புதிதாய் உபகாரம் நாடிய சென்னை J. தங்கவேல் (ஜூனியர் பி.ஏ.,) இவ்விருவருக்கும் மாதம் 10 ரூபாய் வீதம் உதவி வரவேண்டியது.

4. தென்காசி A. M. சிவராமனிடமிருந்து சரியான மனுவைத் தருவித்து மார்க்கு முதலியன திருப்திதரும் பட்சத்தில் அவனுக்கும் அரைச்சம்பளம் கொடுக்கவேண்டும்.

5. கோயமுத்தூர் சேலம் ஜில்லாக்களிலிருந்து வந்துள்ள மனுக்களில் கோயமுத்தூர் M. R. பெருமாள் சென்ற ஆண்டிலேயே நமது சங்கத்தின் உபகாரச் சம்பளம் பெற்று வந்ததனால் அவனுக்கு இவ்வாண்டிலும் உபகரிக்கத் தீர்மானிக்கப்பட்டதுபோக மீதியுள்ள மனுக்களை நமது முதல் மகாநாட்டு மீதிப்பண வருவாய் கிடைத்தவுடன் பரிசீலனை செய்து தக்க மாணவர்கட்கு உபகரிக்கத் தீர்மானிக்க வேண்டும்.

#### கிளைச்சங்க மனுக்கள்.

6. வடதிருநாகேஸ்வரம் செங்குந்த வாலிபர் சங்கமும், மேலநத்தம் செங்குந்த மகாஜன சங்கமும், பண்டிதூர் செங்குந்தர் சங்கமும் நமது கிளைச்சங்கங்களாக அங்கீகரிக்கப்பட்டன.

ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.,

பி. செ. மாணிக்கவாசக முதலியார்,

அமைச்சர்கள்.

---

## சென்னை திருமயிலை செங்குந்த வாலிபர் சங்கம்.

### கவிச் சக்கரவர்த்தி திருவிழா.

1929ளு செப்டம்பர்மீ 21-ந் தேதி மாலை 5 மணிக்கு திருமயிலாப்பூர் தென்னண்டை மாடவீதியிலுள்ள வனிதையர் சத்திரத்தில், சென்னை நகரபரிபாலன சபைத் தலைவரும், சென்னை ஜில்லாக் கல்விக் கழகத்தின் தலைவருமாகிய திரு. A. ராமசாமி முதலியார், B.A., B.L., F.M.U., அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. அச்சமயம் இலக்கண விளக்கப் பரம்பரை திரு. S. சோமசுந்தர தேசிகரவர்கள் (தமிழ் லெக்சிகன் ஆபீஸ்) "ஒட்டக்கூத்தர்" என்பது பற்றியும், சென்னை கோவிந்தப்பநாய்க்கன் செகண்டரி ஸ்கூல் தலைமை உபாத்தியாயர் திரு. மணி. கோபாலசாமி முதலியார், B.A., L.T., அவர்கள் "சமூகங்களின் அவசியம்" என்பதுபற்றியும் சொற்பெருக்காற்றினர். மற்றைய முழுவிவரமும் அடுத்த இதழில் வெளியிடப்பெறும்.

## செங்கற்பட்டு ஜில்லா

### காஞ்சிபுரம், செங்குந்த வாலிபர் சங்கம் கூத்தர் பெருமான் திருநட்சத்திர விழா.

சுக்கிலவாண்டு ஆவணித்திங்கள் 30-ம் நாள் சனிக்கிழமை மாலை 5-மணிக்குப் பிள்ளையார்பாளயம் மண்டபத் தெருவில் ஸ்தாபித்துள்ள செங்குந்தர் இரவு பாடசாலையில் கவிச் சக்கரவர்த்தியாரின் திருவுருவப் படத்துக்கு அலங்கார தீபார்த்தி தெரிசன வைபவம் நடைபெற்றது. சென்னை திரு. S. குழந்தைவேலு முதலியார், திரு. M. A. கனகசபை முதலியார், திரு. கி. அ. சண்முக முதலியார், திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் முதலிய பெரியார்கள் பலர் விஜயஞ் செய்திருந்தனர். உள்ளூர் நமதினகுரு சுவாமிகள் ஞானத்துதேசிகர், தாலூகாபோர்டு மெம்பர் திரு. ம. த. முருகேச முதலியார், முனிசிபல் கௌன்சிலர் வினைதீர்த்தான் முதலியார், தமிழ் வித்துவான் தில்லை முதலியார், சின்னக்குழந்தை முதலியார், சண்முக முதலியார், திருநாகேசுவரம் சோமசுந்தர முதலியார் முதலிய பிரபலஸ்தர்களும் ஐஸ்கூல் மாணவர்களும் விஜயஞ் செய்திருந்தார்கள்.

செங்குந்தர் இரவு பாடசாலை மாணவர்கள் கடவுள் வணக்கஞ் செய்ததும் சென்னை திரு. S. குழந்தைவேலு முதலியாரவர்கள் தலைமை வகித்து முன்னுரையாக நம்மரபின் பண்டைய பெருமைகளையும் புலவர் பெருமக்களின் சிறப்புக்களையும் தற்காலம் நமது சமூகம் கொண்டொழுக வேண்டிய கடமைகளைப்பற்றியும் நீண்டதோர் சொற்பொழிவாற்றினார்கள். பின் கி. அ. சண்முக முதலியாரவர்கள் "ஒட்டக்கூத்தர் பெருமை" என்பதுபற்றி உலகத்திலே பல வகுப்பாரும் நமது புலவர்பெருமானின் அற்புதப் பாடல்களையும் அவரது பெருமைக் குணங்களையும் புகழ்ந்து பாராட்டுகின்றார்கள் என்றும், குறுகிய கொள்கையுடையார் சிலர் பொருமையால் புலவர் பெருமானின் உண்மைச் சரித்திரங்களின் சில பாகங்களைப் பொய்யாக விநோத ரசமஞ்சரி முதலிய நூல்களில் எழுதியிருப்பது முற்றிலும் உண்மைக்கு மாறுபட்டதென்பதைப் பல அரிய மேற்கோள்களுடன்விளக்கி நீண்டதோர் சொற்பொழிவும், திரு. கனகசபை முதலியாரவர்கள் "புலவர் திலகம்" என்பதுபற்றி நமது சமூகப் புலவர்களாக விளங்கிய, படிக்காசுப் புலவர் இரட்டையர், முதலிய புலவர்களுக்குள்ளே சமூகப பெருமைகளை விளக்கிய பல நூல்களைச் செய்து சமூகத்தொண்டாற்றிய புலவரிவர் என்பது முதலிய பற்பல அரிய விஷயங்களை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எடுத்துக்காட்டி நீண்டதோர் சொற்பொழிவும், திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியாரவர்கள் "நமது கடமை" என்பதுபற்றிப் பேசத் தொடங்கி ஒட்டக்கூத்தர் நமது செங்குந்த சமூகத்திற்குச் செய்துகாட்டிய கடமையினையே நாமும் பின்பற்ற வேண்டுமென்றும் செங்குந்த உலகத்துக்குச் செய்த கடமைகள் செய்யவேண்டிய கடமைகள் பலவா யிருப்பினும் இக்காலத்தில் அதுவும் இவ்வாண்டில் நாம் முக்கியமாகச் செய்யவேண்டிய கடமை "செங்குந்தர் இரண்டாவது மகாநாட்டை நடத்தவேண்டியதே என்றும், அதற்கான ஏற்பாடுகளை இக்கொண்டாட்டத்தின் ஆரம்பமாகக் கொண்டு ஒவ்வொரு செங்குந்தரும் தங்கள் தங்களாலான முயற்சியில் முன்னணியில் நின்று பாடுபட வேண்டுமென்றும் இக்கடமையை யாவரும் கைக்கொண்டு செய்யவேண்டியது முக்கிய கடமை யென்றும் பலவழியிலும் விரித்து நீண்டதோர் சொற்பொழிவும் நிகழ்த்தினார்கள். பின் திரு. தலைவரவர்கள் பின்னுரையாக ஒவ்வொரு விஷயங்களையும் கேட்போருளத்திற் பதியுமாறு அருமையாக எடுத்துக்கூறியபின் திரு. வீ. திருஞானசம்பந்த முதலியாரவர்களால் வந்தனோபசாரங் கூறப்பெற்றுக் கொண்டாட்ட வைபவச் சிறப்பு இரவு 11-மணிக்கு இனிது நிறைவேறியது.

சி. அருணாசலம்,
காரியதரிசி.

---

## தென்னாற்காடு ஜில்லா.

### செங்குந்த மாணவர் சங்கம், உடையார்குடி.

25-9-29 இரவு 8-மணிக்குச் செங்குந்தர் பொது மடாலயத்தில் திரு. சி. கணபதி முதலியார் அவர்களின் தலைமையின் கீழ் சங்கத்தின் 8-வது கூட்டம் கூடியது. அநேக செங்குந்தர்களும் மற்றுமுள்ளவர்களும் ஏராளமாகக் கூடி இருந்தனர். தலைவர் நமது செங்குந்த சமூகத்தினர் தற்போது சீர்கேடடைந்திருப்பதையும் முன்னேற்றமடைய வேண்டியவைகளைப் பற்றியும் தெளிவாகப் பேசி முடித்தபின் திருவாளர்கள் மு. செ. சின்னத்தம்பி முதலியார், அ. பொ. குமாரசாமி முதலியார், சு. மு. பழனி முதலியார், கு. பிச்சைய முதலியார் இவர்களால் முறையே ஒற்றுமை, கல்வி, சங்கம், அன்பு முதலிய சொற்பொழிவுகள் நடத்தப்பட்டபின் திருவாளர்கள் வை. க. ரத்தின முதலியாரும், வை. தாண்டவராய முதலியாரும சீர்திருத்த சம்பந்தமாகப் பேசி முடித்துத் தலைவர் முடிவுரை கூறியதும் கூட்டம் 1-மணிக்கு இனிது நிறைவேறியதென சங்க அமைச்சர் எழுதுகிறார்.

---

## தஞ்சாவூர் ஜில்லா.

### மஞ்சட்கொல்லை, செங்குந்த மகாஜன சங்கம்

"மாசில் சுக்கில வாண்டினில் வாழ்புரட் டாசி
பேசு தேதியீ ரொன்பதிற் பிந்திய பக்கத்
தீச ஞர்துவா தசியினி லேய்கனி வாரம்
தேசு லாமகம் நான்கெனும் பாதமும் திகழ" என்ற

காந்திபுராணச் செய்யுளால் காந்தி பிறந்தநாள் புரட்டாசி 18௳ என்று குறிப்பிட்டிருக்கிறபடியால் தமிழ் நாட்டினரும் 18௳ தான் அவ்விழாக் கொண்டாட வேண்டுமென்று இவ்வூர்ச் செங்குந்த மகாஜன சங்கத்தார் தீர்மானித்து அதன்படி நேற்று (புரட்டாசி 18௳ October 3) வியாழக்கிழமை மாலை ஸ்ரீவெற்றிவேலாயுத சுவாமி ஆலயத்தில் ஸ்ரீகணேச சுப்பிரமணிய மூர்த்தங்களுக்கு விசேஷ அலங்கார அபிஷேக ஆராதனைகள் செய்து, கதர் ஆடை சாத்தி காந்தியடிகள் நாம நக்ஷத்திரங்களுக்கு சகஸ்திர நாமார்ச்சனை செய்து, அடிகள் ஆரோக திடகாத்திரத்துடன் நீடூழிவாழ்ந்து தேசமக்கள் உய்ய வழிகாட்ட வேண்டுமென்று மிக உருக்கமாக பிரார்த்தித்தனர்.

பொதுவாக அன்னிய ஆடையை பகிஷ்கரித்துக் கதர் தரிப்பதென்று உறுதி செய்து கொண்டனர். இவ்வைபவத்தில் மற்றைய வகுப்பினரும் கலந்து ஒத்துழைத்தது பாராட்டத்தக்கது.



### உள்ளிக்கடை செங்குந்தர் சங்கம். ஒட்டக்கூத்தர் திருநாள்.

சுக்கில ஆவணி௴ 30௳ (15-9-29) சனிக்கிழமை மாலை 3½-மணிக்குக் கூத்தர் பெருமானின் திருவுருவப் படத்தைப் புஷ்ப விமானத்தில் அலங்காரம் செய்து, கிராமத்தைச் சுற்றி மேள வாத்தியத்துடனும் விருதுகளுடனும், ஒட்டக்கூத்தருக்கு ஜே. செங்குந்தத் தலைவர்களுக்கு ஜே. என்ற ஆரவாரத்துடன் பவனி வந்து பாவோடித் தோப்பில் எழுந்திரா நின்ற, அகக ஜனக விநாயகரது ஆலயத்தில், இவ்விழாவுக்கென்றே தயார் செய்யப்பெற்ற அழகிய கொட்டகையின் கண் புஷ்ப விமானத்தை இறக்கி வைத்து அகக ஜனக விநாயகர், முருகப்பெருமான், காமாட்சியம்மன், முத்துக்குமாரசுவாமி முதலிய கடவுளர்க்கு மிகச் சிறப்பாக அபிஷேக ஆராதனை நடந்ததும், இச்சங்கத்தின் உப தலைவர் திருவாளர் கு. ஆ. ஆனந்த முதலியாரவர்களது தலைமையின் கீழ் மாபெருங்கூட்டங்கூடியது. அதுகாலை. தமிழ்ப் புலவர், திரு. கு. பெ. கந்தசாமி முதலியாரவர்கள், கூத்தர்பெருமான் திவ்ய சரித்திரத்தை கேட்போர் வியக்குமாறு ஓர் அரிய பிரசங்கமும், காரியதரிசி, P. மாரியப்ப முதலியார் கூத்தரின் வாழ்க்கையும் அவரியற்றிய நூலும் என்பது பற்றி ஓர் சொற்பெருக்கும் செய்தனர். வந்திருந்த அனைவர்க்கும் வந்தனங்கூறிய பின்னர் தலைவரவர்கள் முடிவுரை கூறியதும் வந்திருந்த மஹாஜனங்கள் யாவருக்கும் கடலைச்சுண்டல், தேங்காய், பழம், வெற்றிலை பாக்கு முதலியவைகள் வழங்கி இரவு 7-மணிக்கு கூத்தர் பெருமானுக்கு ஜே, என்னும் ஆரவாரத்துடன் விழா சிறப்பாக நிறைவேறியது எனக் காரியதரிசி எழுதுகிறார்.

### செங்குந்த வாலிபர் சங்கம், உள்ளிக்கடை

1929௵ செப்டம்பர்௴ 3௳ அமாவாசைதினம் மாலை 4-மணிக்கு சென்ற 4-8-29 தீர்மானித்தபடி நெசவுத்தொழிலை விருத்தி திரு. க. கோபால்சாமி முதலியார் அவர்கள் இல்லத்தில் பொதுக்கூட்டமொன்று திரு. மு. சாமிநாத முதலியாரவர்கள் அக்ராசனத்தின்கீழ் கூட்டப்பட்டு கடவுள் வணக்கம் பாடப்பட்டது. திரு. N. G. சாமிநாத முதலியாரவர்கள் ஒற்றுமையைப்பற்றியும், திரு. M. S. சிவகுருநாத முதலியாரவர்கள் பொது விஷயங்களைப் பற்றியும், திரு. வா. சி. முருகைய முதலியாரவர்கள் அதிமதுரம் என்பதைப்பற்றியும், தெய்வபக்தி என்பதைப்பற்றியும் தெளிவாக சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அனைவர்க்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டு சந்தன தாம்பூலம் வழங்கி ஷை சங்கம் இரவு 6½ மணிக்கு இனிது நிறைவேறியது.

1929௵ செப்டம்பர்௴ 15௳ இவ்வூர் பாலசுந்தர விநாயகர் கோவிலுக்குப் பக்கத்திலுள்ள பஜனை மடத்தில் ஷை சங்கம் கூடியது. திரு. வா. சி. முருகைய முதலியாரவர்கள் தலைமை வகிக்க மகாநாட்டுக் கொடியேற்றுப் பாட்டை பாடியபின் கடவுள் வணக்கம் பாடப்பட்டது. திரு. N. G. சாமிநாத முதலியார் அவர்கள் சிவதீக்கை என்பதுபற்றியும், திரு. M. S. சிவகுருநாத முதலியார் அவர்கள் சுகாதாரத்தைப் பற்றியும், திரு. V. S. குமாரசாமி முதலியார் அவர்கள் ஜீவ ஹிம்சையைப்பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். வந்தனோபசாரத்திற்குப்பின் தாம்பூலம் வழங்கப்பட்டு ஷை சங்கம் இனிது நிறைவேறியது.

---

## கோயம்புத்தூர் ஜில்லா.

### கணபதி கிராமம்.

15-8-29 இரவு 9-மணிக்கு காமாக்ஷியம்மன் ஆலயத்தில் திருப்பேரூர் செங்குந்தர் மடாலயத் திருப்பணி சம்பந்தமாய் ஒரு பொதுக்கூட்டம் கூடிற்று. அது சமயம் புதூர் திரு. வடிவேல் முதலியார் அவர்களும், கொளத்துப்பாளையம் திரு. சிதம்பர முதலியார் அவர்களும் ஷை மடாலய கைங்கரிய விஷயமாய் வந்திருந்தனர். இவ்வூர் வாலிப சங்கத்தில் நபர் ஒன்றுக்கு மாதம் 4 அணாவாக வசூலித்துள்ள தொகையில் செலவுபோக மிகுதி அசல் வட்டியுட்பட ரூபா 173-யும் வாலிப சங்கப் பிரசிடெண்டவர்கள் கொடுத்தனர். திரு. மா. ரா. ரத்தினகிரி முதலியார் இருபத்தைந்து ரூபாயும், திரு. சி. ராம முதலியார் பத்து ரூபாயும், திரு. அ. மருதாசல முதலியார் பத்து ரூபாயும் நன்கொடையாக வழங்கினர். இன்னும் அநேக செங்குந்தபிரமுகர்கள் நன்கொடை வழங்குவதாகவும் வாக்களித்துள்ளார்கள் ஷை மடாலயத்தை சுமார் நாலாயிரம் ரூபாயில் திருப்பணி செய்யவேண்டுமென்றும் சென்னையிலுள்ள நமது சங்கத்தினால் நடத்தப்படும் கல்விநிதிச் சீட்டுகளை நமது கிராமத்தில் விற்று அனுப்பவேண்டுமென்றும் தலைச்சங்கக் கட்டணம் ரூபா ஐந்தும் அனுப்பிவிட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பெற்றன.

கீ. நா. ப. கந்தசாமி முதலியார்,
கணபதி கிராமம்.

### செங்குந்தர் முன்னேற்றக் கழகம், முத்திபாளையம்.

இக்கழகத்தின் சார்பாக, 14-9-29-ம் நாள், இரவு 7 மணிக்கு, குளத்துப் பாளையம் விநாயகர் ஆலயத்தில் ஷையூர் திரு. சிதம்பர முதலியாரவர்கள் தலைமையின்கீழ் ஒட்டக்கூத்தர் திருவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

#### நிகழ்ச்சிகள்.

முதலில் தமிழ்மறை ஓதப்பெற்றுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் கூத்தப் பெருமானுர் சரிதத்தை மாணவர், M. R. பெருமாள் உபந்யாசம் செய்தார். உடனே ‘கூத்தப் பெருமானுக்கு ஜே’ என்ற பெருத்த ஆரவாரத்தினிடையே அப்பெருமானாது திருவுருவப்படம் திறந்துவைக்கப்பட்டு ஆராதனை செய்யப்பட்டது. பின்னர் கோவையிலிருந்தெழுந்தருளிய திரு. S. சோமசுந்தரம் பிள்ளை என்னும் வீரசைவ அறிஞரால், ‘கல்வி’ என்ற பொருள் பொதுவாக சாதி முன்னேற்றம், சமய முன்னேற்றம் தேச முன்னேற்றம, சிறப்பாக செங்குந்தர் முன்னேற்றம என்ற பகுப்புகளோடு, தற்கால முறையை அனுசரித்து ஓர் அரும்பெரும் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. ‘தக்கயாகப்பரணி’ என்ற அரிய நூலை நம் தலைச்சங்கத்தார் சீக்கிரம் அச்சேற்றி உலகினர்க்குதவுவர் என்ற பெரு நம்பிக்கையோடு அவர் தம் விரிவுரையை முடித்தார். அதன் பின்னர், மாணவர் P. இராமசாமி ‘சுகாதாரம் என்ற பொருள் பற்றி ஓர் விரிவுரை நிகழ்த்தினுர். பின்னா வந்தனோபசாரத்துடன் இரவு 11 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது என காரியதரிசி எழுதுகிருர்.

**குறிப்பு:**—தக்கயாகப்பரணி தற்போது மஹாமஹோபாதயாய உ. வே. சாமிநாதய்யரவர்களால் அச்சிடப்படுகிறது. விரைவில் வெளிவந்து விடுமென எண்ணுகின்ருேம.—(ப - ர்).

---

### மதுரை ஜில்லா

#### கூத்தர் திருநக்ஷத்திரவிழா.

செங்குந்தர் சங்கம், செங்குந்தர் இளைஞர் சங்கம் இவைகளின் ஆதரவில் 14-4-29உ சனிக்கிழமை இரவு 8-மணிக்குமேல் தல்லாகுளம் செங்குந்தர் விநாயகராலயத்தில் நம்குலப் பெரியார் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தப் பெருமானின் திருநக்ஷத்திரப் பூர்த்தி விழா மிகச் சிறப்புடன் நடத்தப்பட்டது. அதுகாலை மண்டபம் நிறைய செங்குந்தப் பெரியார்களும் மாணவர்களும் குழுமியிருந்தனர்.

முதலில் விநாயகருக்கும் அப்பால் கவிச்சக்கரவர்த்தியாரது திருவுருவப் படத்திற்கும் சோடசோபசார தூபதீப நைவேத்தியாதிகள் யாவும் செய்யப்பட்ட பின் திருவாளர் S. வீரப்ப முதலியாரவர்கள் அவைத் தலைமையின்கீழ் கூட்டம் துவககப்பட்டது. ‘கூத்தர் சரித்திரவரலாறு’ என்பதுபற்றி திருவாளர்கள் P. V. முத்துக்கருப்ப முதலியாரவர்களும், S. மாணிக்கம் அவர்களும் ‘கடவுளும் மக்களும்’ என்பதுபற்றி மாணவர் M. அங்குசாமி அவர்களும், ‘ஒழுக்கம்’ என்பதுபற்றி திருவாளர் V. வீரபத்திரன் அவர்களும் ‘கல்வியின் அவசியம்’ என்பதுபற்றி திருவாளர் S. V. கனகசபை முதலியார் அவர்களும் மாணவர் S. V. வீரப்பன் அவர்களும் மிக்க விரிவாகப் பேசினுர்கள். மாணவர் வீரப்பன் அவர்கள் பேசிய ஒவ்வொன்றும் மிக்க வீரம்பொருந்தியதாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

பின் தலைவரவர்கள் முடிவுரையானதும் வந்திருந்த யாவருக்கும் பொங்கல, பஞ்சாமிர்தம், சந்தனம், தாம்பூலம் வழங்கப்பட்டு வந்தனோபசாரத்துடன் 11-மணிக்குக் கலைந்தது எனக் காரியதரிசி எழுதுகிருர்.

#### செங்குந்த இளைஞர் கழகம்.

நமது கழகத்தின், 2-வது திங்கட் கூட்டம் (23-9-29) திங்களன்று இரவு 7 மணிக்குக் கழகத் தலைவர் அக்கிராசனத்தின்கீழ் கூடியது. திரு. சொக்கலிங்கம் கடவுள் வணக்கம் பாடினுர். பின் நிகழ்ச்சி முறைப்படி “நமது வாசகசாலை”, “புலால்மறுத்தல்”, “இளைஞர் கடமை”, “விடாமுயற்சி”, “கல்வி & சுகாதாரம்” என்னும் அரும்பெரும விஷயங்கள் குறித்து முறையே திருவாளர்கள் முத்துக்கருப்ப முதலியார், மாணிக்கம், M. அங்குசாமி, S. K. குமரன், V. வீரப்பன், முதலியோர்கள் விரிவாகப் பேசினுர்கள். இவ்வுபந்யாசகர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் திருவாளர்கள் S. K. குமரனும், S. V. வீரப்பனுமாவர். திரு. குமரன் மேடையேறிப் பேசினது இதுவே முதல் தடவையாயினும் திறம்படப் பேசினுா. திரு. S. V. வீரப்பன் தக்க மேற்கொள்களுடன் பேசினுர். தலைவர் முடிவுரைக்குப்பின் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் 11-மணிக்கு இனிது கலைந்தது என அமைச்சர் எழுதுகிருர்.

#### மகாத்மா ஜயந்தி

உலகம் போற்றும் உத்தமரும் நம் பாரததேவியின் அருந்தவப் புதல்வருமான ஸ்ரீமகாத்மா காந்தியடிகளின் சஷ்டிபூர்த்திவிழா தல்லாகுளம செங்குந்த இளைஞர் கழகத்தினுதரவில் அக்டோபர்மீ 2உயன்று இரவு 7-மணிக்குக் கழக நிலையத்தில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. முதலில் விநாயகப்பெருமானுக்கு பூஜை நிவேதன முதலான ஆராதனைகள் நடாத்தப்பட்டன. அதுகாலை அங்கு குழுமியிருந்த செங்குந்தர் பல்லோா மகாதமா அடிகள் நீடூழிவாழ இறைவனை வணங்கி வழிபட்டனர். பின்பு ஸ்ரீவல்லசித்த முதலியார் தலைமையின்கீழ் கழகத்தின் விசேஷக் கூட்டம் நடைபெற்றது. கடவுள் வணக்கம் ஸ்ரீ A. சித்துமாணிக்கம் பாடின பின் “காந்தியடிகள் சரித்திரம்”; “காந்தியடிகளும் மனித வாழ்க்கையும்”; “காந்தியின் கொள்கைகள்” என்ற அரும் பொருள்கள் குறித்து ஸ்ரீ M. அங்குசாமி, ஸ்ரீ P. V. முத்துக்கருப்பர், ஸ்ரீ A. சித்துமாணிக்கம் முதலானோர் சொற்பொழிவாற்றினர். தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டம் 10 மணிக்கு இனிது கலைந்தது என காரியதரிசி எழுதுகிருர்.

---



### இராமநாதபுரம் ஜில்லா

#### ஸ்ரீவில்லிபுத்தூர் செங்குந்த வாலிபர் சங்கம்.

13-9-29 மாலை 7-மணிக்கு ஸ்ரீஆனந்த விநாயகர் ஆலயத்தில் ஸ்ரீலஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் தலைமையில் திரு. கி. கு. சிவசுப்பிரமணிய முதலியார் “கல்வி” யென்னும் விஷயத்தைக் குறித்துப் பேசத் தொடங்கி மேல் நாட்டார் தங்கள் சிறுவர்களுக்குச் சேகரித்துவைக்கும் செல்வம் கல்வியே என்றும் நாமும் நமது குலச்சிறுவர்களுக்குக் கல்வியைத்தேடிவைக்க வேண்டுமென்றும் ஏற்புறுத்தித் தக்க உதாரணங்களோடு பேசியபின் அதே விஷயத்தைப் பின்பற்றி திரு. ச. சோமசுந்தர முதலியார் அவர்கள் மேல் நாட்டாரைப்போன்று நாமும் நமது சமூகப் பெண்மணிகளுக்கும் 5 வயது முதல் 11 வயது வரை கல்வியைப் போதிக்க முற்பட்டாலொழிய நமது குலமும் தேசமும் முற்போக்கடையாதென்றும், நமது வாலிபர்கள் இவ்விஷயத்தில் ஊக்கத்தோடு உழைக்கவேண்டுமென்றும், வயது முதிர்ந்த பெரியோர்களை நம்பி வாழ்நாளை வீணுளாக்கக் கூடாதென்றும்; இவ்வுலகம் வாலிப உலகமே என்றும் விரிவாகச் சொற்பொழிவாற்றினர். [illegible] முடிந்ததும் காரியதரிசி [illegible] 11-மணிக்குச் சபை இனிது கலைந்தது.

#### செங்குந்த மகாஜன சங்கம், அருப்புக்கோட்டை.

1929ஆ அக்டோபர்மீ 2உ புதன்கிழமை இரவு 8-மணிக்கு சங்க கட்டடத்தில் திரு. ச. அ. சி. வெயிலுகந்த முதலியாரவர்கள் தலைமையின்கீழ் ஓர் பொதுக்கூட்டம் கூடியது. திரு. வா. ராமசாமி முதலியாரவர்கள் கடவுள் வணக்கம் பாடினுர். தலைவர் முகவுரை கூறியதும் சடம்பந்தளம் திரு. ப. நாராயணத் தேவரவர்கள் ‘கல்வி’ என்னும் பொருள் பற்றி சுமார் ஒருமணி நேரம் சொற்பெருக்கு நிகழ்த்தினுர்கள். பின்னர் மதுரை இராமநாதபுரம் ஜில்லா என். பி. ஒய். பிரசாரக் கமிட்டிக் காரியதரிசி திரு. கருப்பையா அவர்கள் நமது மகாஜனசங்கமும் மாணவர் சகாய அபிவிருத்திச் சீட்டும் என்பதுபற்றிப்பேசத் தொடங்கி மகாஜன சங்கத்தின் [illegible] நிலைமை, கௌரவமாகப் பாடுபடும் [illegible] பெரியார்கள் மாணவர்களுக்காக ஹாஸ்டல் கட்டவும் உபகாரச் சம்பளம் கொடுக்கவும் ஏற்பாடு செய்திருக்கும் லாட்டரிச் சீட்டு முதலியவை சம்பந்தமாக எடுத்துச் சொல்லி நம் நகரத்திலும். நம் ஜில்லாவிலும் ஏராளமான சீட்டுகள் விற்பனைசெய்து அனுப்பவேண்டுமாய்க் கேட்டுக் கொண்டு தம் பிரசங்கத்தை முடித்தார்கள். தலைவர் முடிவுரை கூறியதும் காரியதரிசியவர்கள் வந்தனோபசாரம் கூறித் தலைவரவர்கட்கும் உபந்யாசகர்கட்கும் புஷ்ப ஹாரம் சூட்டி கற்கண்டு தாம்பூலம் வழங்கிய பின் இரவ 10-மணிக்கு சபை இனிது கலைந்தது என காரியதரிசி எழுதுகிருர்.

---

### சிலோன்

#### “மாணவர் கலாவிருத்தி சங்கம்”
#### திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்(இலங்கை)
#### ஒட்டக்கூத்தர் திருநாள்.

மாணவர் கலாவிருத்தி சங்கத்தின் பதின்மூன்றாவது கூட்டம் ஆவணிமீ 30உ (14-9-29) சனிவாரம் மாலை $6\frac{1}{2}$-மணிக்கு உபதலைவர் திரு. இ. சதாசிவ முதலியார் அவர்களின் தலைமையின்கீழ் நடைபெற்றது.

முதலில் பன்னிரண்டாவது கூட்டவரலாறு காரியதரிசியால் வாசிக்கப்பெற்ற பின் திரு. வே. சின்னத்துரை முதலியார் அவர்களால் தெள்ளிய நடையில் ஓர் உபன்னியாசம் நடைபெற்றது. பின்னர், அதி உற்சாகமான கரகோஷங்களுக்கிடையில் திரு. சு. பொன்னுத்துரை முதலியார் அவர்கள் அன்றைய பிரதான விஷயமாகிய ஒட்டக்கூத்தப் பிரானுடைய சரித்திரத்தைச் சுருக்கிச் சுமார் இரண்டுமணி வரை தெளிவாக உபந்யசித்தனர். அதில் மற்றவர்கள் ஒட்டக்கூத்தரைப்பற்றி இகழ்வது பிழையென்பதற்குச் சகுந்த ஆதாரங்கள் காட்டினர்.

பின்பு, திரு. க. சிவஞான முதலியார், திரு. இ. சதாசிவ முதலியார் ஆகிய இருவரும் முன் நிகழ்ந்தவைகளைப்பற்றிக் குறிப்புரை நிகழ்த்தினர். திரு. சி. தம்பிராச முதலியார் அவர்களின் தேவார பாராயணத்துடன் 9-மணிக்குக் கூட்டம் இனிது முடிந்தது.

குறிப்பு:—கூட்டம் திருவாளர் T. D. கந்தையா முதலியார் (பிரசித்த நொத்தாரிஸ், திருநெல்வேலி கிழக்கு) அவர்களின் இல்லத்தில் கூடியது. அதற்கு சைவசமயத்தவர், பிறசமயத்தவர், நம்சாதியர் பிறசாதியர் பலரும் வந்து நிறைந்திருந்தனர். இக்கூட்டத்தைப்பற்றி அறியாதார் பலர் தாங்கள் வராது போனமைக்கு வருந்துகின்றனர். அடுத்தமுறை மிகச் சிறப்பாய் நடைபெறு மென்பது நிச்சயம் என காரியதரிசி எழுதுகிருர்.

---

#### சிக்கல் பொருள்வைத்த சேரி.

இவ்வூர் பிரபல ஆர்டின்டும் சமூகப் பற்று நிறைந்தோருமான வீர. காளிமுத்து அவர்கள் (1-10-29) இரவு 12-மணிக்கு இவ்வுலகம் நீத்தது கேட்டுச் செங்குந்தவாலிபர் சங்கத்தினர் பெரிதும் வருந்துகின்றனர். அன்னுர் ஆன்மா சாந்தி யடையுமாக.

நாகப்ப முதலியார்,
காரியதரிசி,

## மகமை உண்டியல் நன்கொடை வரவு

| சைதாப்பேட்டை. | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| இம்பீரியல் பளையக்காட்டுக் கம்பெனி சித்திரை, வைகாசி .... | 1 | 8 | 0 |
| கிரேட் பளையக்காட்டுக் கம்பெனி ஆனி, ஆடி ... | 3 | 4 | 0 |
| செ. ஆ. வை. காளத்தி முதலியார் மாசி, பங்குனி, சித்திரை வைகாசி, ஆனி, ஆடி .... | 16 | 11 | 6 |
| க. வே. மு. முருகையை முதலியார் ஆடி, ஆவணி .... | 4 | 0 | 0 |
| பெஸ்டு பளையக்காட்டுக் கம்பெனி ஆடி.... | 4 | 2 | 9 |
| உ. அரு. அருணாசல முதலியார் சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி | 2 | 4 | 0 |
| **சென்னை.** | | | |
| தி. ச. ராம. கு. நடேச முதலியார் ஆடி.... | 7 | 8 | 0 |
| ஷை ஆவணி... | 10 | 13 | 3 |
| மதராஸ் பளையக்காட்டு கம்பெனி ஆடி... | 50 | 0 | 0 |
| ஷை ஆவணிக்கு ... | 56 | 0 | 0 |
| S.K.M காயாரோகண முதலியார் ஆடி, ஆவணி... | 12 | 2 | 9 |

| காஞ்சிபுரம். | | | |
|---|---|---|---|
| மதராஸ் பளையக்காட்டுக் கம்பெனி ஆனி .... | 40 | 0 | 0 |
| ஷை ஆடி, ஆவணி ... | 70 | 0 | 0 |
| **கல்விநிதி வரவு.** | | | |
| மலேயாநாடு செய்கோனிலிருந்து ஒரு அன்பர் வரவு .... | 50 | 0 | 0 |
| ஆப்பிரிக்கா ஜோஹேனஸ்பர்க் A. அமிர்தலிங்க முதலியார் .... | 8 | 0 | 0 |
| **கல்யாண நன்கொடை.** | | | |
| வடஆற்காடு ஜில்லா மேல்விருஞ்ஞைபுரம் ஒ. பெரியண்ண முதலியார் அ. கி. முருகேச முதலியார் .... | 1 | 0 | 0 |
| ஷையூர் கொ. மு. சதாசிவ முதலியார், மொட்டையப்ப முதலியார் .... | 1 | 0 | 0 |
| ஷையூர் கோவிந்தப்ப முதலியார், பெரியதம்பி முதலியார் .... | 0 | 8 | 0 |

# செங்குந்தர் கல்விநிதி

இக் கல்விநிதி நமது முதலாவது மகாநாட்டின்கண் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் ஆதரவில் நம்மவர் கல்வி அபிவிருத்திக்காக ஏற்படுத்தப்பட்டது

இதற்கு அன்பர்கள் மகாநாட்டின்கண் நிறைவேறிய தீர்மானத்தின்படி

1. மகமை ஏற்பாடு செய்யவும்,
2. உண்டி வசூலித்து அனுப்பவும்,
3. சடங்குகளில் கட்டணம் செலுத்தவும்,
4. பொதுப் பணங்களிலிருந்து பங்கு தரவும்,
5. நன்கொடை அளிக்கவும்

வேண்டிக்கொள்ளப் பெறுகின்றனர்.

ம சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.,
பி. சே. மாணிக்கவாசக முதலியார்,
*தலைச்சங்க அமைச்சர்கள்.*



## தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த டிரான்ஸ்வால் செங்குந்த சங்கத்தாரால் செங்குந்தர் கல்விநிதிக்கு நன்கொடை வசூலித்து சென்னை தலைச்சங்கத்திற்கு அனுப்பிய விவரம்.

### 1929ஆம் பிப்ரவரி மீ 24உயிலிருந்து ஜூலை மீ 28உ வரையில்

| தஞ்சை ஜில்லாவிலிருந்து வந்துள்ளவர்கள். | ஊர் பெயர். | | ப. | ஷி. | பெ. |
|---|---|---|---|---|---|
| S. V. வீரபத்திர முதலியார் | கீழப்பெரும்பள்ளம் | ... | 1 | 3 | 0 |
| S. பாலசுந்தர முதலியார் | ஆக்கூர் | ... | 1 | 3 | 0 |
| அ. அமிர்தலிங்க முதலியார் | கருவிழுந்தநாதபுரம் | ... | 1 | 3 | 0 |
| கொ. ஐயாசாமி முதலியார் | மேலப்பெரும்பள்ளம் | ... | 1 | 3 | 0 |
| அ. சொக்கலிங்க முதலியார் | கிளையூர் | ... | 1 | 3 | 0 |
| க. முருகையை முதலியார் | காட்டுச்சேரி | ... | 1 | 3 | 0 |
| ஆ. பொன்னுசுவாமி முதலியார் | கருவிழுந்தநாதபுரம் | ... | 1 | 3 | 0 |
| S. அரியபுத்திர முதலியார் | புஞ்சை | ... | 1 | 3 | 0 |
| கோ. வீரபத்திர முதலியார் | செம்பொன்னார்கோவில் | ... | 1 | 3 | 0 |
| A. நாராயணசாமி முதலியார் | மேலப்பாதி | ... | 1 | 3 | 0 |
| M. துரைசுவாமி முதலியார் | மேலப்பெரும்பள்ளம் | ... | 1 | 3 | 0 |
| ஆ. உ. பொன்னுசுவாமி முதலியார் | காட்டுச்சேரி | ... | 1 | 3 | 0 |
| அ. அப்பாசுவாமி முதலியார் | திருச்செம்பொன்பள்ளி | ... | 1 | 3 | 0 |
| ச. இராமு முதலியார் | சீர்காழி | ... | 1 | 3 | 0 |
| ரா. வே. துரைசுவாமி முதலியார் | திருச்செம்பொன்பள்ளி | ... | 1 | 3 | 0 |
| ஆ. சிங்காரவேல் முதலியார் | கருவிழுந்தநாதபுரம் | ... | 0 | 8 | 0 |
| ஆ. வெங்கிடாசல முதலியார் | பொறையார் | ... | 0 | 7 | 9 |
| ஆ. முத்துவேல் முதலியார் | மேலப்பாதி | ... | 0 | 5 | 0 |
| ரா. இலக்ஷுமி அம்மாள் | ஜோஹன்ஸ்பர்க் | .. | 0 | 11 | 0 |
| V. V. இராமசுவாமி நாயுடு | பிரிட்டோரியா | ... | 1 | 1 | 0 |
| மு. கல்லப்ப முதலியார் | அம்மையப்பன் | ... | 0 | 10 | 0 |
| ஆ. உ. பொன்னுசாமி முதலியார் புத்திரியின் விவாகத்திற்காக | | ... | 1 | 0 | 0 |
| சந்தா வசூலின் ஆதாயம் | | ... | 0 | 4 | 0 |
| கோ. வெங்கிடாசல முதலியார் | திருச்செம்பொன்பள்ளி | ... | 1 | 0 | 0 |
| ச. சுப்பிரமணிய முதலியார் | கிளையூர் | ... | 1 | 0 | 0 |
| | ஆகமொத்தம் £ | ... | 24 | 14 | 0 |
| | தென்னிந்திய செங்குந்தர் கல்விநிதிக்கு அனுப்பப்பட்டது £ | ... | 24 | 14 | 0 |

(இதற்கு ரூபாய் 333—8—0)

மேற்சொல்லிய பிரிட்டோரியா ஸ்ரீமான் இராமசுவாமி நாயுடவர்கள் £ 1—1—0-ம் ஸ்ரீமான் ஆ. உ. பொன்னுசாமி முதலியார் செல்வப்புதல்வி கௌரி அம்மையின் விவாகத்தில் £ 1—0—0-ம் நன்கொடை அளித்தமைக்குச் சந்தோஷப்படுவதோடு அன்னார்களின் அன்பு நிறைந்த பரோபகாரத்தை மிகவும் பாராட்டுகின்றோம்.

S. பாலசுந்தர முதலியார்,
கௌரவ காரியதரிசி, டிரான்ஸ்வால் செங்குந்தர் சங்கம்.

# வர்த்தமானங்கள்

### அறுபதாம் ஆண்டு நிறைவு திருமண விழா.

செங்குந்தகுலப் பெரியாரான சோதிடப்பேராசிரியர் காலஞ்சென்ற குஹாலயம் சி. மு. முதலியாரவர்களின் தமையனாரும் பிரபலஸ்தருமான ஸ்ரீமான் சி. பெரியசாமி முதலியாரவர்களின் அறுபதுக்கு அறுபதாம் கல்யாணம் மிக்க சிறப்பாகவும் விமரிசையாகவும் மதுரை திருவாப்புடையார் கோவிலிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நிகழும் சுக்கில ஆண்டு புரட்டாசி மதி 10-ம் நாளன்று (25-9-29) முற்பகலில் நடந்தேறியது. வந்திருந்தாரனைவர்க்கும் அறுசுவையுண்டி அளிக்கப்பெற்றது. இத்திருமணத்திற்குச் செங்குந்த குலத்தவரனைவரும் நகரிலுள்ள பிரமுகர்கள் பலரும் போந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

* * *

திரு. ஹென்ரி போர்டின் தொழிற்சாலையில் எண்பத்தாறுயிரம் பேர் வேலை செய்கின்றனர். தினந்தோறும் 3 லட்சம் மோட்டார் உற்பத்தி செய்யப்படுகின்றன.

* * *

முதன் முதல் தென்னாப்பிரிக்காவிலேயே மனிதன் உற்பத்தியானான் என்று டாக்டர் ப்ரூம் அபிப்பிராயப்படுகிறார்.

* * *

காகித உற்பத்தித்தொழில் முதலில் சீனாவில் கி.மு. இரண்டாவது நூற்றாண்டில் தொடங்கப்பட்டது.

* * *

இராமநாதபுரம் இராஜாவான ஸ்ரீரகு ராஜேஸ்வர நாகநாத சேதுபதி அவர்களுக்கு 19-8-29-ல் இராமநாதபுரத்தில் பட்டாபிஷேகம் நடைபெற்றது.

* * *

### பால்ய விவாகத் தடை மசோதா.

இந்தியா சட்டசபையில், பெண்களின் கலியாண வயது 14 ஆக இருக்கச் சட்டம் ஏற்படுத்த வேண்டுமென்று திருத்தப்பட்ட மசோதாவை ஸ்ரீமான் சாரதா பிரேரேணை செய்தார். இதற்குச் சாதகமாக 67 பேரும், பாதகமாக 14 பேரும் வாக்குக்கொடுத்ததால் இம்மசோதா 23-9-29-ல் நிறைவேற்றப்பட்டது. இது 1930-ம் ஆண்டு எப்ரல் மாதம் முதல் நடைமுறையில் வரும். அரசாங்க சபையிலும் இது அங்கீகரிப்பட்டுள்ளது.

மலேரியா ஜுரம் சம்பந்தமாக ஆராய்ச்சி செய்த எச். டோனல்ட்ராஸ் அவர்களுக்கு இந்திய அரசாங்கத்தார் இருபத்தாறுயிரம் ரூபாய் நன்கொடை தர தீர்மானித்துள்ளனர்.

* * *

உலகத்திலேயே மிகப் பெரிதாகிய அமெரிக்காவிலுள்ள மிஸி ஸிபி என்னும் நதி வருஷத்தில் 43 கோடி டன் மணலைக் கரைத்துச் சமுத்திரத்தில் சேர்க்கிறதாம்.

* * *

பிரஞ்சு அரசாங்கத்தார், நியூயார்க் நகரில் 65 அடுக்குள்ள மாடியொன்று கட்டத் தீர்மானித்துள்ளார்கள் இதற்கு 5 கோடி டாலர் செலவழியுமாம்.

* * *

### சுங்கத் தொல்லை.

### சர்க்கார் யோசனை.

சென்னை மாகாணத்திலுள்ள சுங்கச் சாவடிகளை ஒழித்து விடுவதன் சம்பந்தமான விஷயத்தைச் சர்க்கார் ஆலோசித்து வந்தார்கள். இது சம்பந்தமாக சட்டமியற்றச் சர்க்கார் ஒரு மசோதாவைத் தயாரித்திருப்பதாகத் தெரிகிறது. இந்த மசோதாவை ரெவினியூ இலாகாதார் தற்போது ஆலோசித்து வருகின்றனர்.

* * *

### இந்தியாவின் எதிர்கால திட்டம்

தொழிற்கட்சிக்காரர் இந்தியத் தலைவர்களுடைய பிரதிநிதிகளை அழைத்து அவர்களுடன் ஆலோசித்து இந்தியாவின் எதிர்கால அரசியல் திட்டத்தை நிர்ணயிப்பார்களே ஒழிய, தங்கள் இஷ்டம்போல் ஒரு திட்டத்தைத் தயாரித்து அதனை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று இந்திய தலைவர்களை வற்புறுத்தத் தொழிற்கட்சி சர்க்கார் விரும்பவில்லை யென்றும் சொல்லப்படுகிறது. இந்திய சட்ட சபைகளை 1930-ம் வருடம் எப்ரல்மாத ஆரம்பத்தில் கலைத்து விட வேண்டுமென உத்தரவிட தொழிற்கட்சி சர்க்கார் உத்தேசித்திருப்பதாகவும், இந்திய சட்டசபைத் தலைவருடைய அதிகாரத்தைப் பாதிக்கக்கூடிய முறையில் சட்ட சபை விதிகளை மாற்ற விரும்பவில்லை யென்றும், போல்ஷ்விக் அவசரச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரத் தொழிற்கட்சி சர்க்கார் உத்தேசிக்கவில்லை யென்றும் சொல்லப்பட்ட விஷயம் உண்மை யென்று தெரிகிறது.

* * *



### தாழ்ந்த வகுப்பினர் பிரதிநிதித்துவம்.

சட்டசபைகளில் தேர்தல் மூலமாகப் போதிய பிரதிநிதித்துவம் தாழ்ந்த வகுப்பினருக்குக் கொடுப்பதற்கான ஒரு திட்டத்தைச் சைமன் கமிட்டியார் ஒப்புக்கொள்ளும்படி ஸ்ரீ எம். சி. ராஜா செய்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

* * *

### இரண்டு புத்தகவிலை எட்டு லட்ச ரூபாய்.

ஒரு நாட்டின் கீர்த்திக்கும், நாகரீக வளர்ச்சிக்கும், ஜீவாதாரத்திற்கும் இன்றியமையாதனவாய் விளங்கும் எத்தனை பழம் (எட்டு) பிரதிகளும் ஒன்று. முன் செய்யப்பட்டனவே, பின்னர் செய்வனவற்றிற்கு அடிப்படையாகவும் வன்று கோலாகவுமிருக்கின்றன. நமது முற்காலத்திற்கு எதுவாய்த் தாங்கி நிற்கும் அவற்றை நாம் பொன்னே போல் போற்றுதல் கனி ஏன்று. ஓவியம் தீட்டுவோரும், இலக்கிய நூல் வல்லாரும், கற்பனை கவிசிரேட்டரும் இதை நன்கறிவர்.

சின்னாள் முன்னர் பெயர் பெற்ற பல இங்கிலீஷ் சித்திர புத்தகம் ஒன்று பிரிட்டிஷ் காட்சிசாலைக்கு 80,000 பவுனுக்கு வாங்கப்பட்டிருக்கிறது. அது கி. பி. 1840-ல் இயற்றப்பட்டது. அந்த புத்தகம் வாங்கப்பட்ட அன்றே பெட் போர்டு (Bed ford) துரைமகனார் 15-ம் நூற்றாண்டிலியற்றப்பட்ட மற்றொரு நூலை பிரிட்டிஷ் காட்சி சாலைக்காக (Museum) 33,000 பவுனுக்கு வாங்கியுள்ளார். அதிலும் அதிகமாக விலை வேறெந்த நூலுக்காவது மூலப்பிரதிக்காவது கொடுக்கப்பட்டதில்லை யென்று கூறுகிறார்கள்.

* * *

### சமுத்திர நீர் கரிப்பதேன்.

பூமியின் வழியே நதிகள் செல்லும்போது பூமியிலுள்ள உப்பைச் சேகரித்து சமுத்திரத்தில் கொண்டு சேர்ப்பதால் சமுத்திர நீரில் உப்பு சேர்ந்துகொண்டே வருகிறதாம.

* * *

### பூமிக்குள் நதி.

வட அமெரிக்காவில் பூமிக்குள் இரண்டு மைல் ஆழத்தில் 200 மைல் நீளத் தூரத்திற்கு கலொரடோ என்னும் நதி ஓடிக்கொண்டிருக்கின்றது. அதன் காட்சி பிரமிப்பையும் பயங்கரத்தையும் கொடுக்கத்தக்கதாயிருக்கின்றது.

* * *

### வித்தியாபிவிருத்திக்கு மூலதனம்.

வர். பி. சி. ரே (Ray) என்னும் வங்காள ரசாயண சாஸ்திர நிபுணர் சென்ற 10 ஆண்டுகளாக சம்பாதித்த ஒரு லக்ஷம் ரூபாயை வங்காள பல்கலைக் கழகத்தில் ரசாயண சாஸ்திரத்தில் ஆராய்ச்சி செய்ய முன்வரும் மாணவர் சகாயத்திற்கு உதவுமாறு ஈந்தனர். சென்ற திங்களில் பஞ்சாபில் மகம்மதிய கனவான் ஒருவர் மகம்மதிய மாணவர் கல்வியபிவிருத்திக்காக 4 லக்ஷம் ரூபாய் கொடுத்திருக்கின்றனர் என்று அறிகிறோம். பணக்காரரான பெரியார்கள் இவ்விதப் பொது நலன்களைப்புரிய முன்வருவது நம் நாட்டின் நல்லதிர்ஷ்டத்தையே காண்பிக்கின்றது.

நம் குலத்தார் கல்வியபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்கும், மேம்பாடடைதற்கும் நம்குல தனவந்தர்கள் மனமுவந்து, கல்வியபிவிருத்திக்கான மாணவர்கள் வதிய விடுதியமைப்பதோ உபகாரச் சம்பளமளிக்க மூலதனமாக திரவிய சகாயம் செய்தலோ வேண்டும்.

---

## பதார்த்த குணம்

### வெண்டைக்காய்

இது ஒரு முக்கியமான ஆகாரப் பதார்த்தமாகும். இது தசைகளை மிருதுப்படுத்தக் கூடியது; சிறுநீரை தாராளமாய் வரச் செய்யக் கூடியது; குளிர்ச்சியுள்ளது; வீரிய விருத்தியை உண்டு பண்ணக்கூடியது. ஜுரங்களுக்கு உபயோகமான வஸ்து. தொண்டை ரணம், ஜனனேந்திரியங்கள், மூத்திர அவயவங்கள் இவற்றில் எரிச்சல் ஆகியவைகளைப் போக்கி சுட்ட புண், வலி, சிறுநீர் விடமுடியாமல் சிரமப்படுதல் ஆகிய நோய்கட்குக் குணந்தரவல்லது முக்கியமாய் காட்டப்பட்ட சிதபேதியில் இதன் மிருதுவான பசை அதிக பலன்தரத்தக்கது. இதில் பாஸ்பாரிக் ஆஸிட் இருப்பதால் மூளைக்கு இது தகுந்த ஆகாரப் பதார்த்தமாகும். இதை குழம்பாய்ச் சமைத்துச் சாப்பிடுவது நலம்.

### வெங்காயம்.

இதில் கந்தகம் கலந்திருப்பதால் தேகத்திற்கு ஆரோக்கியந்தரும். கந்தகம் சரீரத்திற்கு அவசியமான பதார்த்தம். அது குறைவு படும் போது ஆகாரமூலம் அதை உட்செலுத்த வேண்டும். லேசில ஜீரணமாகத் தக்கது வெங்காயம். நாம் நல்ல ஆரோக்கியத்தை அனுபவிக்க வேண்டுமானால் தேக சாஸ்திர விதிப்படி வெங்காயம் நமக்கு அவசியமான உணவாக வேண்டும். விருந்து சாப்பிடும்போது பச்சையாகவோ ஊறுகாயாகவோ வெங்காயத்தைக் கடித்துச் சாப்பிட்டால் இரைப்பையைச் செவ்வைப்படுத்தி போதுமான சக்தியைக் கொடுக்கும். இதனை குழம்பாகக் கொதிக்கவைத்தோ, வறுத்தோ, சுண்டியோ சாப்பிடலாம்.

# 'செங்குந்த மித்திரன்' பஞ்சாங்கம்

சுக்கில ஐப்பசி (1929 அக்டோபர்—நவம்பர்) தக்ஷிணாயனம், சரத்ரிது...

| இங்கிலீஷ். | தமிழ். | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | கேசரி (?) | ஜீவன். | வாக்கிய திதி | யோகினி. | விசேட... |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 17 | 1 | வியா | சது 31-30 | உ 21-13 | ஸி 60 | 2 | 1 | | | |
| 18 | 2 | வெ | ○ 28-53 | ரே 20-33 | ஆ 60 | 2 | 1 | சது | தெமே | |
| 19 | 3 | சனி | பிர 25-8 | அ 18-38 | ஸி 60 | 2 | 1 | பௌ | தெற்கு | பௌர்ணமி |
| 20 | 4 | ஞா | துதி 20-23 | பர 15-50 | ஸி 60 | 2 | 1 | பிர | மேற்கு | அன்னாபிஷேகம் |
| 21 | 5 | திங் | திரி 15-8 | கி* 12-20 | ம 12-20 அ | 2 | 1 | துதி | வடமே | |
| அக்டோபர் 22 | 6 | செவ் | சது 9-25 | ரோ 8-35 | அ 8-35 ஸி | 2 | 1 | திரி | வடகிழ | கிருத்திகை |
| 23 | 7 | புத | பஞ் 3-38 | மி 4 38 | ஸி 60 | 2 | 0 | சது | | |
| | | | சஷ் 57-53 | | | | | பஞ் | ஆகாசம் | |
| 24 | 8 | வியா | சப் 52-13 | தி 0-33 | ம 0-38 அ | 2 | 0 | சஷ் | பூமி | |
| | | | | பு 56-48 | | | | சப் | வடக்கு | |
| 25 | 9 | வெ | அஷ் 46-55 | பூ 52-13 | ம 60 | 1 | ½ | | | |
| 26 | 10 | சனி | நவ 31-58 | ஆ 50-13 | ம 50-18 அ | 1 | ½ | அஷ் | தென்கி | |
| 27 | 11 | ஞா | தச 37-38 | ம 47-40 | ம 47-40 ஸி | 1 | ½ | நவ | தெமே | |
| 28 | 12 | திங் | ஏகா 33-58 | பூர 45-53 | ஸி 60 | 1 | ½ | தச | தெற்கு | |
| 29 | 13 | செவ் | துவா 31-3 | உ 44-53 | அ 44-53 ஸி | 0 | ½ | ஏகா | மேற்கு | |
| 30 | 14 | புத | திர 29-5 | அ 44-50 | ம 44-50 ஸி | 0 | ½ | துவா | வடமே | |
| 31 | 15 | வியா | சது 28-15 | ஸி 45-48 | ஸி 45-48 அ | 0 | 0 | திர | வடகிழ | பிரதோஷம் |
| 1 | 16 | வெ | அ● 28-33 | சு 48-3 | ஸி 60 | 0 | 0 | சது | ஆகாசம் | தீபாவளி |
| 2 | 17 | சனி | பிர 30-10 | வி 51-30 | ஸி 60 | 0 | 0 | அமா | பூமி | கேதாரிகவுரி |
| 3 | 18 | ஞா | துதி 33-0 | அ 56-13 | ம 60 | 0 | ½ | பிர | கிழக்கு | விரதம் |
| 4 | 19 | திங் | திரி 37-20 | கே 60 | ஸி 60 | 0 | ½ | துதி | வடக்கு | |
| 5 | 20 | செவ் | சது 42-33 | கே 2-3 | ம 2-3 அ | 0 | ½ | திரி | தென்கி | |
| 6 | 21 | புத | பஞ் 48-30 | மூ 8-50 | ம 8-50 அ | 0 | ½ | சது | தெமே | நாகசதுர்த்தி |
| 7 | 22 | வியா | சஷ் 54-53 | பூ 16-10 | ஸி 60 | 0 | ½ | பஞ் | தெற்கு | |
| 8 | 23 | வெ | சப் 60 | உ 23-38 | ஸி 28-38 ம | 1 | ½ | சஷ் | மேற்கு | கந்தசஷ்டி சூ... |
| 9 | 24 | சனி | சப் 0-50 | தி 30-38 | ஸி 60 | 1 | ½ | சப் | வடமே | சம்மாரம் |
| 10 | 25 | ஞா | அஷ் 6-10 | அ 36-38 | ம 36-38 ஸி | 1 | ½ | அஷ் | வடமே | |
| 11 | 26 | திங் | நவ 10-18 | ச 41-20 | ஸி 41-20 ம | 1 | ½ | நவ | வடகிழ | |
| 12 | 27 | செவ் | தச 12-48 | பூ 65-43 | ம 45-43 அ | 2 | 0 | தச | ஆகாசம் | |
| 13 | 28 | புத | ஏகா 13-25 | உ 45-30 | ஸி 45-30 ம | 2 | 1 | ஏகா | பூமி | |
| 14 | 29 | வியா | துவா 12-10 | ரே 44-48 | ஸி 44-48 அ | 2 | 1 | துவா | கிழக்கு | |
| 15 | 30 | வெ | திர 9-10 | அ 42-38 | அ 42-38 ஸி | 2 | | திர | வடக்கு | பிரதோஷம் |